


கல்கி
ALKI 14-1 973 45 கா



மழைகால நோய்களை அண்டவிடாமல் தடுக்க ஹார்லிக்ஸ்.


“ஹார்லிக்ஸின் ஊட்டம் நோய் எதிர்ப்புச் சக்தியை பெருக்கி, நாள்தோறும் ஆரோக்கியத்தைக் காக்கிறது.”

—இல்லத்தரசி சுசித்ராவின் டாக்டர் கூறுகிறார்



மழை காலத்தில் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருக்கிறது. அடிக்கடி ஏதாவது ஒரு நோய்க்கு நீங்கள் உள்ளாக நேருகிறது. அதனால்தான், சுசித்ரா, இதர வகைகளில் கவனிப்பதுடன், தன்னுடைய குடும்பத்தினருக்கு தினமும் **ஹார்லிக்ஸ்** தந்து அவர்களுக்கு நோய் ஏதும் வராமல் பார்த்துக் கொள்கிறாள்.

சுசித்ராவின் டாக்டர் **ஹார்லிக்ஸையே** சிபாரிசு செய்கிறார். ஏனெனில், நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கு, உடல் நலத்தை நாள் தோறும் காக்கும் ஊட்டமுள்ள சத்து **ஹார்லிக்ஸில்** நிறைந்து இருக்கிறது



முழுமையான ஊட்டம்பெற ஹார்லிக்ஸ்

‘ஹார்லிக்ஸ்’— ஒரு பதிவு பெற்ற ட்ரேட்மார்க்

HMM-3206A-T3



''போளிமி'' ஆடைகளுக்கும் வஸந்தகாலத்திற்கும்
ஒருவித சம்பந்தமும் இல்லையென நீங்கள் நினைத்தால்
அது ''போளிமி'' ஆடைகளை வெகுவாக விரும்புவோருக்கு
பெருத்த ஆச்சரியத்தைத்தான் அளிக்கும்.
போளிமி பிரியர்களின்
மனதை வெகுவாகக் கவருவது
நைலான்-ஜார்ஜெட்,
நைலான்-கிரிம்பு-ஜார்ஜெட்,
ரேயான் ஜார்ஜெட்,
ரேயான்-கிரேப் ரகங்களில் உள்ள
போளிமி புடவைகள்.
போளிமி புடவையை அணியும்
பொழுது வஸந்தகாலத்தின்
நடுவில் குதூகலத்துடன் இருப்ப
தாகவே காணப்படுவீர்கள்.
தி பாம்பே
ஸில்க் மில்ஸ் லிட்.
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், லால்பாக், பம்பாய் 400012
SKYLARK



அழகுத்
தென்றல்
அள்ளி வீசிட
முத்தென ஒளிரும் முகமலர்
பெற்றிட
லக்மே
வேனிஷிங்
க்ரீம்
லக்மே வேனிஷிங் க்ரீம் தடவி, உங்கள் மேனியை பட்டுப் போல் பளபளப்பாகச் செய்யுங்கள். இதைத் தடவிய பின் முகப் பவுடர் பூசுங்கள் அல்லது அப்படியே விட்டுவிடுங்கள். எவ்வகையில் நோக்கினும் இந்த க்ரீம் மென்மையானது. இது சருமத்தின் மீதுள்ள எண்ணெய்ப் பசையை நீக்கி, உங்கள் சருமம் புதுமெருகு பெற்று, கறையின்றி துலங்க உதவுகிறது. உங்கள் முகம் எண்ணெய்ப் பசையின்றி எழிலோங்கி விளங்க, இதைக் காலையில் தடவுங்கள். உங்கள் மேனி எடுப்புடன் விளங்க, இதை மீண்டும் மாலையில் தடவுங்கள். உங்கள் முகமலர் என்றுமே முத்தென ஒளிர்ந்திட, லக்மேயின் சிறு ஜாடியை உங்கள் கைப்பையில் வைத்திருங்கள்.
லக்மே வேனிஷிங் க்ரீம்.
3 வசதியான சைஸ்களில்.
L
Lakme

LV/ta

பொருளடக்கம்

பிரமாதீச, புரட்டாசி 28 — அக். 14, 1973

மேலட்டை:

''போகன்வில்லா மங்கை''

வண்ணப் படம்: ரவீந்திர பல்லா

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே





தமிழக அரசு கொலு!
வாழ்க! வாழ்க!
"வாங்க, கொலு பார்க்க வந்தீங்களா? இது புதுமாடல் போலீஸ் பொம்மை; அடக்குமுறைன்னு பேரு..."
"உடைஞ்ச பொம்மை வைக்கக்கூடாதும்னு சாஸ்திரம் சொல்லுவாங்க; இவருதான் என்ன சாதிச்சுட்டார் நமக்கு?..."
"பனை மரத்தடியில் உட்கார்ந்திருக்-கான்னு பார்க்க-றீங்களா?.... பாலு தாங்க! 'பார்' பொம்மை வேறே இருக்கு!..."
"என்ன, அண்ணாவா, அவரு இல்லாமலா? இந்த பொம்மை அதை மறைச்சிருக்கு, அவ்வளவுதான்!"
"அடடடே! கிரேக்டா சொல்லிட்டீங்-களே! மாநில சுயாட்சியேதான்!..."
"நல்ல வேளை, பொழுதோட வந்து நம்ம கொலுவைப் பார்த்துவிட்டுக் கிளம்பிட்டீங்க! இதைய 'பல்ப்' மாட்டி-யிருக்கிறதை தவிர மின் இணைப்பு தரல!"

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 33 : இதழ் 11

ஒரு சக்கரவர்த்தியை இழந்தோம்!

கற்பக விருட்சம் பட்டு விழுந்து விட்டதுபோல் பிரம்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். சங்கீதத் திரிமூர்த்தி எனும் தியாகையர் — தீக்ஷிதர் — சியாம சாஸ்திரிகளுக்குச் சரி நிகர் சமானமாக வைத்துப் பேசத்தக்க அந்தஸ்தில் அறுபதாண்டுகளாக அருந் தமிழில் அற்புதப் பாடல்களை வாரி வழங்கி வந்த கற்பக விருட்சம் ஸ்ரீ சிவன். தூய இசையில் வேரோடி, மொழியின்ப நீரை வேரால் பருகி, இறை உணர்வு என்கிற சூரிய வெப்பத்தில் கப்பும் கிளையுமாக வளர்ந்த விருட்சம் அது.

சாகித்ய சகாப்தத்தில் ஒரு பொற்காலம் முடிந்தது. சாகித்யகர்த்தர், வாக்கேயகாரர் என்பதன் சகல லட்சணங்களும் பரிபூரணமாக அமைந்து தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருமை கொண்டவர் ஸ்ரீ சிவன் அவர்கள். நீலகண்ட சிவன், கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர் போன்ற சிம்மங்களிடமிருந்து அவர் பெற்ற சங்கீதத் தேர்ச்சி அபாரமானது. ராக, லய மர்மங்களெல்லாம் அவர் முன் தாமாக மடலவிழ்ந்தன. இசை நுணுக்கப் பண்டிதர் மட்டுமல்ல அவர். தாமே உயிரினை உருக்கி, கேட்கிற உயிர்களையும் உருக்குமாறு பாடவல்லவர். அது வெறும் வாய்ப்பாட்டல்ல — அந்தராத்மாவின் கானம். பாடல் என்பது அவருக்கு மூச்சுவிடுகிற ஓர் உயிர்ப் பண்டமாக இருந்தது. இதனால்தான் அவரது பாடல்களில் மொழியானது அநாயாசலாகவத்துடன், மாதுரியத்துடன், எளிமையுடன், ஜீவனுடன் கலை நயம் கொழிக்க அமைந்தது. மொழி வெறிக்கு இங்கு இடமே இல்லை; இலக்கண நெருடலும் இல்லை. பள்ளத்தில் சரளமாக விழுகிற வெள்ளமாக வார்த்தைகள் எழும்பி உள்ளத்தில் நிரம்பின. இசையும் மொழியும் இப்படி இணைந்ததற்குக் காரணம் அவற்றுள் இழையோடிய தெய்வ பக்திதான். பக்தியைவிட இயல்பான ஒன்று ஜீவாத்மாவுக்கு வேறு உண்டோ? ஆனாலும் நம்மில் பலர் அதைச் செயற்கையாகச் செய்து கொள்ளவேண்டியிருக்கிறது. சிவன் செய்த பாக்கியம் — தமிழ் செய்த பேறு — ரசிகர்களாகிய நாம் செய்த தவம் — அவர் இயல்பாகவே பசுவுக்கு ஏங்கும் கன்றாக ஈசுவர சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தார். இசையும், மொழியும், பக்தியும் கலந்த திரிவேணியாக அமுத கீதங்களும் இரண்டாயிரத்துக்கு மேல் உருவாகின. ஒன்றை எண்ணுவது, எண்ணத்தைப் பாடலாகப் பண்ணுவது, அதற்குப் பண்ணும் தாளமும் அமைத்துத் தருவது என்று மூன்று வேறு காரியங்களாக இல்லாமல், பிறக்கிறபோதே சகல அங்கங்களுடன் தோன்றும் குழந்தை போல், சிந்தனையும் சொல்லும் சங்கீதமும் சந்தமும் ஒன்றாகவே பின்னிப் பிணைந்து பிறந்தன. தமிழிசைத் துறையை வளப்படுத்திய தலைமகன் ஸ்ரீ சிவன் என்று தயங்காமல் கூறலாம்.

சிவனுக்குக் கிடைத்த ஒரு பெரிய நிறைவு — தமது ஜீவதசையிலேயே மகா வித்வான்கள் உட்பட அனைவரும் தம்முடைய கிருதிகளை நாடெங்கிலும்



(ஏன், உலகெங்கிலும் கூட) பிரசாரம் செய்வதைக் கண்டார். அதுமட்டுமல்ல. இன்று திரைப்படத்துறையில் அசங்கியமான உட்பொருளோடும், டப்பா மெட்டுக்களிலும் அமைந்த பாடல்கள் எப்படி வெகுஜனப் பிரசித்தி அடைந்துள்ளனவோ, இதே அளவுக்குச் சகல மக்களின் நாவிலும் நல்ல கர்நாடக ராகங்களில் இலக்கிய ரசமுள்ள பாடல்களை நடமாடச் செய்தார் ஸ்ரீ சிவன், சினிமா உலகில் ஈடுபட்டிருந்த காலத்தில்.

இந்த நிறைவோடு இறைவன் பணியிலும் நிறைவு கண்டார். ஆதியில் ஊர் ஊராக சிவ பஜனை செய்து ராமையா என்கிற இயற் பெயரை 'சிவன்' என்றே ஆக்கிக்கொண்ட அறுபத்திநாலாவது நாயனர் அவர். சிவஸ்வரூபமான ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களால் ''சிவபுண்யகான மணி'' என்று விருது சூட்டப் பெற்ற புண்ணியசாலி. சென்ற தநூர் மாதத்தின் போதுகூடக் கபாலீச்சரத்தைச் சுற்றித் தமது தள்ளாத வயதிலும் பக்தி தளராமல் பஜனை செய்து கரைந்தார். இறைவனின் பெருமையை உணர்ந்ததாலேயே தம்மைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளத் தெரியாமல் விநய வடிவமாக வாழ்ந்தார்.

குசேலராக நடித்த சிவன், குசேலர் போலவே தனவசதி அதிகம் பெற்றிருக்கவில்லை. ஆயினும் மியூஸிக் அகாடெமி, தமிழிசைச் சங்கம், கலாக்ஷேத்திரம் போன்ற நிறுவனங்கள் நம் காலத்தின் முதற்பெரும் கலைஞருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்தன. பண விஷயம் ஒரு புறமிருக்க, மன விஷயத்தில் அவர் குசேலர் போலவே அகந்தை, இறுமாப்பு இவை அணுவும் இன்றி எளியவராக வாழ்ந்தார். ஆனால் இந்த எளியவர் வாஸ்தவத்தில் ஒரு சக்கரவர்த்தியாகவே இருந்தவர். பாரத சுதந்திரத்துக்கென சக்கரவர்த்தியாக வந்த காந்தியடிகள் எப்படி எளியவராகவே இருந்தாரோ, அப்படியே சாகித்திய உலகுக்குச் சக்கரவர்த்தியாக வந்த எளியவர் இவர். மயிலைக் கற்பகாம்பிகையின் திருவடி நிழலை நவராத்திரிப் புண்ணிய காலத்தில் சென்றடைந்துவிட்டது இந்தக் காட்சிக்கெளிய கற்பக விருட்சம். தியாகையர் முதலிய இசைமகனியர்கள் மறைந்த போதிலும் அவர்களது ஜீவசாரமான கிருதிகள் இன்னமும் பாரெங்கும் பரவி வருவது போல் பாபநாசம் சிவனின் பாடல்கள் இனியும் நாள்தோறும் பாபத்தை நசிக்கச் செய்து, சிவம் பெருக்குமாக!

தமிழ் நாட்டிலே...

தீரன்

தென்காசி கலவரம்

தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 'தென்காசி' நகரத்தில் சென்ற மாத இறுதியில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. தென்காசி விசுவநாதர் கோயிலுக்கு அருகில் இருக்கும் பிள்ளையார் கோயிலின் முன்பாகப் போடப்பட்டிருந்த பந்தல் சிலரால் விஷமத்தனமான முறையில் கொளுத்தப்பட்டிருக்கிறது. கோயில் கொளுத்தப்பட்டதும் நகரில் பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு வாரத்துக்குப் போலீஸார் 144 தடை உத்தரவு போட்டும், இரு வகுப்பினரிடையே சமாதானம் நிலவுவதற்காக நகரின் 'முக்கிய பிரமுகர்கள் கமிட்டி' ஒன்றை நியமித்தும் நிலைமையைச் சமாளிக்க முயன்றிருக்கிறார்கள்.


கோயில்களுக்கு எதிராக எந்தக் காரியத்தைச் செய்தாலும் — இப்போதுள்ள அரசாங்கம் தலையிடாது என்ற எண்ணத்திலோ, அல்லது தலையிட்டாலும் அது தங்களுக்குச் சாதகமாகவே இருக்கும் என்ற எண்ணத்திலோ யாரும் எதையும் செய்துவிடுகிறார்கள். இதில் அரசியல் வேறு குறுக்கிட்டுவிடுகிறது. எந்த மதத்தினரின் ஆலயமானாலும் ஆலயங்களைக் கொளுத்துவது என்கிற அளவு துணிவது சமூக விரோதமான காரியமாகவே கருதப்பட வேண்டும்.

சினிமா ஆசை


'சினிமாவில் நடிக்க வாய்ப்பு — அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர். ரூ. 50 முன் பணத்துடன் உடனே விண்ணப்பிக்கவும்' என்று விளம்பரம் செய்ததன் மூலம் சுமார் இருநூறு பேர்களிடமிருந்து விண்ணப்பங்களையும் ரூபாய் பத்தாயிரத்தையும் சேர்த்துவிட்ட பி.யூ.சி. பாஸ் செய்யாத ஒரு நபரைப் பற்றிய விவரங்கள் மிகவும் சுவாரசியமானவை.

விண்ணப்பம் செய்திருந்த இருநூறு பேருக்கும் முதலில் செப்டம்பர் 16ந் தேதி பேட்டிக்கு நேரில் வரச் சொல்லிக் கடிதங்கள் பறந்தன. பின்னர் அதை 26ந் தேதியாக மாற்றியிருப்பதாய் மறு கடிதங்களும் அனுப்பப்பட்டன.

இறுதியில் படத்தின் ஆரம்ப விழாவுக்கான அழைப்பிதழ்களை அச்சிட்டு அனுப்பப்பட்டு விட்டன. தமிழ்நாடு கவர்னரின் தலைமையில் தமிழக மின்சாரத்துறை அமைச்சரின் பெயரும், வேறு சில பிரபல நடிகர்களின் பெயர்களும்கூட 'அந்த ஆரம்ப



ஹோட்டல் அமெரிக்கா
சாப்பாடு தயார்
MEALS READY
சை! அந்த ஹோட்டலிலே போய் எவன் சாப்பாடு கேட்பான்!... அதான் அங்கேயிருந்து நீங்க வாங்கி வந்திருக்கும் 'காரியர்' மீல்ஸைத் தரேங்கறீங்களா! ரொம்ப சந்தோஷம்!...
கோதுமை உதவி
நரேந்திரதேவ்



டில்லியில் பகல் கொள்ளை!
ஐயய்யோ! என்ன பண்ணுவேன்! இதைத் தடுக்க முடியலியே!
சவான்
விலைவாசி உயர்வு
மக்கள் சேமிப்பு நிதி
பணவீக்கம்

விழாவில் கலந்து கொள்வார்கள்' என்று குறிக்கப்பட்டிருந்ததாம். விண்ணப்பங்களையும் ஐம்பது ரூபாய் முன் பணத்தையும் அனுப்பிய அப்பாவிகள் இருநூறு பேரும் அந்த ஆரம்ப விழா அழைப்பிதழில் படப்பிடிப்புக்குப் பூஜை போடும் இடமாகக் குறிப்பிட்டிருந்த ஸ்டூடியோவுக்குப் போயிருக்கிறார்கள். ஸ்டூடியோ காவல்காரர் அவர்களை வாசலிலேயே தடுத்து நிறுத்திவிட்டார். விசாரித்ததில் அந்த ஸ்டூடியோவில் அப்படி எதுவும் ஆரம்ப விழா நடக்க ஏற்பாடாகியிருக்கவில்லை என்று தெரிந்தது. ஆந்திரா, கேரளா, மைசூர் போன்ற வேறு மாநிலங்களிலிருந்துகூட நிறையப் பயணச் செலவு செய்து கொண்டு இந்த விழாவுக்காகச் சென்னை வந்தவர்கள் ஏமாற்றப்பட்டபின்பே இந்த ஆரம்பவிழா ஏற்பாட்டின் கதாநாயகனை பி.யூ.ஸி. பெயிலான திண்டிவனம் பரமேசுவரனைப் போலீஸார் தேடிப் பிடித்துக் கைது செய்திருக்கிறார்கள். பி.யூ. ஸி.யில் தான் பெயில் என்றால் முதல் மோசடியிலும் பெயில்தானா ?

46 வருடத் தாமதம்

நாற்பத்தாறு ஆண்டும் எட்டு மாதங்களும் மூன்று நாட்களும் ஆனபின் ஏறக்குறைய ஒரு பொன் விழாக் கொண்டாட வேண்டிய கால அளவு தாமதத்துடன் ஒரு தபால் கார்டு காலந் தாழ்த்திக் கிடைத்திருக்கிறது. 1927ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ந் தேதியன்று திருநெல்வேலியிலிருந்து தபாலில் சேர்க்கப்பட்ட ஒரு கார்டு விழுப்புரத்தில் இருந்த ரயில்வே கண்டிராக்டர் ஒருவருக்கு 1973ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ந் தேதி டெலிவரி செய்யப்பட்டிருக்கிறது. விலாசதாரரான ரயில்வே கண்டிராக்டரோ இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்பே இறந்து போய் விட்டாராம். அவர் இறந்து இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பின்பு வந்து சேர்ந்த தபால் கார்டை அவருடைய மகன் பெற்றுக் கொண்டாராம்.

காந்தி ஜெயந்தி விழாக்கள்

இதற்கு முன்பு எந்த ஆண்டிலும் இருந்ததைவிட இந்த ஆண்டு காந்தி ஜெயந்தி விழாக்கள் தமிழ் நாட்டின் தலைநகரிலும், பிற பகுதிகளிலும் மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் காந்தி சிலைகளை அலங்கரித்து மாலை சூட்டியிருந்தார்கள். கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் ஒரு பெரிய காந்தீயத் திருவிழாவே நடந்தது. சென்னையில் உள்ள இராமலிங்கர் பணி மன்றம் வழக்கம் போல் காந்தி, வள்ளலார், வள்ளுவர் ஆகியவர்களுடைய விழாக்களை ஒன்றாக இணைத்து முப்பெரும் விழாவாகக் கொண்டாடியது. காந்தீயக் கருத்தரங்குகள், கவியரங்கங்கள், தத்துவ விளக்கங்கள் எல்லாம் சிறு சிறு கிராமங்கள் முதல், பெரிய பெரிய நகரங்கள் வரை எல்லா இடங்களிலும் நன்றாக நடைபெற்றன. காந்தி ஜயந்திக்கு மறு நாள் ஸ்தாபன காங்கிரஸ் நடத்திய விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், நெசவாளிகள் விவசாயிகள் பிரச்னை தீரவும், பூரண மதுவிலக்குக் கோரியும் நடத்திய மறியல்களைக் காந்தி சிலைகளுக்கு மாலை அணிவித்த பின்னரே தொடங்கினார்கள். நாடு இன்றிருக்கும் நிலையில் நல்லவர்கள் எல்லோரும் காந்தியை நினைப்பதிலும், புரிந்து கொள்வதிலும் மனச்சாந்தி அடைய முடியும் என்பதையே காட்டுகிறது. ஆனால் இப்படி ஒரு நாள் அல்லது ஒரு வாரம் மட்டும் காந்தியை நினைத்துவிட்டு வருடத்தின் மற்ற நாட்களில் மறந்துவிடாமல் காந்தீயக் கொள்கைகளை என்றும் கடைப்பிடிக்கவும், போற்றவும் வேண்டும். அதுவே காந்தியடிகளுக்கு மக்கள் செய்யும் மரியாதையாக இருக்கும்.

தெருப் பெருக்கு விழா

'அமைச்சர்கள் சீரணிப் படையினருடன் சேர்ந்து தெருப் பெருக்கிச் சுத்தம் செய்தார்கள்' 'நகரத் துப்புரவுப் பணியை அமைச்சரே முன் நின்று தொடங்கினார்'— என்றெல்லாம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் செய்திகளும், தெருப் பெருக்கும் கோலத்தில் அமைச்சரின் புகைப்படங்களும் வருகின்றன. அமைச்சர் வராத நாட்களிலும் நகரின் தெருக்கள் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதும் அமைச்சர் வராத தெருக்களின் நிலைமை பற்றியும்தான் நம்முடைய கவலை. ஒருவேளை அமைச்சர்களை தெருக்களைப் பிரித்துக் கொண்டு நகரின் எல்லாத் தெருக்களுக்கும் துப்புரவுப் பணிக்கு வருவதாய் அறிவித்தாலே தெருக்கள் துப்புரவாகி விடுமோ என்னவோ ?

கறுப்புச் சட்டை மகாநாடு

மதுரையில் நடந்த கருஞ்சட்டைப் படை மகாநாட்டில் மீண்டும் 'சுதந்திரத் தமிழ் நாடு' கூக்குரல் முழக்கப்பட்டிருக்கிறது. இந்த மகாநாட்டுக்கு முன்னால் கோயில்கள் நிறைந்த மதுரை நகரின் வீதிகளில் கடவுளர் படங்களைச் செருப்பால் அடித்தபடியும் — முருகப் பெருமானின் வேலாயுதத்தைச் செருப்பு மாலையிட்டு எடுத்துச் சென்றும் ஊர்வலம் ஒன்றும் நடத்தியிருக்கிறார்கள். இந்த ஊர்வலத்துக்குக் கோயில் யானை ஒட்டகங்கள் தாராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன. யானை, யானைப் பாகர் ஆகியோருடைய விபூதிப் பூச்சுக்கள் அழிக்கப்பட்டதாகவும் சில பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. சேலத்தில் முன்பு இதே போல் ஓர் ஊர்வலம் நடந்தபோது 'அரசுக்குத் தெரியாமல் நடந்தது — இனி அப்படிக் கடவுள் அவமதிப்பு நடக்காது' என்று சமாதானம் கூறப்பட்டது. மீண்டும் மதுரையில் அதே போல் நடந்திருக்கிறது. போலீஸார் முன்னிலையிலேயே நடந்திருக்கிறது' இலட்சக்கணக்கான ஆஸ்திகர்கள் மனம் குமுறும்படி இது நடந்திருப்பதற்கு அரசின் பதில் என்ன?

எந்த ஜனநாயக சமூகத்திலும் பிறரைப் புண்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. இந்தக்

கறுப்புச் சட்டை மகாநாட்டில், 'சுதந்திரத் தமிழ் நாடு அடையச் சிறை புகவும் தயார்' என்று மதுரை மேயர் முத்து முழங்கியிருக்கிறார்.

மகாநாட்டை ஒட்டி மதுரையில் திறக்கப்பட்ட திரு ஈ. வெ.ராவின் சிலைக்கு மாலை போட்டு மகிழ்ந்துள்ள பகுத்தறிவாளர் பெருமக்கள் தங்கள் தலைவரின் சிலைக்கு மாலை போடுவதும் வணங்குவதும் எப்படித் தங்கள் உரிமையோ, அப்படியே பக்தர்களின் பூஜை, வணக்க முறைகளைப் பக்தர்களும் கடவுள்களிடம் ஏற்படுத்திக் கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ளாதது அநாகரிகமே.

பூரண மதுவிலக்கு

காந்தி ஜயந்தியை அடுத்துத் தமிழ்நாட்டு முதல் அமைச்சரிடம் இருந்து ஒரு நல்ல செய்தி மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது..... ''அடுத்த ஆண்டு முதல் தமிழ் நாட்டில் பூரண மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டு வரப்படும். இந்த ஆண்டு கள்ளுக்கடையை மூடுகிறோம். அடுத்த ஆண்டு சாராயக் கடையை மூடுவோம். பிறகு மதுக்கடைகளே இல்லாத பூரண மதுவிலக்கு வரும். குடிப்பதற்கென்று பெர்மிட்கூடக் கிடைக்காது. 'பெர்மிட்'டைக் காட்டிக்கூட - யாரும் எங்கும் மதுபானம் வாங்க முடியாது. 'நெஞ்சு வலி' 'இருதயக் கோளாறு' என்று சாக்குப் போக்குக் காரணம் காட்டிக்கூட யாரும் மதுபான பெர்மிட் பெறமுடியாது'' என்று திருவான்மியூரில் ஒரு கூட்டத்தில் பேசும் போது திரு கருணாநிதி கூறியிருப்பதை வரவேற்கிறோம். மனமாரப் பாராட்டுகிறோம்.

அமைதியான போராட்டம்

மத்திய மாநில அரசுகளை எதிர்த்து ஸ்தாபன காங்கிரஸ்நடத்தியமறியலின் முதல் நாளான 3ந் தேதியே எல்லா ஊர்களிலும் பல்லாயிரம் பேர் கைதாகி யிருக்கின்றனர். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு பி. இராமச்சந்திரன் உட்படச் சென்னையில் பல முக்கியமானவர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றிருக்கிறார்கள். நிறைமாத கர்ப்பிணிகளும், பெண்களும், திருமணமான தம்பதிகளும்கூட இந்தப் போரில் தயங்காமல் கலந்து கொண்டு சிறை சென்றிருப்பது காங்கிரஸின் தொண்டர்களிடையே இருக்கும் தளராத ஊக்கத்தையும், உறுதியையும் காட்டுகிறது. போராட்டத்தின் பண்பையும், அமைதியான ஒழுங்கான பாங்கையும் தமிழக முதல்வர் கருணாநிதியே பாராட்டிப் பேசியிருக்கிறார். ஒரு வார காலத்துக்கு நடக்கும் இந்த அறப் போராட்டத்தின் மூலம் ஸ்தாபன காங்கிரஸ் தன்னுடைய கட்சி ஊழியர்களிடையே நம்பிக்கையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம்.

கமிஷனர் அறிக்கை

''**வெ**ளியூர்களிலிருந்தும் நகரின் சுற்றுப்புறங்களிலும் இருந்து லாரிகளில் அளவுகடந்து ஆட்கள் ஏறிக் கொண்டு வருவது பாதுகாப்புக் குறைவானது. லாரிகள் சரக்கு ஏற்றுவதற்கே உரியவை. லாரிகளில் டிரைவர், கிளீனர் தவிர வேறு அதிக ஆட்கள் ஏறுவது சட்டப்படி தண்டனைக்கு உரியது'' என்று 30—9—73 அன்று அ.தி.மு.க. ஊர்வலத்துக்கு லாரிகளில் வந்த வெளியூர் ஆட்களை எச்சரித்துப் போலீஸ் கமிஷனர் அறிக்கை விட்டிருந்தார். நியாயம். ஒப்புக் கொள்கிறோம். சில அ.தி.மு.க. தொண்டர்கள் அடங்கிய லாரிகள் நகருக்கு வெளியே தடுக்கப்பட்டதாகவும் அறிகிறோம். அதுவும் நியாயமே.

ஒரு கண்ணுக்கு வெண்ணெய், மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பு என்றில்லாமல் எந்தக் கட்சிக்காரர் ஆனாலும் லாரிகளில் ஏறி வந்தால் சட்டம் வளைந்துவிடாமல் தடுத்து நிறுத்தித் தண்டனை தர வேண்டும்.

ராஜாஜி சிந்தனை

கல்வி கற்ற பெண், கல்வியறிவு பெற்ற ஒரு தாயார் ஆகிறாள். ஆனால் படித்த இளைஞர்களுடைய நிலை அப்படி அல்ல. இளைஞர்களுக்கு அளிக்கப்படும் கல்வி முடிவாக யாரோ ஒரு முதலாளிக்கோ அல்லது ஒரு சர்க்கார் இலாகாவுக்கோதான் பயன்படுகிறது. ஆனால் படித்த பெண், தன்னுடைய சொந்த வீட்டிலேயே ஒரு சிறு பள்ளிக்கூடத்தை அமைத்தவளாகிறாள். பெண்களுக்கு நாம் அளிக்கும் கல்வி ஒரு நல்ல முதலீடு ஆகும். கல்வி கற்ற இளைஞர்கள் தங்கள் குழந்தைகளுடைய கல்விக்காகச் சிறிது நேரத்தை ஒதுக்குவதைத் தங்களுடைய கடமையாகச் செய்துகொள்ள வேண்டும். ஆண்களில் சிலர் காரியாலயத்தில் நல்ல பிள்ளைகளாகவும், விசுவாசமாக உழைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் வீட்டை அடைந்ததும் பொறுமையை யிழந்து எல்லோருடனும் சண்டை போடுகிறார்கள். உங்களுடைய கல்வி பலன்தர வேண்டுமென்றால் உங்கள் குழந்தையை வளர்ப்பதை மதக் கடமை போல் எண்ணிச் சிரத்தையுடன் கவனிக்க வேண்டும். இது ஓரளவுக்குப் பள்ளி ஆசிரியரின் சிரமத்தைக் குறைக்கும். குழந்தைகளுக்கு நீங்களே கற்றுத் தருவதன் மூலம் மேலும் சில விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம். வேறு ஒருவருக்குச் சொல்லித் தர முற்படும்போது நீங்களே பல விஷயங்களைக் கற்றுக் கொள்கிறீர்கள். உங்களுடைய குழந்தைகளின் கல்விப் பொறுப்பு முழுவதையும் ஆசிரியரிடமே ஒப்படைத்து விடாதீர்கள்.

"அரனை மறவேல்" "திருமாலுக்கு அடிமை செய்"

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

எரிந்த மரம் கரியாகிறது. அந்தக் கரியும் முதிர்ந்தால் வைரப் பளிங்காக ஆகிறது. உலகம் இருந்த போதிலும் அதன் மாயை நம்மைத் தொடாமல் எல்லாம் விஷ்ணு மயமாகத் தெரிகிறபோது, நம் அஞ்ஞானம் எரிந்து கரியாகப் போன நிலையில் இருக்கிறோம். திருமாலும் இதனாலேயே கருமாலாக இருக்கிறார். கரி வைரமாகிறது போன்ற நிலைக்கு — ஸ்படிகமாகிற நிலைக்கு — சுத்த ஸ்படிக சங்காசமான பரமேசுவரன் தெய்வமாக இருக்கிறார். கரியும் வைரமும் வேறு வேறு அல்ல. இதுவேதான் அதுவாயிருக்கிறது. மகாவிஷ்ணுவும் பரமேசுவரனும் ஒருத்தரேதான். உலகத்தின் ஆசாபாசங்கள், இவற்றுக்குக் காரணமான மாயை ஆகியவற்றின் நானாவிதமான வர்ண ஆட்டங்கள் இருவரிடத்திலும் இல்லை. மகாவிஷ்ணுவின் கறுப்பு சிவனின் வெளுப்பு இரண்டுமே சயன்ஸ்படி ஏழு வர்ணங்களில் சேரவில்லை. சத்தியமான தத்துவம் மாயையால் வேறு விதமாக மாறித் தெரிகிறபோதுதான் வர்ணங்கள் உண்டாகின்றன. இருப்பதைப் பொய்யாக மாற்றிச் சொல்வதை இங்கிலீஷில் Coloured Version என்றே சொல்கிறார்கள் அல்லவா? கலர் வந்து விட்டால் பொய்க்கு வந்து விட்டோம் என்று அர்த்தம். கலர் இல்லாத கறுப்பு விஷ்ணுவிடமும், வெள்ளைச் சிவனிடமும் மனத்தை வைக்கிறவரையில் சத்தியத்தோடேயே ஒட்டிக் கொண்டிருக்கிறோம்.

இறுதியான வெண்மைக்கு அடையாளமாகவே கரியையும் எரித்த பின் கிடைக்கிற விபூதிச் சாம்பலைச் சைவர்கள் தரிக்கிறார்கள். என்றும் நிற்பது எதுவோ அதுவே நீறு: திருநீறு. மாயை தீண்டாத உலகத்துக்கு அடையாளம் மண். மரம் செடி, கொடி எல்லாம் மண்ணிலே பிறந்து, மண்ணிலே வளர்ந்து, முடிவில் மட்கி மடிகிறபோது மண்ணே ஆகின்றன. எனவே மண்ணும் முடிவான நிலைக்கு அடையாளமாக இருக்கிறது. இதனால்தான் வைஷ்ணவர்கள் திருமண் இட்டுக் கொள்கிறார்கள். திருநீறும் திருமண்ணும் ஒரே தத்துவத்தைத்தான் காட்டுகின்றன: ஹரி — ஹர பேதம் இல்லாதது போல், அவர்களுக்குரிய சின்னங்களிலும் பேதமில்லை. ஜகத்தில் இருந்து கொண்டே மேல் நோக்கி உயர வேண்டும் என்பதற்காகத் திருமண்ணை மேல் நோக்கிப் போட்டுக் கொள்கிறார்கள். எல்லாம் சமமாகி விட்ட நிலையில் விபூதியை உயரமாக்கிப் போடாமல் நெற்றியில் குறுக்கே தரித்துக் கொள்கிறார்கள்.

சிவனுக்கும் திருமாலுக்குமிடையே பேதம் கற்பிப்பது கொஞ்சம்கூடச் சரியில்லை. வைஷ்ணவ ஆழ்வார்களும், சைவ நாயன்மார்களும் உயர்ந்த பக்தி நிலையில் இரண்டையும் ஒரே ஸ்வரூபமாகக் கண்டு பாடியிருக்கிறார்கள். ''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து'' என்று ஆழ்வார் பாடினால், அதை அப்படியே எதிரொலிக்கிற மாதிரி ''குடமாடியை இடத்தே கொண்டு'' என்று தேவாரம் பாடுகிறது. (கோபிகைகளோடு குடத்தை வைத்துக்கொண்டு நர்த்தனம் செய்த கிருஷ்ண பரமாத்மாதான் குடமாடி.)

தமிழ்நாட்டில் ஆதிகாலம் முதற்கொண்டு இந்த சமரச பாவம் இருந்து வந்திருக்கிறது. அதனால்தான் இருபத்தேழு நட்சத்திரங்களுக்குள்ளே சிவனுக்குரிய ஆதிரை, விஷ்ணுக்குரிய ஓணம் ஆகிய இரண்டுக்கு மட்டும் 'திரு' என்ற கௌரவ அடைமொழி சேர்த்துத் திருவாதிரை, திருவோணம் என்று சொல்கிறோம். குழந்தையாக இருக்கிறபோதே இந்தச் சமரச உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதால்தான் அவ்வைப் பாட்டி ஆத்திசூடியில் 'அரனை மறவேல்' என்றும், 'திருமாலுக்கு அடிமை செய்' என்றும் உபதேசம் செய்கிறாள்.

தமிழ்நாட்டிலே வைஷ்ணவர்கள் 'கோயில்' என்பது ஸ்ரீரங்கத்தை; சைவர்கள் சிதம்பரத்தைக் 'கோயில்' என்பார்கள். ஒன்றிலே ரங்கநாதன் — இன்னொன்றில் சபாபதி. அரங்கம் என்றாலும் சபை என்றாலும் ஒரே அர்த்தம் தான். ரங்கநாதன் என்றாலும் சபாபதி என்றாலும் ஒன்றேதான்.

ஒரே தெய்வத்தை இஷ்ட மூர்த்தியாகக் கொண்டு வழிபடுவதே சித்த ஒருமைப்பாட்டுக்கு உதவுவதாகத் தோன்றலாம். இதில் நியாயம் உண்டு. இதனால் இன்னொரு மூர்த்தியைத் தாழ்வாக எண்ணக் கூடாது. தங்கள் இஷ்ட தெய்வத்தையே, பரம்பரை தெய்வத்தையே உபாசிக்கலாம். ஆனால் அப்போதும் 'ரூபமற்ற பரமாத்மாவையே நாம் இந்த ரூபத்தில் வழிபடுகிறோம். எனவே இந்த மூர்த்தியும் பரமாத்மாதான். அதே பரமாத்மா மற்ற ரூபங்களும் எடுத்துக்கொள்ள முடியும். அதாவது நம் தெய்வமேதான் மற்றவர்கள் வழிபடுகிற ஏனைய தெய்வங்களாகவும் உருவம் கொண்டிருக்கிறது' என்ற உணர்ச்சி ஏற்பட வேண்டும். நம் தெய்வமேதான் மற்றத் தெய்வங்களாகவும் உள்ளது என்று நினைத்து விட்டால் நமக்கு அந்த மற்ற ரூபங்களில் பிடிப்பு உண்டாகாவிட்டாலும் கூட, அவை நம் தெய்வத்தைவிடத் தாழ்ந்தது என்ற எண்ணம் வரவே வராது. சமயச் சண்டைகளும் உண்டாகாது. எல்லோரும் ஒரே பரமாத்மாவின் குழந்தைகளாக அன்போடு ஐக்கியப்படுவதற்காக ஏற்பட்ட மதத்தில், தெய்வங்களின் பெயராலேயே சண்டையும் துவேஷமும் உண்டாகிற நிலை மறைந்து சௌஜன்யமும் சாந்தியும் நிலவும்.

பிறவி மலர்ந்த இடம் போடி நாயக்கனூர். இலக்கிய இறகு வளர்ந்த இடம் மதுரை தியாகராசர் கல்லூரி.

பி. எஸ்ஸி. (வேதியல்) படிக்கும் போதிருந்தே எனக்கு இலக்கிய ஆர்வம் உந்தித் தள்ளியது. ஆகவே மூன்று மாதங்களுக்கு முன்னால்தான் முது கலைத் தமிழ் இலக்கியத்தை முதல் வகுப்பில் முடித்து விட்டு வந்திருக்கிறேன்.

கல்லூரியில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், பேச்சுப் போட்டிகளில் எனக்குப் பரிசுகள் கிடைத்துள்ளன. கல்கியில், டீன் ஏஜ் கதையின் வாயிலாக அறிமுகமாகிறேன். ★





மாதா பிதா குரு தெய்வம்

முத்து. தங்க ஐயப்பன்

டீன் ஏஜ் கதை-9

பிரஷின் குமிழைப் பிடித்துக் கொண்டு, நைலான் ஈர்க்குச்சி முனைகளைச் சோப்பில் வைத்துச் சுழற்றினேன். வெண்மையாகப் பூத்து வந்த சோப்பின் நுரையை முகத்தில் பரப்பிக் கொண்டபிறகு ஷேவிங்கைத் தொடர்ந்தேன்.

வழித்தெடுப்பதற்குக் காகிதம் தேடினேன். ஒன்றும் கிடைக்கவில்லை. மரப் பீரோவுக்குக் கீழே நாற்பது பக்க நோட்டு ஒன்று கிடந்தது. உள்ளே விரித்துப் பார்த்தேன். கண்ட கண்ட ஸ்டாம்புகள், தீப்பெட்டிப் படங்கள், சாமி படங்கள், எம். ஜி. ஆர்., ஹேமா படங்கள் ஒட்டப்பட்டு இருந்தன. நோட்டின் முதல் பக்கத்தில் ஏ. தேனப்பன் என்று அலங்கார(?)மாக எழுதப்பட்டிருந்தது.

'விருட்'டென்று ஒரு பக்கத்தைக் கிழித்தேன். அதை நான்காக மடித்து ஒரு பகுதியைக் கிழித்து எடுத்து ரேசரின் விளிம்பைத் துடைத்தேன். க்ஷவரம் தொடர்ந்தது.

''ஐயையோ!''

திடுக்கிட்டுத் திரும்பினேன். என் செல்ல மகன் க்ஷவர வழிப்புக்குத் தப்பிய காகிதத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, என்னைக் கோபித்தான்.

''என்னப்பா நீ? நான் கஷ்டப்பட்டு ஒட்டி வைச்சிருந்த படங்களை யெல்லாம் கிழிச்



கட்டே! நான்மட்டும் எதையாச்சும் கிழிச்சா கண்ணுமூஞ்சி தெரியாம அடிக்கிறே... இப்ப என்ன செய்யறது?''

முகத்தைத் தூக்கிக் கொண்டு அழ முடியாத அழுகையோடும், அடக்க மாட்டாத ஆத்திரமையோடும் சண்டைக்காரன் போல் தேனப்பன் நின்றான்.

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''என்னடா? என்ன வந்திருச்சு உனக்கு? எதையோ பெரிசாப் பறி கொடுத்தவன் மாதிரிப் புலம்பறே...? என்ன படம்னு சொல்லு. ஒண்ணுக்கு ஒன்பதா வாங்கித் தரேன்...''

''நீ ஒண்ணும் வாங்கித் தர வேணும்... சவரம் பண்றதுக்குக் தினக் காலண்டரைக் கிழிக்க வேண்டியதுதானே? என்னோட நோட்டிலே இருக்கும் சரஸ்வதிபடம்தான் உனக்குக் கெடச்சதாக்கும்?''

''சரிதாண்டா..., ஏதோ கெடைச்சது, கிழிச்சேன். சரஸ்வதி படம் இல்லாட்டா என்ன? சாயந்திரம் வர்றப்ப நல்லதா ஒரு சரோஜாதேவி படம் வாங்கிட்டு வரேன்'' என்றேன், கிண்டலாக.

என்னுடைய கிண்டலைக் கேட்டுக் கொண்டே பாதி ஆத்திரமும் பாதி அவநம்பிக்கையுமாக அவன் உள்ளே சென்றான்.

அலுவலகத்துக்குப் புறப்படுவதற்கு 'ஷூ' மாட்டிக் கொண்டிருந்தேன். எதிரிலிருந்த சோபாவில் புத்தகப் பையை வைத்து விட்டுத் தேனப்பன் தயங்கித் தயங்கி என்னைப் பார்த்தான்.

''என்னடா?'' என்று கேட்டேன்.

''ஏண்டா, அப்பா இல்லாத நேரத்திலே வீட்டிலே அட்டகாசம் பண்ணத் தெரியுது. புராக்ரஸ் ரிப்போர்ட்டை மட்டும் கொடுக்கத் தெரியாதாக்கும்!'' என்று தெய்வநாயகி அவனைச் சீண்டினாள்.

''சரி, சரி. பையனை ரொம்பவும் விரட்டாதே...! பாவம், ஏற்கனவே பயந்து போயிருக்கான்!'' என்று கூறியபடி அவன் கையிலிருந்த புராக்ரஸ் ரிப்போர்ட்டை வாங்கினேன். மதிப்பெண்களைப் பார்த்த எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

தமிழ்—32; ஆங்கிலம்—27; கணக்கு—21; விஞ்ஞானம்—14; சமூகம்—36. வகுப்பில் இருபத்தி எட்டாவது ராங்க்!

போன ஆண்டு நான்கு வகுப்புகளுக்குமாகச் சேர்த்து 'ஸ்கூலில் முதலாக' வந்தவன், இப்பொழுது இவனுடைய வகுப்பிலேயே இருபத்தி எட்டாவது ராங்கில் இருக்கிறான்.

அதுதான் மிரண்டு போயிருக்கிறான்!

அவனை அதட்டிக் கண்டிப்பதா, அல்லது ஆறுதல் கூறித் தேற்றினால் போதுமா என்று ஒரு கணம் யோசித்தேன்.

அதற்குள் தெய்வநாயகி சரமாரியாகப் பிடித்து விட்டாள்.

''என்ன பார்க்கிறீங்க...உங்களையும்தான் சொல்றேன். பதினாறு வயசுப் பையனுக்குப்



அரங்கேற்றம்

அடிஸன் பெயிண்ட்ஸ் கம்பெனியின் நிர்வாக டைரக்டர் திரு கிருஷ்ணமூர்த்தியின் புதல்வி ஸ்ரீமதி ஜோ பட்டாபிராமனின் பரதநாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் சிறப்பாக நடந்தேறியது. அபிநயங்களுக்கு ஸ்ரீமதி ஜோவின் தாயார் ஸ்ரீமதி சாவித்திரியும், சகோதரி ஜெயாவும் பதம் பாடினார்கள். நடன ஆசிரியை சுடர்க்கொடி பத்மாவின் நட்டுவாங்கம் நிகழ்ச்சிக்குச் சுறுசுறுப்பளித்தது.

பாக்கெட் மணி என்ன வேண்டிக் கிடக்கு? நல்லாப் படிக்கிறான்னு நீங்க பாக்கெட் மணி குடுக்கப் போயி, அவன் இப்ப பாடம் படிக்கிற நேரத்திலே எல்லாம் கண்ட கண்ட காமிக்ஸ் படிக்கிறதும், காசைக் கரியாக்கறதுமா இருக்கான்... பாருங்க விழிக்கிறதை? அவன் முகத்தைப் பார்க்கவே...''

''இரு, இரு, இரு!... பொறு! எல்லாம் நான் சொல்லிக்கிறேன்.'' ஆவேசமாகத் தொடர்ந்தவளை ஆசுவாசப் படுத்தினேன். ''அவனே பயந்து போயிருக்கான். மேலே மேலே மெரட்டினா அரண்டு போயிடுவான். நான் கண்டிச்சுக்கிறேன், நீ உள்ளே போயி என் பையை எடுத்துக்கிட்டு வா... ஆபீசுக்கு நேரமாகுது'' என்று அவளை உள்ளே அனுப்பி வைத்தேன். தேனப்பனை விழித்துப் பார்த்தபடி உள்ளே போனாள்.

பையனைப் பார்த்தேன். தலையைத் தொங்கப் போட்டபடி புத்தகத்தின் மூலையை மடக்குவதும், விரிப்பதுமாக இருந்தான்.

''டேய்,... ஏண்டா இப்படி?''

''..........''

''உங்கம்மா என்னென்னமோ சொல்றா. நீ என்னடான்னா உம்முன்னு இருக்கே? ஏன் இப்படிப் பண்ணறே?''

விருட்டென்று தலையைத் திருப்பி அம்மா போன திசையை மிகுந்த ஆத்திரத்தோடு பார்த்தான்.

''நான் ஒண்ணும் பண்ணலே... அம்மா வேணும்னே சொல்றாங்க! காலையிலே மார்க்கெட்டுக்குப் போகச் சொன்னாங்க... நான் தலை சீவிக்கணும், போக மாட்டேன்னு சொன்னேன்... அந்தக் கோபத்திலே கண்டபடி சொல்றாங்க!''

பையை எடுத்துக் கொண்டு ''என்ன சொல்றான்?'' என்று கேட்டபடியே தெய்வநாயகி வந்தாள்.

''அவன் உன்னைத்தான் சொல்றான். நீ எதுக்கு ஸ்கூல்லே படிக்கிறவனைப் பிடிச்சுக்கிட்டு கத்திரிக்காய் வாங்கிக்கிட்டுவாடான்னு சொல்றே? நீ இப்படியெல்லாம் வேலை சொல்றதுனாலேதான் படிக்கவே நேரம் கெடைக்கிறதில்லேங்கறான் அவன்'' என்றேன்.

''ஆமாமா.. அவன் சொல்றான்! நீங்களும் கேட்டுக்கிட்டு என் மண்டையைப் போட்டு உருட்டுங்க! நீங்க இல்லாத நேரத்திலே அவன் அடிக்கிற கூத்தை எங்கே போய்ச் சொல்றது? ஸ்கூல்லே எழுதிப் போட்ட கேள்வியைச் சொல்லிக் கொடுத்துத் திரும்பச் சொல்லுடான்னு கேட்டா, 'நீ என்ன கேக்குறது. நானென்ன சொல்றது?' அப்படீங்கறான்! எப்பவாச்சும் ஏதாச்சும் நான் ஒரு சின்ன வேலை சொல்றது இவனுக்குச் சாக்காப் போச்சாம்! நீங்களும் சொல்ல வந்துட்டீங்க! நீங்க கொடுக்கிற செல்லம் அவனுக்குத் திமிரா மண்டையிலே ஏறியிருக்கு... நான் சொல்லித் தர்ற பாடம் அவனுக்கு எப்படி ஏறும்? 'மாதா, பிதா, குரு தெய்வம்'ங்கிறதையே மறந்தவன்தானா உருப்படப் போறான்?...''

'ஓஹோஹோ' என்று வாய் விட்டுச் சிரித்தேன். ''நீ இவனுக்குப் பாடம் சொல்லித் தர்றியா... அப்ப சரி! இது தெரியாம, 'நம்ம பையன் இவ்வளவு மண்டுகமா ஆயிட்டானே'ன்னு நான் இவ்வளவு நேரமாத் திகைச்சுப் போய் உக்காந்திருக்கேன்! நீயே எஸ்.எஸ்.எல்.சி.யிலே ஏழு படையெடுப்பு! நீ சொல்லிக் கொடுத்தும் இவன் இத்தனை மார்க்கு வாங்கினது ஆச்சரியம்தான்!'' என்று அவளை மட்டம் தட்டினேன்.

தெய்வ நாயகியின் முகம் 'ஜிவுஜிவு' என்று சிவந்து விட்டது. அதைப் பார்த்ததும் தேனப்பனின் முகம் மலர்வதைக் கவனித்தேன். ஏதோ பழிவாங்கி விட்டவன் போலப் பெருமையுடன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். வாயெல்லாம் பல்லாகி விட்டது.

''நீங்க செய்யறது கொஞ்சம் கூட நல்லா இல்லே...'' என்று பொருமி விட்டு 'விருட்டென்று உள்ளே போய் விட்டாள் தெய்வநாயகி.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தேனப்பனைக் கேட்டேன்.

''ஏண்டா இப்படி மார்க் வாங்கியிருக்கே? இருபத்தி எட்டாவது ராங்க் வாங்கியிருக்



ஸோலோ காதல் மலர்ச்சி...
இளம் காதலர்கள்..!
ADWAVE:KH-104-C
SOLO
SOLO
ஸோலோ
உங்கள் இளமையின் துடிப்பு,
காதல். ஆசை வெள்ளத்தில் மூழ்கி,
காதலுடன் கொஞ்சிக் குலவி,
அள்ளி அருந்திட...
ஸோலோ.
துடிப்புள்ள எலுமிச்சை பானம்!
ஸோலோ காதல் பானம்... இளம் உள்ளங்கள் கீதம்!


மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
DETERGENT WASHING TABLET
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கன மிக்கது ரின்: சோப்பைவிட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள ஆடவரின், பெண்டிரின், குழந்தையரின்...யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பைவிட அரைமடங்கு அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

லியே?... வெட்கமா இல்லே?... எல்லா சப்ஜெக்டிலேயுமே ரொம்பக் கொறைச்சலால்லே மார்க் வாங்கியிருக்கே?... அதென்ன சயன்ஸிலே பதினாறு?''

பையன் தயங்கியபடி கூறினான். ''வாத்தி யாரு சரியில்லே!''

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது!

''என்னடா சரியில்லே?''

''சரியாச் சொல்லித் தரமாட்டேங்கறார் அப்பா... எதற்கெடுத்தாலும் அடிக்கிறாரு.''

''நல்லாப் படிக்காட்டி அடிக்காம என்னடா செய்வாங்க? யாருடா உங்க வாத்தி யாரு?''

''கே. சுப்பையா வாத்தியாருன்னு... மேலத் தெருவிலே சீதாபாய் ஜுவல்லர்ஸுக்கு எதுத்தாப்லே இருக்காரே...''

''ஓ...அவரா! ஒல்லியா, ஒடிசலா நெடிசலா இருப்பானே! அவன் என் கிளாஸ்மேட் ஆச்சே. அவன் நல்லாத்தானேடா சொல்லிக் கொடுப்பான்? அவனுக்கென்ன குறைச்சல்?''

''அவனுக்கு... இல்லே அவருக்கு... சும்மா அடிக்கிறாரு அப்பா!'' சுப்பையாவின் முன் கோபம் என் நினைவுக்கு வந்தது. பையன் சொல்வதும் உண்மைதான்.

''அவன் கத்த ஆக! நான் அவனைப் பார்த்துச் சொல்லி வைக்கிறேன். நீ ஒழுங்காப் படி. உன்னை டாக்டருக்குப் படிக்க வைக்கணும்னு நான் நெனைச்சுக்கிட்டு இருக்கேன்...'' என்றேன்.

''சரியப்பா'' என்றவன், ''அப்பா...... வந்து'' என்று இழுத்தான்.

''என்னடா?''

''நாளன்னிக்கு ஸ்கூல்லே சரஸ்வதி பூஜை கொண்டாடறாங்களாம். ஃபைவ் ருபீஸ் வாங்கிண்டு வரச் சொன்னாங்க...''

''இந்தா!'' என்று ஐந்து ரூபாயைக் கொடுத்து விட்டு எழுந்தேன். ''சரி, ஸ்கூலுக்குப் போ. சைக்கிளை நிதானமாப் பாத்து ஓட்டிட்டுப் போ'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் வெளியில் பறந்து விட்டான். எனக்கு பஸ்ஸுக்கு நேரமாகி விட்டது. உள்ளே எட்டிப் பார்த்தேன். தெய்வநாயகி கோபத்தோடு இருப்பது தெரிந்தது. ஒன்றும் பேசாமல் நான் நடையைக் கட்டினேன்.

அலுவலகம் சென்றதும் 'விநாயகா கேபிள்ஸ் கம்பெனி'யின் கார் தயாராக இருந்தது. ஏறிக்கொண்டேன். இன்று எனக்கு இன்ஸ்பெக்ஷன். வேளச்சேரியில் இருக்கிற விநாயகா கேபிள்ஸ் கம்பெனிக்கு இன்ஸ்பெக்ஷனுக்கு நான் செல்ல வேண்டும். இன்ஸ்பெக்ஷன் வேலை முடிவதற்கும் மணி ஒன்று அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

கம்பெனி மானேஜர் என்னை உயர்தர ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். இருவரும் உணவருந்திக் கொண்டிருக்கும் போது, நகரில் அப்போதுதான் வெளிவந்து நகரையே கலக்கிக் கொண்டிருக்கும் படு கவர்ச்சிகரமான 'நியூவேவ்' படம் எங்கள் பேச்சில் நுழைந்தது. 'போகலாமா' என்ற யோசனையைக் கம்பெனி மானேஜர் வெளியிட்டார். 'சரி' என்று தலையை அசைத்தேன்.

இருவரும் உணவை முடித்துக் கொண்டு அந்தத் தியேட்டருக்குச் சென்றோம். அவர் டிக்கட் வாங்கச் சென்றார். நான் தியேட்டரின் வாயிலில் காட்சிக்கு வைத்திருந்த பொருட்களைப் பார்த்துக் கொண்டே ஸ்டாலின் பக்கமாக வந்தேன்.

'பட்'டென்று என் பார்வை ஓரிடத்தில் நின்றது. அதோ, அங்கே நின்று அரட்டை அடித்துக் கொண்டிருப்பது யார்? நீலப் பட்டைகளைக் குறுக்கும் நெடுக்குமாகப் போட்ட அந்தச் சிவப்புச் சட்டை... தேனப்பனேதான்! ஸ்கூல் நேரத்தில் இவன் எங்கே இங்கே வந்தான்? அவனைச் சுற்றிலும் காலிப் பயல்கள் போல் நாலைந்து பேர்! எனக்கு முதுகைக் காட்டியபடி மிக உல்லாசமாக அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறான்...

'குப்'பென்று என் நெஞ்சை அடைத்தது. அவன் கையில் விரலிடுக்கில் வளையம் விட்டுக் கொண்டிருப்பது... சிகரெட்டானே?

என்னுடைய தலைக்குள் இரத்த ஓட்டம் முறுக்கேறியது. ஸ்கூலுக்கு மட்டம் போட்டு விட்டு, சரஸ்வதி பூஜை என்று பொய் சொல்லி வாங்கிவந்த பணத்தில் 'அடல்ட்ஸ் ஒன்லி' பார்க்க வந்திருக்கிறான். பிஞ்சுப் பயல் என்று நினைத்துக் கொண்டு நான் கொஞ்சிக்கொண்டிருக்க, இவன் வெம்பத் தொடங்கி விட்டானா? கண்டபடி இவனுக்குப் பாக்கெட் மணி தருவதாகத் தெய்வநாயகி சுட்டிக் காட்டியபோது. இவன் எதிரிலேயே தெய்வ




எட்ட இருந்து பேசு!

நாடகங்களில் 'மைக்' கிட்டே வந்து பேசுமாறு நடிகர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது நாடகத்தின் இயற்கைத் தன்மையைப் பாதிக்கிறது.

அறையின் ஒரு பக்கத்தில் நாம் ஏதாவது காரியமாயிருக்கும்போது ஃபோன் வந்துவிட்டால் காரியத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு இப்பால் டெலிஃபோன் அருகே வந்துதானாக வேண்டும்.

ஆனால் தற்போது பெல் டெலிஃபோன் கம்பெனியைச் சேர்ந்த இரு இன்ஜினியர்கள் புது விதமான சக்தியுள்ள மைக்ரோஃபோன் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த மைக்குக்குக் கிட்டே வந்துதான் பேசவேண்டு மென்பதில்லை. அறையின் எந்த மூலையிலிருந்து பேசினாலும் நமது குரலை அது இழுத்துக் கொள்ளும்.

இனி டெலிஃபோனுக்கு அருகில் வந்துதான் பேச வேண்டுமென்பதில்லை!



''கிளம்பு, கிளம்பு! உணவு தானியப் பதுக்கலைக் கண்டுபிடிக்கப் போகலாம்!''

நாயகியை நான் மட்டம் தட்டிப் பேசியது என் நினைவுக்கு வந்தது. மனம் கலங்கியது.

அவனைப் பார்த்தேன். பார்க்கப் பார்க்கப் பற்றிக் கொண்டு வந்தது. வெறி போல் பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மெல்ல அவன் பக்கமாக நகர்ந்து வந்தேன். அவன் என்னைக் கவனிக்க முடியாத இடத்தில் நின்று கொண்டு அவனையும், அவனது நண்பர்களையும் கவனித்தேன்.

ஸ்டாலுக்குச் சென்று சிகரெட்டுக்கு நெருப்புப் பற்றவைத்துக் கொண்டு வந்த ஒருவன், ''ஏண்டா நீயும் கிளாஸுக்குப் போகலியா?'' என்று தேனப்பனைக் கேட்டான்.

தேனப்பன் என்ன சொல்லப் போகிறான் என்பதைக் கேட்க என் செவி கூர்மையடைந்தது. அவன் சொன்ன பதில்?

''அந்தச் கப்பையன் கிளாசுக்கு எவண்டா போவான்? நான் அவன் மூஞ்சியைப் பார்த்தே பத்து நாளாகுது... டேய், தருமா! உனக்கு ஒரு விஷயம் தெரியுமாடா?'' என்று கேட்ட தேனப்பன் சிகரெட்டை உறிஞ்சி விட்டுத் தலையைக் குலுக்கிக் கொண்டு 'பகபக' வென்று சிரித்தான். அவன் கன்னத்தின் பக்கமாகப் புகை வளையம் அதிர்ந்து பரவியது.

''என்னடா?'' எல்லோரும் ஆவலாகவே மாகத் தேனப்பன் முகத்தைப் பார்த்தார்கள்.

''அந்தச் கப்பையனை நாமெல்லாம் ஊசகன்னு சொல்வோமே...அவன் இப்போ மட்டும் ஊசக இல்லையாம்... அவன் படிக்கிற காலத்திலேருந்தே ஊசகதானுண்டா!''

''யாருடா சொன்னது?''

''யாரு, எங்க அப்புச்சிதான்!''

'சுரீல்' என்று சூட்டுக்கோல் போட்டு இழுத்தது போல் என் நெஞ்சில் வலித்தது.

'அப்புச்சி!' அந்தக் குரலில்தான் எவ்வளவு ஏளனம்! எவ்வளவு இளக்காரம்! எவ்வளவு அகம்பாவம்! வேண்டும்; எனக்கு நன்றாக வேண்டும். இளங் குருத்துக்களுக்கு அறிவையும், பண்பையும் புகட்டும் ஆசிரியரைப் பற்றி அவருடைய மாணவனிடமே, 'ஊசக' என்று பேசிய அடிமுட்டாளான எனக்கு இந்த 'அப்புச்சிப் பட்டம்' அவசியம் வேண்டும்.

''எங்க அப்புச்சிதாண்டா சொன்னாரு. ஊசக கப்பையனும் எங்க அப்புச்சியும் ஒண்ணா படிச்சவங்களாம். ஊசக கப்பையன் கூடப் படிச்சதுனாலேதாண்டா எங்கப்பனும் ஊசசா ஆயிட்டான்! இல்லாட்டா சரஸ்வதி பூஜைன்னு சொன்னவுடனே 'இந்தாடா'ன்னு அஞ்சு ரூபாயைக் கொடுப்பானா?''

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, இப்பொழுது என்னையே 'அவன்' 'இவன்' என்று பேச ஆரம்பித்து விட்டாயா? பேசு! என் செல்ல மகனே பேசுடா...!

''நீ சரியாத்தாண்டா சொல்லியிருக்கே! சரஸ்வதி பூஜைன்னுதானே சொன்னே? அதுதான் உங்கப்பர் அந்த ரூபாயைத் தூக்கிக் கொடுத்து, 'போய்க் கொண்டாடுடா மகனே'ன்னு சொல்லி யிருக்காரு...! நீயும் சரிதான்னுட்டு ஊர்வசி சரஸ்வதி நடிச்ச 'ஏ' படத்துக்கு வந்து சேந்துட்டே.... என்ன இருந்தாலும் நம்ம தேனப்பனுக்குப் பக்தி அதிகந்தாண்டா!'' என்றான் ஒருவன்.

''ரொம்பக் கரெக்ட்! பக்தி அதிகமா இருக்கிறதுனாலேதான் பூஜைக்கு ஊதுவத்தியும் கையுமா வந்திருக்கான்'' என்று மற்றொருவன் தேனப்பன் கையிலிருந்த சிகரெட்டைச் சுட்டிக் காட்டினான்.

ஒரே கைதட்டல்! 'ஓ'வென்ற சிரிப்பு! இதில் சத்தம் போட்டுச் சிரித்தவன் தேனப்பன்தான்!... வெட்கக் கேடு!

'கணகண' வென்று தியேட்டரில் மணி அடித்தது. வாசலில் இருந்தவர்கள் அரங்கத்தினுள் செல்லத் தொடங்கினார்கள்.

நான் தளர்ந்து போய் நின்றேன். 'மாதா, பிதா, குரு, தெய்வம்கிறதையே மறந்தவன் நாளை உருப்படப் போகிறான்?' என்று தெய்வநாயகி கூறியது முழு வேகத்தோடு, முழு அர்த்தத்தோடு என் மனசைத் தாக்கியது. ஒரே பையன் என்று செல்லம் கொடுத்த நல் பலனா இது! மாதா பிதா குரு தெய்வம் என்ற மந்திரத்தை—அறிவுக்கும், பண்புக்கும் ஊற்றுக் கண்ணாக உள்ள வேதத்தைத் தேனப்பன் மறந்து போனதற்கு அவன் மட்டும் தானா காரணம்?

குற்றமுள்ள என் நெஞ்சு குறுகுறுத்தது. நான் செய்துவிட்ட தவற்றினை — என் மனைவி சுட்டிக் காட்டி வந்த தவற்றினை — நான் நன்றாக உணரும்படி, என் மனத்தில் உறைக்கும்படி செய்து விட்டான் என் மகன்.

இப்பொழுது அவன்மீது எனக்குக் கோபமில்லை. நான் திருந்தி விட்டேன். எனவே கூடிய சீக்கிரத்தில் அவனும் திருந்திவிடுவான்.

'உஸ்' என்று பெருமூச்சு விட்டபடி வந்தார் கம்பெனி மானேஜர். ''நாம் கொஞ்சம் முன்னாலேயே வந்திருக்கணும். சார், டிக்கெட் கிடைக்கல்லே!'' என்றார்.

நீலப் பட்டையைக் குறுக்கும் நெடுக்குமாகப் போட்ட சிவப்புச் சட்டை கும்பலில் மறைந்தது.

''பரவாயில்லே'' என்று கூறியபடி மானேஜருடன் வெளியே வந்தேன்.

'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற விளம்பரம் என்னைப் பார்த்துச் சிரித்தது!

இருபத்தோராம் அத்தியாயம்

சித்தர் மலைச் சித்திரம்

பதினைந்து விதமான அபிநயப் பார்வைகளிலே சந்தேகமும் அருவருப்பும் தோன்றும் பார்வையைச் சிவகாமி புத்த பிக்ஷுவின் மேல் ஒரு கணம் செலுத்திவிட்டு, ஆயனரைப் பார்த்து, ''இவர்கள் இத்தனை நேரமும் இங்கே தான் இருந்தார்களா?'' என்று கேட்டாள்.

''ஆம், குழந்தாய்!''

''புத்தர் சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்தார்களா?''

''ஆமாம்! ஆனால் இதைக் குறித்து நீ என்னவோ ஏதோ என்று சந்தேகப் பட வேண்டாம்...''

ஆயனர் மேலே சொல்வதற்குள் சிவகாமி, ''புத்த பகவானுடைய சிலைகளைப் பிரம்மாண்டமாய்ச் செய்வதில் எவ்வளவு உபயோகம் இருக்கிறது!'' என்றாள்.

''அதனாலேதான் மகாயான சித்தாந்தத்தை ஏற்படுத்திய நாகார்ஜுன பிக்ஷுவை நான் போற்றுகிறேன்'' என்றார் நாகநந்தி.

* * *

புத்த மதம் ஸ்தாபிக்கப்பட்டுச் சில காலம் வரையில் புத்த பகவானுடைய சிலைகளை அமைப்பதும் சித்திரங்கள் எழுதுவதும் தடுக்கப்பட்டிருந்தன. இந்த வரலாறு நடந்த காலத்துக்கு இருநூறு வருஷங்களுக்கு முன்னால் நாகார்ஜுன பிக்ஷு என்னும் மகான் தோன்றி மகாயான புத்த சித்தாந்தத்தை ஸ்தாபித்தார். பாரத நாட்டின் வட கோடியில் நாலந்தா என்னும் நகரில் பிரசித்தி பெற்று விளங்கிய பௌத்த மடத்தின் தலைவரான நாகார்ஜுனர் தேசமெங்கும் யாத்திரை செய்து, வாதப் போர் நடத்தி மகாயான சித்தாந்தத்தைப்

சிவகாமியின் சபதம்





அமரர் கல்கி



பிரசாரம் செய்தார். ஆங்காங்கே சங்கராமம் என்ற பெயரால் வழங்கிய பௌத்த மடங்களையும் நிறுவிக் கொண்டு போனார். அத்தகைய சங்கராமம் ஒன்றை அவர் கிருஷ்ணா நதிக் கரையில் உள்ள ஸ்ரீபர்வதத்திலும் ஸ்தாபித்தார். அதுமுதல் ஸ்ரீபர்வதத்துக்கு நாகார்ஜுன மலை என்ற பெயரும் வழங்கலாயிற்று.

நாகார்ஜுனர் ஸ்தாபித்த மகாயான பௌத்த மதம், புத்த பகவானுடைய சிலைகளை அமைப்பதற்கும் கோயில்கள் கட்டுவதற்கும் அநுமதித்தது. ''நாகார்ஜுன பிக்ஷுவைப் போற்றுகிறேன்'' என்று நாகநந்தி இரண்டு முறை கூறிய தன் கருத்து என்ன என்பது இப்போது நன்கு விளங்குகிறது அல்லவா?

* * *

நாகநந்தி கூறியதைப் பொருட்படுத்தாமல் சிவகாமி, ''அப்பா! இவர்கள் எதற்காக ஒளிந்து கொண்டிருந்தார்கள்?'' என்று கேட்டாள்.

''அம்மா! நம் நாகநந்தி அடிகள் இராஜ குலத்தினரைப் பார்ப்பதில்லை என்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறார். உனக்குத் தெரியாதா? இந்த வாலிபன் அவருடன் வந்திருந்தபடியால்...''

''அப்பா! சக்கரவர்த்தியும் மாமல்லரும் இவரைப் பார்த்திருந்தால் எவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பார்கள்? ஒன்று கவனித்தீர்களா? மாமல்லர் கையில் ஒரு வேல் வைத்திருந்தாரே? அது இவருடைய வேல்தான்...!''

நாகநந்தி மீண்டும் குறுக்கிட்டு, ''அதில் என்ன வியப்பு, சிவகாமி! இப்போதுதான் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஆயுதம் தேவையாயிருக்கிறதே? ஊரிலுள்ள உடைந்த வேல், வாள், ஈட்டி எல்லாவற்றையும் தேடிச் சேகரிக்கிறார்களே?'' என்றார்.

சிவகாமி அவரை எரித்து விடுபவள் போல் பார்த்துவிட்டு, ''அப்பா! குமார சக்கரவர்த்தி இந்த வீரரிடம் திருப்பிக் கொடுப்பதற்காகவே அந்த வேலைத் தம் கையில் வைத்திருக்கலாம். சுத்த வீரத்தைப் பாராட்டுவதில் மாமல்லரைப் போல் யார் உண்டு? இவரை நீங்கள் சக்கரவர்த்தியின் சமூகத்துக்கு உடனே அழைத்துப் போக வேண்டும்'' என்று கூறினாள்.

ஆயனர் தட்டுத் தடுமாறி, ''ஆகட்டும், அம்மா! என் உத்தேசமும் அதுதான். பரஞ்சோதி வடக்கே போய்த் திரும்பி வந்ததும் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போகிறேன்'' என்றார்.

சக்கரவர்த்தி வந்திருந்த சமயத்தில் சிலையின் பின்னால் ஒளிந்திருக்க நேர்ந்த அவமானத்தினாலும், சிவகாமியின் விஷயத்தில் ஏற்பட்ட இயற்கையான சங்கோசத்தினாலும் இத்தனை நேரம் பரஞ்சோதி உள்ளமும் உடலும் குன்றி மௌனமாயிருந்தான். ஆனால், சிவகாமி பரிந்து கூறிய வார்த்தை அவனுடைய ஆன்மாவையும் நாவையும் கட்டியிருந்த தளையை அறுத்த மாதிரி இருந்தது. அவன் சிவகாமியை நன்றியுடன் நோக்கி விட்டு, ஆயனரைப் பார்த்து, ''ஐயா! தங்கள் குமாரி சொல்வது உண்மைதான். குமாரச் சக்கரவர்த்தியின் கையிலிருந்த வேல் என்னுடைய வேல்தான் என்று எனக்குக்கூடத் தோன்றியது. அதை வாங்கிக் கொடுத்தீர்களானால் நல்லது. நெடுந்தூரம் பிரயாணம் செய்வதற்குக் கையில் ஏதேனும் ஆயுதம் அவசியமல்லவா?'' என்றான்.

அப்போது புத்த பிக்ஷு, ''ஆயுதத்துக்குத்தானா இப்போது அவசரம்? வேலும் ஈட்டியும் எத்தனை வேணுமானாலும் நான் சம்பாதித்துத் தருகிறேன். முக்கியமான காரியம் ஆகவில்லையே? குதிரையும் இலச்சினையும் கேட்கத் தவறி விட்டீர்களே, ஆயனரே!'' என்றார்.

''அது என் பொறுப்பு. நாளை மாமல்லபுரத்துக்கு வரும்படி சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். அங்கே கேட்டு வாங்கிக் கொண்டு வருகிறேன். பிரயாணத்துக்கு மற்ற ஏற்

பாடுகளைக் கவனியுங்கள்'' என்றார் ஆயனர்.

''அப்பா! இந்த அண்ணன் நெடுந் தூரம் பிரயாணம் செய்யப் போகிறாரா? எந்த ஊருக்கு? எதற்காக?'' என்று சிவகாமி கேட்டாள்.

''நான்தான் அனுப்புகிறேன், குழந் தாய்! மிகவும் முக்கியமான காரியத் துக்காக. சென்ற ஒன்பது வருஷ கால மாக இரவும் பகலும் நான் கண்டு கொண்டிருந்த கனவு நிறைவேறப் போகிறது, சிவகாமி! இந்த உத்தம புத்த பிக்ஷுவின் உதவியினால் நிறை வேறப் போகிறது'' என்று ஆயனர் கூறியபோது, அவருடைய மொழிகளில் முன்போலவே, ஆர்வ மும் பரபரப்பும் பொங் கித் ததும்பின.

''நீங்கள் என்ன கனவு கண்டீர்கள்? அது எப்படி நிறைவேறப் போகிறது? எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே?'' என்றாள் சிவகாமி.



''அஜந்தா மலைக் குகையில் உள்ள அதிசய வர்ணச் சித்திரங்களைப் பற்றி உனக்குப் பல தடவை சொல்லியிருக்கிறேனல்லவா? ஐந்நூறு வருஷங்கள் ஆகியும் அழியாத அந்த வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தை அறிந்து வருவதற்காகத்தான் இந்தப் பிள்ளையை, என் அருமை நண்பரின் மருமகனை, வடக்கே அனுப்பப் போகிறேன்...''

''ஐந்நூறு வருஷத்து வர்ணமாவது, அழியாதிருக்கவாவது? எனக்கு நம்பிக்கைப்படவில்லை, அப்பா!'' என்று சிவகாமி கூறி, சந்தேகமும் அவநம்பிக்கையும் வெளிப்படையாகத் தோன்றிய பார்வையுடன் புத்த பிக்ஷுவை நோக்கினாள்.

''அதை நம்புவது கஷ்டந்தான். முதன் முதலில் கேள்விப்பட்டபோது எனக்கும் நம்பிக்கை உண்டாகவில்லை. ஐந்நூறு வருஷங்கள் அழியாத வர்ணம் எப்படி இருக்க முடியும் என்றுதான் எண்ணினேன். நானே கண்ணால்



பார்த்த பிறகுதான் நம்பிக்கை உண்டாயிற்று!''

ஆயனர் இவ்விதம் கூறியதும், புத்த பிக்ஷுவும் சிவகாமியும் தங்களுடைய வியப்பை ஏக காலத்தில் தெரிவித்துக் கொண்டார்கள்.

''கண்ணால் பார்த்தீர்களா? எப்போது?'' என்றாள் சிவகாமி.

''என்னிடம் இத்தனை காலமும் சொல்லவில்லையே? தாங்கள் அஜந்தாவுக்குப் போனதுண்டா?'' என்று பிக்ஷு கேட்டார்.

''இல்லை; அஜந்தாவுக்குப் போனதில்லை. ஆனால், சித்தர் மலையிலே பார்த்தேன், அடிகளே! தாங்களும் சித்தர் மலைக்குப் போய் வந்ததாகச் சொன்னீர்களே? அங்கே என்ன என்ன அதிசயங்களைக் கண்டீர்கள்?'' என்று ஆயனர் வினவியதும், பிக்ஷுவின் முகத்தில் பிரகாசம் உண்டாயிற்று.

''ஆ! தெரிகிறது..... சித்தர் மலைக் குகையில் ஜின தீர்த்தங்கரர்களின் உருவங்கள் அழியா வர்ணங் கொண்டு எழுதியிருப்பதைக் கண்டேன். குகையின் வாசற்புறத்தில் இரண்டு அப்ஸர ஸ்திரீகளின் திவ்விய வடிவங்களைப் பரத சாஸ்திரத்தில் சொல்லிய இரண்டு அபூர்வ அபிநயத் தோற்றங்களில் பார்த்தேன். அவற்றை எழுதிய மகா சித்திரக்காரர் யாரோ என்று அதிசயித்தேன்.....''

''யார் என்று தெரிந்ததா, சுவாமி?''

''இப்போது தெரிகிறது. அப்பேர்ப்பட்ட தத்ரூபமான ஜீவ வடிவங்களை எழுதக்கூடிய மகாசித்திரக்காரர் தென்னாட்டிலே ஆயனச் சிற்பியைத் தவிர வேறு யார்?''

''ஆம்; அடிகளே! அந்த உருவங்களை எழுதியவன் அடியேன்தான். இன்னும் ஏதாவது விசித்திரத்தைக் கவனித்தீர்களா?''

''அந்த அப்ஸர மாதரின் நடன உருவங்கள் இடைக்கு மேலே பிரகாசமாய் நேற்று எழுதியவைபோல் விளங்குகின்றன; இடைக்குக் கீழே வர்ணம் மங்கி விளக்கமின்றி யிருக்கின்றன.''

''ஆ! ஒன்பது வருஷ காலத்தில் அதிகமாக மங்கித்தான் இருக்கும்!'' என்றார் ஆயனர். பின்னர், மேற்சொன்ன சித்தர் மலைச் சித்திரங்களைக் குறித்து ஆயனர் முன்னும் பின்னுமாகத் தட்டுத் தடுமாறிக் கூறிய வரலாறு வருமாறு:

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மகேந்திர சக்கரவர்த்தி சமண சமயத்தினராயிருந்த காலத்தில் சோழ மண்டலத்துக்கு அவர் பிரயாணம் சென்றபோது ஆயனரையும்கூட அழைத்துப் போயிருந்தார். உறையூரில் சோழ மன்னனுடைய உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து சித்தர் வாச மலையில் சமண முனிவர்கள் ஏற்படுத்தியிருந்த பிரசித்திபெற்ற சமணப் பள்ளியைப் பார்க்கச் சென்றார். அந்தக் குகைப் பள்ளியில் தீட்டியிருந்த வர்ணச் சித்திரங்களைக் கண்டு சக்கரவர்த்தியும் ஆயனரும் அதிசயித்தனர்.

சித்தர் மலைப் பள்ளியில் மேற்படி ஓவியங்களைத் தீட்டிய முனிவர் அச்சமயம் அங்கே வாசம் செய்து கொண்டிருந்தார். அந்தச் சித்திரங்கள் ஆயிரம் வருஷங்கள் ஆனாலும் அழியாதவை என்று அம்முனிவர் கூறியதைச் சக்கரவர்த்தியும் ஆயனரும் நம்பவில்லை. அஜந்தாச் சித்திரங்களைப் பற்றி அந்த முனிவர் கூறியதையும் இவர்கள் நம்பவில்லை. அதன் பேரில் அந்தச் சமண முனிவர்



உங்கள் குடும்பத்திற்கு
ஏற்றது
மிகச்சிறந்ததே!
COLGATE
DENTAL CREAM
DC.G.49 TM
கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம்
வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்...
நாள்முழுவதும் பற்சிதைவை
எதிர்த்திடுங்கள் !
கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.
அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி—கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!
தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...
உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!
பூரண பல் பராமரிப்பிற்கு
கால்கேட் டூத் பிரஷ்
உபயோகியுங்கள்.
ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு அமைப்பு—15 ரகங்கள்.

"எங்கள் பள்ளிக்கூட டிரேஸ், வெள்ளை வெளேரென்று இருக்கணுமுன்னு எங்கள் டீச்சர் சொன்னுங்க-அதனுலேதான் எங்கம்மா எப்போதும் ராபின் ப்ளூவை உபயோகிக்கிருங்க."

ரோனியின் பிரிய பொழுதுபோக்கு.
ஸ்டாம்பு சேகரிப்பு



லட்சக் கணக்கான தாய்மார்கள் பள்ளி செல்லும் தங்கள் குழந்தைகளுக்கு அவ்விதமே செய்கின்றனர்.



வெள்ளைத் துணி-உடைகளை, சோப்பு அல்லது சுத்தமாக்கிகள்கொண்டு வெளுக்கச் செய்வது மட்டும் போதாது. மிகப் பளிச்சிடும் தூயவெண்மை ஆக்குவதற்கு அவற்றை ராபின் ப்ளூவில் மூழ்கச் செய்தெடுக்க வேண்டும்: ஒரு வாளி தண்ணீரில் ஒரு சிட்டிகை. ராபின் ப்ளூ அற்புதமாக வேலை செய்யும்.

ராபின் ப்ளூ

வெள்ளைத்துணி-உடைகளை மிகப் பளிச்சிடும் தூயவெண்மை ஆக்குகின்றது

ARBC-35 TAM

ஒரு பந்தயம் போட்டார்: அந்தக் கோயிலின் வாசலில் ஆயனர் இரண்டு அப்ஸர மாதரின் நடனத் தோற்றங்களை எழுத வேண்டுமென்றும், மேற் பாதி உருவங்களைத் தாம் குழைத்துக் கொடுக்கும் வர்ணங்களைக் கொண்டும், இடைக்குக் கீழே ஆயனரின் சொந்த வர்ணங்களைக் கொண்டும் எழுத வேண்டுமென்றும், மூன்று வருஷங்கள் கழித்து மீண்டும் வந்து பார்த்து, தாம் கூறுவது உண்மை என்று நிச்சயிக்கப்பட்டால், ஆயனர் சமண சமயத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் முனிவர் பந்தயத்துக்கு நிபந்தனை விதித்தார். அப்படி ஒப்புக் கொண்டால் மேற்படி வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தைச் சொல்லிக் கொடுப்பதாகவும் கூறினார்.

நிபந்தனையை ஒப்புக் கொண்ட ஆயனர் மேற்சொன்ன இரு வகைவர்ணங்களை உபயோகித்து அப்ஸர மாதர் சித்திரங்களை எழுதினார். மூன்று வருஷங்களுக்குப் பிற்பாடு சித்தர் மலைக்கு மறுபடியும் போய்ப் பார்த்தபோது, ஆயனர் தீட்டிய நடன உருவங்களின் மேற்பகுதிகள் அன்று எழுதியவை போல் வர்ணம் மங்காமல் விளங்கின; கீழ்ப் பகுதிகள் பெரிதும் மங்கிப் போயிருந்தன.

இதனால் பெரிதும் அதிசயமடைந்த ஆயனர், நிபந்தனைப்படி சமண மதத்தைத் தழுவி, அந்த இரகசியத்தை அறிந்து கொள்ளச் சித்தமாயிருந்தார். ஆனால், நிபந்தனை விதித்த சமண ஓவியர் அப்போது அங்கு இல்லை! சக்கரவர்த்தி சைவரானது பற்றிக் கோபங் கொண்டு, பல்லவ சாம்ராஜ்யத்திலிருந்து போய்விட்ட அநேக சமண முனிவர்களைப் போல் அவரும் போய் விட்டார்! ஆனால், அந்த அழியாத வர்ணச் சேர்க்கையின் இரகசியத்தை அறிந்துகொள்வதில் ஆயனருக்கு அன்று ஏற்பட்ட ஆவல் இன்று வரையில் வளர்ந்து கொண்டேயிருந்தது.

* * *

மேற்படி வரலாற்றைக் கேட்டுக் கொண்டிருந்த புத்தபிக்ஷு முடிவில், "ஆயனரே! கவலை வேண்டாம்! உங்களுடைய ஆவல் நிறைவேறும் காலம் நெருங்கி விட்டது. பரஞ்சோதிக்கு நீங்கள் குதிரையும் பிரயாண அனுமதியும் வாங்கிக் கொடுப்பதுதான் தாமதம். வெகுசீக்கிரத்தில் உங்கள் மனோரதம் நிறைவேறும்!" என்றார்.

பரஞ்சோதியும் மிக்க உற்சாகத்துடன், "ஆம், ஐயா! தங்களுடைய மனோரதம் என்னால் நிறைவேறுவதாயிருந்தால் அது என்னுடைய பாக்கியந்தான். என்ன அபாயம் வந்தாலும் பின்வாங்காமல் காரியத்தை முடித்துக் கொண்டு வருகிறேன்" என்றான்.



சிவகாமியின் உள்ளத்திலோ முரண்பட்ட எண்ணங்கள் தோன்றிப் போட்டியிட்டன. ஆயனருடைய ஆவலையும், அந்த ஆவல் நிறைவேறினால் அவர் அடையக்கூடிய மகத்தான ஆனந்தத்தையும் அவள் அறிந்துதான் இருந்தாள்; ஆனாலும், புத்தபிக்ஷுவின் தூண்டுதலால் நடக்கும் இந்தக் காரியத்தில் ஏதாவது சூதும் சூழ்ச்சியும் இருக்குமோ என்று அவள் மனம் ஐயுற்றது. ஆகவே, பரஞ்சோதியைத் தனியாகப் பார்த்து எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று அவள் தனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டாள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

சத்ருக்னன்

ஆயனர் வீட்டிலிருந்து புறப்பட்ட மகேந்திர பல்லவர் குதிரையை விரைவாகச் செலுத்திக் கொண்டு சென்று சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த தம் பரிவாரங்களை அடைந்தார். அங்கே குதிரையைச் சற்று நிறுத்தி, கூட்டத்தில் ஒருவன் மீது பார்வையைச் செலுத்தினார். அந்த மனிதன் சக்கரவர்த்தியின் பார்வையில் இருந்த சமிக்ஞையைத் தெரிந்து கொண்டவனாய், அவரை நெருங்கி வந்து பணிவாக நின்றான்.

"சத்ருக்னா! உனக்குச் சிற்பக் கலையில் பயிற்சி உண்டா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

சத்ருக்னன் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல், "இல்லை, பிரபு!" என்றான்.

"இவ்வளவுதானா? சிற்பக் கலையில் கொஞ்சமாவது உனக்குப் பயிற்சி இருக்க வேண்டும். அதற்கு இந்த இடத்தைக் காட்டிலும் நல்ல இடம் கிடையாது. ஆயனருடைய சீடப் பிள்ளைகள் செய்யும் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாலே போதும்."

திருமலையப்பன் திருமயிலையிலே!

சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீ வேதாந்த தேசிகன் தேவஸ்தானத்தைப் பற்றி ஆஸ்திகர் அறிந்திருப்பர். திருப்பதி வேங்கடேசருடைய ஆலயமணியின் அவதாரமாகவே ஸ்ரீ தேசிகன் கருதப்படுவதற்கேற்ப, இதில் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளும், அலர்மேல்மங்கைத் தாயாரும் குடிகொண்டுள்ள சிறு கோயில் உள்ளது. இதனை மேலும் விரிவுபடுத்த விரும்பி, ஸ்ரீ வைஷ்ணவ முக்கிய மடாதிபதிகளையும், பெருமக்களையும் கொண்டதொரு குழு திருப்பணி மேற்கொண்டிருக்கிறது. பெருமாள், தாயார் சந்நிதிகளுக்கு விமானம் எழுப்புவதும், முக்கியமான பிரதான கோபுரம் எழுப்புவதும் திருப்பணியின் மையமான அம்சங்கள். சுமார் நாலு லட்சம் தேவைப்படுகிறது. திருமலை பாலாஜியின் திவ்விய சக்தி நிகழ்ந்துள்ள ஸ்ரீநிவாசரிடமும் பரிணமிப்பதாக நம்பப்படுவதால், திருப்பணி இனிதே நிறைவேறும் என நம்பலாம். தொகை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ வி. வரதராஜன், பொருளாளர், திருப்பணி கமிட்டி, ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை -- 600004.

'' ஆக்ஞை, பிரபு! இப்போதே தொடங்குகிறேன்.''

''சிற்பம் கற்றுக் கொள்ளப் புதிதாக வேறு யாராவது இங்கே வந்தால், அவர்களையும் நீ கவனித்துக் கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் உன்னைக் கவனிக்க வேண்டியதில்லை.''

''அப்படியே'' என்று சத்ருக்னன் கூறியபோது அவனுடைய புருவங்கள் சிறிது மேலே சென்றன.

''நல்லது; சிற்பக் கலையைப் பற்றிப் புதிதாக ஏதேனும் தெரிந்துகொண்டால் உடனே வந்து எனக்குத் தெரிவிக்க வேண்டும்.''

இவ்விதம் கூறிவிட்டுச் சக்கரவர்த்தி மீண்டும் குதிரையை வேகமாகவிட்டார். அவரைத் தொடர்ந்து குமார சக்கரவர்த்தியும் குதிரையை வேகமாகச் செலுத்த, மற்றப் பரிவாரங்கள் அவர்களைப் பின்தொடர முடியாமல் பின்தங்கும்படி நேர்ந்தது.

சக்கரவர்த்திக்கும் சத்ருக்னனுக்கும் நடந்த சம்பாஷணை அரைகுறையாக நரசிம்மரின் செவியில் விழுந்தது. அது அவருடைய மனத்தில் பெரும் குழப்பத்தை உண்டாக்கிற்று. சிவகாமி கூறியபடி ஆயனரின் வீட்டில் வேல் எறிந்த வாலிபனைக் காணாதது மாமல்லருக்கு ஏற்கனவே வியப்பை உண்டாக்கியிருந்தது. இப்போது சக்கரவர்த்தி, ஆயனர் வீட்டைக் காவல் புரியும்படி பல்லவ ராஜ்யத்தின் மகா சமர்த்தனை ஒற்றனை ஏவியது மாமல்லரின் வியப்பைப் பன்மடங்கு அதிகமாக்கியதுடன், அவருடைய மனத்தில் என்னவெல்லாமோ சந்தேகங்களைக் கிளப்புவதற்கு ஏதுவாயிற்று. அதைப் பற்றித் தந்தையைக் கேட்க வேண்டும் என்று அவர் எண்ணினார். ஆனால், மகேந்திரரோ அந்தக் காட்டு வழியில் குதிரையைப் பாய்ச்சலில் விட்டுக் கொண்டு போனார். சக்கரவர்த்தி குதிரையை விரைவாகச் செலுத்தினால் அவர் ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சிந்தனை செய்வதற்கு அறிகுறி என்பதை மாமல்லர் அறிந்தவராகையால், விஷயத்தைத் தெரிந்து கொள்ள அவருடைய அவல் இன்னும் அதிகமேயாயிற்று. அவருடைய குதிரையும் நாலு கால் பாய்ச்சலில் சென்றது.

காட்டைத் தாண்டியதும் காஞ்சியிலிருந்து மாமல்லபுரத்துக்குப் போகும் இராஜபாட்டை தென்பட்டது. அந்தச் சாலையோரமாக ஒரு பெரிய கால்வாய் ஓடிற்று. அந்தக் கால்வாயில் ஒன்றன்பின் ஒன்றாகப் படகுகள் காஞ்சியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. படகுகளில் பெரும்பாலும் நெல் மூட்டைகள் ஏற்றியிருந்தன. ஒவ்வொரு படகையும் இரண்டு ஆட்கள் தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

இருபுறத்திலும் மரமடர்ந்த விசாலமான சாலையும், தெளிந்த நீரையுடைய கால்வாயும், கால்வாயில் மிதந்து வந்த படகுகளும், கால்வாய்க்கு அப்பால் மரங்களின் ஊடாக வெகு தூரத்துக்குத் தெரிந்த பசுமையான சமவெளியும் மனோகரமாகக் காட்சியளித்தன. கால்வாய் நீரில் ஆங்காங்கு மரங்களின் கருநிழல் படிந்திருந்த இடங்கள் கண்களைக் குளிரச் செய்தன. சற்றுத் தூரத்தில் சென்ற படகுகளில் ஒன்றிலிருந்து படகோட்டி ஒருவன்,

> **செங்கனி வாயில் ஒரு**
> **வெய்ங்குழல் கொண்டிசைத்து**
> **தேனிசைதான் பொழிவோன்**
> **யார் யார் யார்? கிளியே**
>
> **செந்தாமரை முகத்தில்**
> **மந்தகாசம் புரிந்து**
> **சிந்தை நிறையாக் கொள்வோன்**
> **யார் யார் யார்? கிளியே!**

என்று இனிய குரலில் உணர்ச்சி ததும்பப் பாடிய இன்னிசைக் கீதம் இளங்காற்றிலே மிதந்து வந்தது.

இத்தகைய சாந்தமும் இன்பமும் அமைதியும் அழகும் குடிகொண்ட

வளரும் குழந்தைகளுக்கு இனிய போர்ன்விடா!



சக்தி வளரட்டும்! பள்ளியிலும்... விளையாட்டிலும்!

சக்தி வளரட்டும்! பள்ளியிலும் விளையாட்டிலும், இன்றும் என்றுமே வெற்றி அவனுக்கே. ஆம்! அவன் சுவைத்துப் பருகுவது போர்ன்விடா. ஊட்டமளிக்கும் **கோகோ,** பால், மால்ட், சர்க்கரை இவை இனிதே கலந்திட்ட போர்ன்விடாவிலே அடங்கியுள்ளது அவனுடைய ஒளிமிக்க எதிர்காலம்.

ஊட்டமளிக்கும் போர்ன்விடா ஒரு இன்சுவையுள்ள பானம். ஏனெனில் இதில் கோகோ உள்ளது.



காட்பரிஸ்
போர்ன்விடா சக்திக்கும் வலிமைக்கும் மற்றும் [illegible]

OBM-0449 TAM

கவர்ந்திடுமே கோகுல்!



கோகுல் மங்கை. மணம் கவர் நங்கை. அவள் தனிக் கவர்ச்சியை நீங்களும் பெற உபயோகிப்பீர் கோகுல் ஸ்ாண்டல்வுட் டாய்லெட் பவுடர்.

நூறு சதம் தூய மைசூர் சந்தனம், வெளிநாட்டு வாசனை திரவியங்கள், பலவித இயற்கை மூலிகைகள் இவை யனைத்தையும் ஒருங்கே கொண்டு பிரத்தியேகமான 'மைக்ரோ:ஃபைன்' முறையில் தயாரிக்கப்படுவது கோகுல் ஸ்ாண்டல்வுட் டாய்லெட் பவுடர்.


கோகுல்

ஸாண்டல்வுட் டாய்லெட் பவுடர்

டி.எஸ்.ஆர் & கம்பெனி, மதராஸ்

பிரத்தியேக தயாரிப்பு

கோகுல் நறுமணம் சூழட்டும்
உங்கள் வாழ்வு கமழட்டும்!



டி.எஸ்.ஆர் & கம்பெனி, மதராஸ்
ராமாபுரம். மதராஸ் 600089

காட்சியைக் குலைத்துக் கொண்டும், "இது பொய்யான அமைதி; சீக்கிரத்திலே இடியும் மழையும் புயலும் பூகம்பமும் வரப் போகின்றன!" என்று மௌனப் பறையறைந்து தெரிவித்துக் கொண்டும் அக்கால்வாயில் நெல்லேற்றிய படகுகளுக்கு நடுவிலே ஆயுதங்கள் ஏற்றிய படகு ஒன்றும் வந்து கொண்டிருந்தது. அதில் வேல், வாள், ஈட்டி, கத்தி, கேடயம் முதலிய விதம் விதமான போர்க் கருவிகள் நிறைந்திருந்தன.

அது வரையில் மௌனமாக நின்று அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சக்கரவர்த்தி ஆயுதப் படகைக் கண்டதும், "ஆகா! பல்லவ சாம்ராஜ்யத்தில் யுத்த ஆயத்தங்கள் பலமாகத்தான் நடக்கின்றன!" என்று பரிகாசமும் மனக் கசப்பும் தொனித்த குரலில் கூறிவிட்டு, பக்கத்தில் குதிரை மேலிருந்த தம் குமாரரைப் பார்த்தார். அவருடைய முகத் தோற்றத்தைக் கவனித்ததும், "நரசிம்மா! ஏதோ கேட்க விரும்புகிறாய்போலிருக்கிறதே!" என்றார்.

"எப்படித் தெரிந்தது, அப்பா!" என்றார் குமார சக்கரவர்த்தி.

"உன் முகம் தெரிவிக்கிறது. அபிநயக்கலை, முகபாவம் ஆகியவைகளைப் பற்றி இப்போதுதானே பேசிவிட்டு வந்தோம்? — கேட்க விரும்பியதைக் கேள்!" என்றார் தந்தை.

"சத்ருக்னனை எங்கே அனுப்பினீர்கள்?"

"ஆயனர் வீட்டுக்கு."

"எதற்காக?"

"ஒற்றனை வேறு எதற்காக அனுப்புவார்கள்? வேவு பார்ப்பதற்குத்தான்!"

"என்ன சொல்லுகிறீர்கள், அப்பா! ஆயனச் சிற்பியின் வீட்டை வேவு பார்க்கும்படியான அவசியம் என்ன ஏற்பட்டது?"

"யுத்த காலத்தில் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மாமல்லா! இம்மாதிரி சமயங்களில் சந்நியாசியின் காவித் துணிக்குள்ளே எதிரியின் ஒற்றன் ஒளிந்திருக்கலாம். சிற்பக் கலைக்குள்ளே சதியாலோசனை இருக்கலாம்."

நரசிம்மர் தம்மை மீறிய பதைபதைப்புடன், "ஆகா! இது என்ன?





ஆயனச் சிற்பியா நமக்கு எதிராகச் சதி செய்கிறார்? என்னால் நம்ப முடியவில்லையே!" என்றார்.

"ஆயனச் சிற்பி சதி செய்வதாக நான் சொல்லவில்லையே? அந்தப் பரம சாது நமக்காக உயிரையே விடக் கூடியவராயிற்றே!"

மாமல்லர் சிறிது சாந்தம் அடைந்து, "அப்படியானால் ஆயனர் வீட்டுக்கு ஒற்றனுடைய காவல் எதற்காக?" என்று கேட்டார்.

"கள்ளங் கபடமற்ற அந்தச் சாது சிற்பிக்குத் தெரியாமல் அவர் வீட்டில் பகைவர்களின் ஒற்றர்கள் இருக்கலாம் அல்லவா?"

"ஆயனர் வீட்டில் ஒற்றர்களா? தங்களுக்கு எப்படித் தெரிந்தது? நான் ஒருவரையும் பார்க்கவில்லையே?"

"மாமல்லா! இராஜ்ய நிர்வாகத்தில் ஈடுபட்டவர்களுக்கு எப்போதும் கண்ணும் காதும் திறந்திருக்க வேண்டும். யுத்த காலத்தில் இது மிகவும் அவசியம். ஆயனர் வீட்டில் நாம் இருந்த போது உன் கண்கள் என்ன செய்து கொண்டிருந்தன?" என்று கேட்டவண்ணம் சக்கரவர்த்தி நரசிம்மரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

அங்கே தம் கண்கள் சிவகாமியின் கண்களுடன் அந்தரங்கம் பேசுவதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தன என்பது ஞாபகம் வரவே, நரசிம்மருடைய பால் வடியும் இளம் வதனம் வெட்கத்தினால் சிவந்தது. அதே சமயத்தில் முன்னைவிட அதிக தூரத்திலிருந்து படகோட்டியின் இனிய கீதம் மெல்லிய குரலில் பின்வருமாறு கேட்டது:

கண்ணன் என்றங்கேயொரு
கள்வன் உளனென்று
கன்னியர் சொன்னதெல்லாம்
மெய்தானோ? கிளியே!

வெண்ணெய் திருடும்பிள்ளை
என்னுள்ளம் கவர்ந்ததென்ன?
கண்ணால் மொழிந்ததென்ன?
சொல்வாய்! பைங்கிளியே!


(தொடரும்)



களைத்துக் கிடப்பவள் என்ன, காதல் கீதமா பாடிவிட முடியும் கணவர் நீங்கள் இல்லாமல். சமைத்தல், துலக்கல், தேய்த்தல் ...வீட்டு வேலையிலே உடம்பொடிய உழைத்துச் சோர்வடைகிறாளே, இதற்கு விடிவு?

நீங்கள் மனது வைத்தால் நடக்கும். க்ளியர்டோன் உதவியோடு. பிரஷர் குக்கர், இஸ்திரிப் பெட்டி, மிக்ஸி, மின்விசிறி.. இதுபோல் பலப்பல க்ளியர்டோன் சாதனங்கள் உள்ளன. வாங்கிக் கொடுத்துப் பாருங்களேன், டாண் டாண் என்று வீட்டு வேலைகளை முடித்துவிடுவாள்; ஓய்வு நேரத்தோடு உங்களிடம் வருவாள்.

கிட்டத்திலுள்ள க்ளியர்டோன் வியாபாரியிடம் அவளை இட்டுச் சென்று காண்பியுங்கள்; வகை வகையான வீட்டுபயோக சாதனங்கள். பிடித்தமானவற்றை அவள் எடுத்துக் கொள்ளட்டும். அவள் வாழ்வே மாறிவிடும். உங்கள் வாழ்வும்தான்..



Kleertone

க்ளியர்டோன்
வீட்டுபயோக
சாதனங்களின்
படைப்பகம்

தி நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ் கோ. லிட்.
பம்பாய் * கல்கத்தா * டெல்லி * சென்னை.

Creative Unit-933 TM



நேற்று வெளியான கல்கி சிறுகதைச் சிறப்பிதழ் பற்றி மனத்தில் ததும்பி வடிகால் தேடும் உணர்வுகளை முன்னிட்டு எழுதுகிறேன்.

இது கடைசிச் சிறுகதைச் சிறப்பிதழ் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். மனத்துக்கு வருத்தமாக இருந்தது. கல்கி வெளியிட்ட பன்னிரண்டு சிறுகதைச் சிறப்பிதழ்களும், தமிழிலக்கியம் என்ற வீட்டுக்குள் புத்தொளியும் புதுக் காற்றும் வருவதற்காகத் திறந்துவிடப்பட்ட ஜன்னல்களாக இருந்தன. உலக இலக்கியத்தின் நயங்களையும் கருத்துச் செறிவையும், ஆழத்தையும், அழகையும் சிந்தனைப் போக்கையும் அறிய அவை ஓரளவு உதவின. இங்குள்ள எழுத்தாளர்களுக்குப் புதிய ஆதர்சம் ஊட்டின. இந்தப் பணி இப்போது மிகவும் பெரிய அளவில் தேவைப்படுகிற பணி. ஜன்னல்களையெல்லாம் மூடிவிட்ட காரணத்தால்தான் நம் சிறுகதைகளில் வலிவும் வனப்பும் மிகவும் குறைந்தன.

டாம் கிரிஸ்டென்ஸனின் மறைந்த முகங்களில் மட்ஸுயா திடீரென்று நிமிர்ந்து பார்த்த போது அவன் கண்களில் ஏற்பட்ட மாறுதலையும், பாயில் சிறு சுடர் தோன்றி வளர்வதையும், மிக மிக அற்புதமாகத் தமிழில் கொண்டு வந்துவிட்டீர்கள். அந்த இடங்களைப் படித்த போது, ''பேஷ், பேஷ்'' என்று தன்னையறியாமலேயே வாய் பாராட்டியது.

ஹங்கேரியக் கதையும் ஸ்வீடிஷ் கதையும் அருமையானவை. சரளமான மொழிபெயர்ப்பு. ஹங்கேரியக் கதையின் ஆசிரியரின் பெயர் வெளியில் தெரியாமல் போனது பெரிய துரதிர்ஷ்டம்.

இம்மாதிரி நல்ல விருந்து அளித்து வந்ததை நிறுத்திவிடத்தான் போகிறீர்களா? எழுத்தாளர்களுக்காக எழுதப்பட்ட கதைகள் அல்லவா, இவையெல்லாம்! மாதம் ஒரு சிறுகதையாவது அயல்நாட்டுக் கதை வெளியிடலாமே !

சென்னை — 33
29—9—73 கல்பனா

இந்த வாரம் 30—9—73 கல்கி சிறுகதைச் சிறப்பிதழில் வெளிவந்திருந்த குளம் கட்டிய கண்ணீர் என்ற ஹங்கேரியக் கதையின் ஆசிரியர் பெயர் கரோலி கிஸ்ஃபாலுடி.

ஓலைக்கோடு
28—9—73 ஆர். கிருஷ்ணகுமார்

சென்ற 23—9—73 கல்கியில் பிரசுரமாகியிருக்கும் திரு செல்வராஜின் ''தெய்வ தரிசனம்'' சிறப்புச் சிறுகதை வரிசையில் எப்படி வர முடியும்? 'Where Love is, there God is' என்ற டால்ஸ்டாய் கதையின் தழுவலாயிற்றே அது?

கொச்சின் — 15
20—9—73 பத்மா

கல்கி 23—9—73 இதழில் வெளியான ''தெய்வ தரிசனம்'' (திரு செல்வராஜ் அவர்கள் எழுதியது) என்னும் சிறப்புச் சிறுகதை, பல ஆண்டுகளுக்குமுன் ஒன்பதாம் வகுப்புக்குரிய ஆங்கிலப் பாட நூல் ஒன்றிலிருந்த சிறுகதையின் மொழிபெயர்ப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கோவை — 14
22—9—73 ந. சுப்பிரமணியன்

தங்களின் 25-9-73 தேதியிட்ட கடிதமும் அத்துடன் இணைந்த திரு ந. சுப்பிரமணியம் எழுதிய கடிதமும் கிடைக்கப்பெற்றேன்.

ஒரு நாள் காலை, (சில மாதங்களுக்குமுன்) என் நண்பர் ஒருவரின் வார் அறுந்த செருப்பை என் வீட்டுக்கு எதிரிலிருந்த வேப்ப மரத்தடி பெரியவர் ஒருவர் (செருப்பு தைப்பவர்) தைத்துக் கொடுத்ததற்கு என் நண்பர் பத்து பைசா கொடுத்தார்.

அதை அப்பெரியவர் உடனே ஒரு பிச்சைக்காரிக்குக் கொடுத்ததை நான் பார்த்தேன். நெஞ்சைத் தொட்டது !

பைபிள் நூலைப் படித்தபோது நான் படித்த வாசகங்களோடு அந்தப் பெரியவரின் செய்கையையும் இணைத்துக் கற்பனை செய்து எழுதியதுதான் 'தெய்வ தரிசனம்'.

'தெய்வ தரிசனம்' என் சொந்தக் கற்பனையில் உருவானதே என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை செல்வராஜ்
28—9—73

அண்மையில் இந்தியப் பிரதமர் சென்னை வந்திருந்த போது அவர்கள் கலந்துகொண்ட இரு நிகழ்ச்சிகளில் ஜவாஹர்லால் நேரு, இந்திரா காந்தி, கே. கே. ஷா, கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி ஆகிய பெயர்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக் கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காக நன்கொடைகள் வழங்கப்பட்டது நல்லதே. ஆனால் அண்ணல் காந்தி அடிகள் பெயரால் ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவுகூட சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப் படாமல் இருப்பது ஏக்கத்துக்கு உரியதாய் உள்ளது. இந்தியாவிலுள்ள மூத்த பல்கலைக் கழகங்கள் மூன்றுள் ஒன்றாகிய சென்னைப் பல்கலைக் கழகத்தில் காந்தியம் பற்றி ஆராய்வதற்கு ஒரு துறையோ ஒரு பேராசிரியர் நிலையோ ஏற்படுத்தப்படுவது பெரிதும் போற்றத்தக்கதாகும்; இவ்வகையில் தமிழகம் கருத்துச் செலுத்துவதாக.

சென்னை. ந. சஞ்சீவி
தமிழ்த்துறைப்பேராசிரியர் —
29—9—73 தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்





NSFC (என் எஸ் எ∴ப் ஸி) இப்போது உங்களுக்குத் தயாரித்து வழங்குகிறது நிர்கார்ட். நிர்கார்ட் இந்தியாவின் முதல் நைலான் டயர் கார்ட். அது மிக்க வலிமையுள்ளது. நீடித்து உழைக்கக் கூடியது.

இதே நைலான் டயர் கார்ட்தான் கனவாகன டயர் உற்பத்தி பாதுகாப்பில் பெரும் முக்கிய பங்கு வகிக்கிறது. இது உட்புறத்திலே கனமான சட்டம் போன்ற வலுவைத் தருகிறது.

nircord®

இந்தியாவின் முதல் நைலான் டயர் கார்ட்

நிர்லான் ஸிந்தெடிக் ∴பைபர்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்
115, மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1

® ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.

Interpub/NIR-C-28A/72 Tm

வருகிறது வால் நட்சத்திரம்!

இவ்வாண்டின் கடைசி மூன்று மாதங்களில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வானை அண்ணாந்து பாருங்கள். மிகப் பிரகாசமான வால் நட்சத்திரம் தெரியும். உலகின் எந்தப் பகுதியில் இருப்பவரும் இந்த வால் நட்சத்திரத்தைக் காணலாம்.

இந்த வால் நட்சத்திரத்துக்குப் பெயர் 'கோஹௌடெக்'. பிரசித்தி பெற்ற ஹாலே வால் நட்சத்திரத்தை விட இது பத்து மடங்கு பிரகாசமானது. ஆகவே இது பிரகாசமாக ஒளிரும் கட்டத்தில் இதனைப் பகலில்கூடப் பார்க்கலாம்.

விநாடிக்கு ஐம்பது மைல்!

வான சாஸ்திரிகள் பூமியிலிருந்து மூன்றரைக் கோடி மைல் உயரத்தில் இது விநாடிக்கு ஐம்பது மைல் வேகத்தில் விரைந்து செல்லும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதன் நீண்ட வால் ஜ்வாலையில் விண்வெளித் தூசுகளும் ஹைட்ரஜன், அமோனியா வாயுக்களும் இருக்கும்.

சராசரியான ஓர் ஆண்டில் சுமார் அரை டஜன் சிறிய வால் நட்சத்திரங்கள் நமது சூரிய மண்டலத்தின் ஊடே பாய்ந்தோடிச் செல்கின்றன. ஆனால் அவைபற்றி வான சாஸ்திரிகள் தவிர பிறருக்கு அக்கறை இல்லை. ஏனெனில் அவை மிகச் சிறியவை. தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியின்றி அவற்றைப் பார்க்க இயலாது.

வான சாஸ்திரிகளுள் வால் நட்சத்திரங்களைக் கண்டுபிடிப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டவர் லூபாஸ் கோஹௌடெக். மேற்கு ஜெர்மனியில் ஹாம்பர்க் வான சாஸ்திரக் கூடத்தில் பணியாற்றுபவர். சென்ற மார்ச் மாதம் இரவு நேர வானத்தை வழக்கம்போல் இவர் புகைப் படங்கள் எடுத்துக் கொண்டிருந்தார்.

பிலிமைக் கழுவிப் பெரிய படங்களைத் தயாரித்ததும் ஒரு புகைப்படத்தின் ஓர் ஓரத்தில் கலங்கலான ஒரு வஸ்து லேசாகத் தென்படக் கண்டார். ஆனால் அந்த இடத்தை நோக்கி காமிராவை 'ஃபோகஸ்' செய்து படமெடுக்க அவருக்குப் பல நாள் கால தாமதமாயிற்று. காரணம், தேய்பிறை வந்து சந்திரன் ஒளி குன்ற அவர் காத்திருந்ததுதான்.

இதன் பின்னர் அவர் எடுத்த படம் அந்தக் கலங்கலான வஸ்து என்ன என்பதைக் காட்டிக் கொடுத்து விட்டது! ஒரு ராட்சத வால் நட்சத்திரம்! விஞ்ஞான உலகின் சம்பிரதாயப்படி இது உடனே 'கோஹௌடெக்' என்ற பெயரைப் பெற்று விட்டது.

பயபக்தியை ஊட்டும் காட்சி

"**ப**யபக்தியை ஊட்டும் இயற்கைத் தோற்றங்களுள் நம் வாழ்நாளில் நாம் பார்க்கிற மிக உன்னதமான காட்சியாக இது விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.'' — வான சாஸ்திர நிலையமொன்றின் சார்பில் ஒரு விஞ்ஞானி இவ்விதம் சமீபத்தில் இதனை வர்ணித்துள்ளார்.

உலகமெங்கணும் உள்ள வான சாஸ்திர நிலையங்கள் இந்த வால் நட்சத்திரத்தை ஆராய அவசர ஏற்பாடுகளை ஏற்கனவே கவனிக்க ஆரம்பித்து விட்டன. சிக்கலானதும் நுணுக்கமானதுமான பல பரிசோதனைகளுக்குச் சர்வதேச ஒத்துழைப்புத் தேவைப்படும்.

சாதாரணமாக அமெரிக்காவில் உள்ள வான சாஸ்திர நிலையங்கள் ஆஸ்திரேலிய நிலையங்களின் ஆராய்ச்சிகளுடன் தங்கள் முடிவுகளை ஒப்புநோக்கிப் பார்க்கும். இவர்கள் துரிதமாக முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கும்; ஏனெனில் வால்நட்சத்திரம் அக்டோபர் மத்தியில் வானில் தெரிய வரும். படிப்படியாக அதன் ஒளி கூடி வந்து டிசம்பர் மாதத்தில் இரவு வானின் மூன்றில் இரண்டு பங்கு நீளத்துக்குக் காணப்படும்.

விஞ்ஞானப் பசியும் ருசியும் உள்ளவர்களுக்குச் சிந்தித்துப் பார்க்க இதோ சில உண்மைகள்:

ஒரு வால் நட்சத்திரத்தின் மையப் பகுதி மிகச் சிறியதாக, பூமியின் கனபரிமாணத்தில் பத்துக் கோடியில் ஒரு பங்காக இருக்கலாம். அதன் வால் கேவலம் பத்து மைல் நீளமுள்ளதாகவே இருக்கலாம். ஆனால் வால்நட்சத்திரம் சூரிய மண்டலத்தை நெருங்க நெருங்க அதன் அளவு பெரிதாகும். சூரியனில் அவ்வப்போது ஏற்படும் கொந்தளிப்புக்களின் விளைவாக மின்காந்த சக்தி உடைய சிறு துகள்கள் வெளியே வீசி எறியப்படுகின்றன. இவை பரவலாக உள்ள பகுதிக்கு வால் நட்சத்திரம் வந்து விட்டால் வால்நட்சத்திரத்தின் மையப் பகுதி லட்சம் கோடி மீட்டர் குறுக்களவு உள்ளதாக வளர்ந்து விடலாம். பத்து மைல்



நீளமே உள்ள வால் பத்துக் கோடி மைலுக்கு நீண்டுவிடலாம்!

கோஹெளடெக் வால்நட்சத்திரம் பிரமாதமான ஆர்ப்பாட்டங்களுக் கிடையில் தோன்றினாலும் ஆபத்துச் சிறிதும் இல்லாதது. குடும்பத்துடன் நாம் பார்த்து ஆனந்திக்கக் கூடியது. வால்நட்சத்திரத்தினிடமிருந்து பிரிந்து நம்மை நோக்கி வரக் கூடிய சில்லறைத் துகள்களைப் பூமியைச் சுற்றியுள்ள பாது காப்புக் கவசம் — காற்று மண்டலம்—எரித்துச் சாம்பலாக்கி விடும்.

வால் நட்சத்திரம் தோன்றுவதால் டெலிவிஷன் ரேடியோ முதலியன சிறிதும் பாதிக்கப்படாது. ஒரு 'கரபுர' சத்தம்கூட அதிகரிக்காது. ஏற்கனவே உள்ள'கரபுர' குறையவும் செய்யாது!

கோஹெளடெக் வால் நட்சத்திரத்தை ஆராயும்போது வால் நட்சத்திரங்கள் எப்படி, எங்கே தோன்றுகின்றன என்ற புதிர் விடுபடலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

மூன்று விளக்கங்கள்

இதுவரை மூன்று விதமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. வால் நட்சத்திரம் என்பது உண்மையில் ஒரு நட்சத்திரமே அல்ல. நட்சத்திரம் என்பது சூரியனைப் போன்றது. அண்ட சராசரத்தில் கோடிக் கணக்கான சூரியன்கள், நட்சத்திரங்களாக ஜொலிக்கின்றன. பல்வேறு நட்சத்திரங்களுக்கு இடையே உள்ள அண்டப் பெருவெளியிலிருந்து வால் நட்சத்திரங்கள் வருகின்றன என்பது ஒரு கருத்து. நமது சூரிய மண்டலம் உருவானபோது வால் நட்சத்திரங்கள் பலவும் தோன்றின என்பது மற்றொரு கருத்து. சூரியனைச் சுற்றியுள்ள பிரதானமான கிரகங்களில் சில சமயம் பெரிய எரிமலைகளை விடப் பன்மடங்கு சக்திவாய்ந்த பயங்கர வெடிப்புக்கள், சிதறல்கள் ஏற்படும் போது வால் நட்சத்திரங்கள் உண்டாகின்றன என்பது மூன்றாவது கருத்து.

பத்தைப் பத்தால் பதினொரு தடவை பெருக்கினால் என்ன எண்ணிக்கை கிடைக்குமோ அத்தனை வால் நட்சத்திரங்கள் ஏதோ ஒருவிதமாகப் பல்வேறு நட்சத்திரங்களுக்கு இடையே உள்ள அண்டப் பெருவெளியில் சிக்கிக் கிடக்கின்றன என்றும், அவற்றிலிருந்து எப்போதோ ஒரு சமயம் ஒரு வால் நட்சத்திரம் தப்பித்துக்கொண்டு சூரிய மண்டலம் என்ற நமது சின்னஞ் சிறிய மூக்கு நோக்கி வருகிறது என்றும் கூறுகிறார்கள்.

பூசலோ பூசல்!

கோஹெளடெக் வால் நட்சத்திரம், ஆராய்ச்சியின்போது பல பிரச்னைகளை வானசாஸ்திரிகளுக்குத் தீர்த்து வைக்கலாம். ஆனால் அதனால் தீர்த்து வைக்கவே முடியாத ஒரு பிரச்னை நிச்சயம் உண்டு. அது வான சாஸ்திரிகளுக்கும் ஜோதிட சாஸ்திரிகளுக்கும் இடையே உள்ள பூசல். வான சாஸ்திரிகளுக்கு வால்நட்சத்திரம் என்பது விண்வெளி பௌதிகத்தில் ஒரு கவர்ச்சிகரமான அம்சம். ஆனால் ஜோதிட சாஸ்திரிகளுக்கு வால்நட்சத்திரம் பெரும் துயரங்களை அறிவிக்கும் சின்னம்.

மரணம், அழிவு, பஞ்சம் போன்ற இன்னும் பல ருசிக்காத விஷயங்களுக்கு வால்நட்சத்திரம் ஒரு முன்னறிவிப்பு என்று ஜோதிடர்கள் நம்புகிறார்கள்.

மேற்கத்திய நாடுகளில் மக்கள் பார்க்கும் விதமாக 1066ல் ஒரு வால்நட்சத்திரம் தோன்றியது. அதையொட்டி ஹேஸ்டிங்ஸ் யுத்தம் நடந்தது. யுத்தப் படத்தைக் கம்பளத்தில் அற்புத ஓவியமாக நெய்த கலைஞர்கள் வால் நட்சத்திரத்தையும் சேர்க்கத் தவறவில்லை. இன்றைக்கும் தொல்பொருள் காட்சி சாலையில் இது பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பிரிட்டனில் வைக்கிங் படையெடுப்பு ஆதி நாளில் நடந்ததற்கு முன்னால் ஒரு வால் நட்சத்திரம் தோன்றியதாக நம்பப் படுகிறது. எகிப்திய, ரோமானிய, இந்திய சம்பிரதாயங்களின்படி இத்தகைய கதைகள் எத்தனையோ உண்டு.

இது போன்ற துர்ச் சகுனங்களைக் காண விரும்புகிறவர்களுக்கு கோஹெளடெக் வால் நட்சத்திரம் வள்ளலாய் இருந்து வாரி வழங்கும்!

மறையும், மீண்டும் தோன்றும்!

வானுலகின் எரிகின்ற அறிவிப்பாகத் தோன்றி சூரியனிலிருந்து ஒரு கோடியே முப்பது லட்சம் மைல் தூரத்தில் விரைந்து செல்கிற இந்த வால்நட்சத்திரம் கிறிஸ்துமஸ் சமயத்தில் உச்ச கட்ட ஒளியுடன் உலக மக்கள் காணத் திகழும்.

டிசம்பர் 28ந் தேதி அது திடும்மென்று மறைந்துபோகும், சூரியனுக்குப் பின்னால்! அன்றிலிருந்து மூன்றாவது நாள் அதாவது டிசம்பர் 31ந் தேதி மீண்டும் வெளிப்படும். 1974ம் ஆண்டு முதல் தினத்தன்று அது விண்வெளியில் நம்மை விட்டுப் பிரிந்து பாய்ந்தோடிப் போகும்.

எல்லா வால்நட்சத்திரங்களும் ஒரு நீள் வட்டப் பாதையிலோ அல்லது அடிவாரம் நேர் கோடாகவும் மேலே அரை நீள் வட்ட வடிவாகவும் உள்ள ஒரு பாதையிலோதான் செல்கின்றன. ஆகவே, கோஹெளடெக் வால்நட்சத்திரத்தை இதற்கு முன்பும் பூமி கண்டிருக்கிறது என்பது நிச்சயம்.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் பெத்லஹமில் இரண்டு வயதான அல்லது இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் கணக்கெடுப்பு நடந்து அவற்றின் தாய்மார்களுக்குப் பெருந் துயரமாக முடிந்ததல்லவா? அந்தச் சமயத்தில் தோன்றியது இதே வால் நட்சத்திரம்தானோ என்று முதலில் நினைத்தார்கள். ஆனால் ஆராய்ச்சி பூர்வமான உண்மை இதை மறுத்துரைத்து விட்டது. சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கற்கால மனிதர்கள் வாழ்ந்த காலத்தில்தான் இந்த வால்நட்சத்திரம் இதற்கு முன் தோன்றியிருக்க முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**



திருமணம்

கல்கி ஊழியர் ஸ்ரீ சாமா அவர்களின் குமாரன் திரு எஸ். சங்கரநாராயணனுக்கும், ஸ்ரீ ஏ. வி. ராமச்சந்திரன் அவர்களின் குமாரத்தி சௌ. பிரேமாவுக்கும் அண்மையில் தர்ம பிரகாஷ் கல்யாண மண்டபத்தில் மிகவும் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. முகூர்த்தத்துக்குப் பல பிரமுகர்கள் விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்!



எழிலரசி-
ராய்ப்பூர்
இளவரசி
யாரோ?
ராய்ப்பூர் மில்ஸ்
துணிகள்





அபிமான்

பொறுமை பெருமை தரும் என்பர் பெரியர். "பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டே? எத்தனை காலம்தான் பொறுத்திருப்பது, ஒரு நல்ல படத்தைக் காண?" பொறுமையே பூஷணமான ரசிகர் கேள்வி இது!

கணவனும் மனைவியும், கணவனும் மனைவியுமாக நடிக்கும் படம் அபிமான். ஆம், அமிதாப் பச்சனும் ஜயா பாதுரியும் கதாநாயகன் கதாநாயகியாக வருகின்றனர்.

சொல்லி வைத்தாற் போன்ற கதை. எனவே சுவாரசியம் தட்டாத கதை.

கபீர் குமார் சிறந்த பாப் இசைக் கலைஞன். அவனுக்கு விசிறிகள் ஏராளம். அவன் ஒரு முறை சித்தியின் ஊருக்குப் போகிறான். அங்கே உமாவைச் சந்திக்கிறான். அவள் குரல் இனிமையோடு நல்ல சங்கீத ஞானமும் கொண்டவள். அவளிடம் உள்ளத்தைப் பறிகொடுத்துத் திருமணமே செய்து கொள்கிறான்.

நகரத்துக்கு வந்தபின், அவனது செயலாளன் சந்துரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்கிறான். அதில் கணவனும் மனைவியும் இசை விருந்தும் அளிக்கும்படியான நிலை ஏற்படுகிறது. அப்புறம் இணைந்து பாடுவது என்றாகிறது. கணவனைக் காட்டிலும் மனைவிக்குப் பொருளும் புகழும் கிட்டத் தொடங்கவே, ஆணின் ஆணவம் தலையெடுக்கிறது. பலன், கணவன் — மனைவி மனம் முறிந்து பிரிகின்றனர். உமா திரும்பத் தன் கிராமத்துக்கே போகிறாள். அவள் பிரமை பிடித்துப் பேசாமடந்தையாகிறாள். கணவனும் மனைவியும் சேர்ந்து பாடினால் பிரமை நீங்கிப் பழைய நிலைக்கு வரலாம் என்ற மனத் தத்துவம் இணைத்து வைக்கிறது. என்ன மனத்தத்துவமோ?

இந்த பலவீனமான கதையை முழுநேரப் படமாக நீட்ட முடித்ததே என்று ரிஷிகேஷ் முகர்ஜி பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

கதைப்படி, மனைவி பாடகியாகக் கணவனை விஞ்சி நிற்கிறாள் என்றால் நடிப்புப்படி அமிதாப் பச்சனை ஜயாபாதுரி விஞ்சி நிற்கிறாள். இதற்காக அவர் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் திரைக்கதையில் போலவே சொந்த வாழ்க்கையிலும் ஆணவம் தலைதூக்கிக் குளறுபடி செய்யாமல் இருந்தால் சரி.

ஜயாபாதுரி மட்டும்தானா, ரசிகர்கள்கூடப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம், இந்த அறுவையை முழுசாகப் பார்த்து மகிழும் பொறுமை நமக்கு எப்படி வந்தது என்று! அப்பொழுது உண்மையாகப் பெருமை தேடித்தந்தவர் இருவர் மனக் கண் முன் நிற்பார்கள். ஒருவர் ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல் நல்லிசை வழங்கிய எஸ். டி. பர்மன். மற்றவர் எப்பொழுதும் போல் வில்லியாக வராமல் 'நல்லி' யாக வந்து தம் நடிப்புக்கு மெருகேற்றிக் கொண்டிருக்கும் பிந்து.

— ரா.வீ

உங்கள் குடும்பத்தினரின் உடல்நலம் ஓங்கியிருக்க அவசியம் அளியுங்கள் மிகச் சிறந்ததையே

அவர்களுக்கு விவா கொடுங்கள்.



விவா நூதன உணவு தொழில் நுட்பத்திறமையில் உருவானது. இதில் மற்ற ஆரோக்கிய உணவுப் பானங்களில் உள்ளதைப்போன்று தூய்மையான, முழுமை பெற்ற ஆடைப்பாலும் பார்லி மால்ட்டும் உள்ளன. ஆயினும் விவாவில் மட்டுமே கோதுமை மால்ட் அடங்கியுள்ளது.

கோதுமை மால்ட் எதற்கு?

ஏனெனில், அதில் வளமைமிக்க கார்போஹைட்ரேட், புரதங்கள், விடமின்கள் மற்றும் கனிஜ சத்துக்கள் எளிதில் சீரணிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோதுமை மால்ட் கலந்திருப்பதால் விவா அதிக அளவு ஊட்டச்சத்து உள்ளதாய், பூரணமான இன்சுவையோடு, வளமிக்க பொன்னிறம் கொண்டு, உடனடியாகக் கரையும் தன்மையோடு விளங்குகிறது.

ஆகவே, உங்கள் அன்றாட உணவிலுள்ள பற்றுக்குறைகளை ஈடுசெய்ய சரியான, போதுமான ஊட்டச் சத்து அளிக்கவேண்டுமென்றால் அதற்கு விவா போல வேறு எதுவும் சிறந்ததல்ல

மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்க இதோ அரியதொரு வாய்ப்பு.

விவாவையே தேர்ந்தெடுங்கள்.



ASP/JIL-V-1A/73 TAM



"உங்களுடைய 'பொற்காலத்'தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்று சந்திர மோகனிடம் கூறினேன்.

"இதுதான் என்னுடைய பொற் காலம் சார்! பெண்களின் பின்னால் நான் சுற்றி யலைந்து திரிந்து கொண்டிருந்த இரண்டு மூன்று வருடங்களும் வெறும் 'பித்தளைக் காலம்' என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறேன் இப்போது. கல்லூரி மாணவிகளைக் கேலி செய்து கொண்டு அவர்களை நிழலைப் போலப் பின்தொடர்ந்து சுற்றிய காலத்தில் நான் என் பணத்தை மட்டுமா இழந்தேன்? நேரத்தை இழந்தேன்! படிப்பை இழந்தேன்! என் 'காரெக்டரை' இழந்தேன். நாலுபேர் பார்த்து இகழும்படியாக நடந்து கொண்டதை எண்ணி இப்போது வருந்துகிறேன்; வேதனைப்படுகிறேன்! 'மனம் திருந்தினேன்' என்ற உங்கள் கட்டுரைத் தலைப்புக்கு முற்றும் நான் தகுதியானவன்!" என்று மனம் திறந்து பேசத் தொடங்கினார் சந்திரமோகன்.

"இந்த விவகாரத்தில் எப்போது முதல் ஈடுபடத் தொடங்கினீர்கள்?"

"எது — 'ஈவ் டீஸிங்'தானே? பதினெட்டாவது வயதிலேயே ஆரம்பம்! இருபது வயதுக்குள் எத்தனையோ அநுபவங்கள் எனக்கு ஏற்பட்டு விட்டன! சிகரெட், சீட்டாட்டம், காபரே காட்சிகள் நடைபெறும் ஓட்டல்களுக்கு விஜயம் செய்து, இன்னும்... உம்..."

"என்ன தயங்குகிறீர்கள்?"

"இவ்வளவு சொன்னபிறகு அதை மட்டும் மறைப்பானேன்? என் தகப்பனாரின் அறையில் தனியாக ஒரு ஃப்ரிஜ் உண்டு. அப்பாவுக்குத் தெரியாமல் ஃப்ரிஜ்ஜில் அவர் வைத்துள்ள மது வகைகளைக்கூட ருசி பார்த்திருக்கிறேன். நல்ல காலம், அந்தப் பழக்கத்துக்கு நான் அடிமையாகாமல் தப்பி விட்டேன்!"

"உங்கள் முதல் 'ஈவ்-டீஸிங்' அநுபவம் எங்கே?"

"தியேட்டரில்தான் ஆரம்பமாயிற்று. மூன்று நண்பர்களுடன் 'லிவோறு' பார்க்கப் போயிருந்தேன். பிற்பகல் முழுதும் கல்லூரி விடுமுறை. விடுமுறை விடப்படாத மகளிர் கல்லூரி மாணவிகள் பலர் பிற்பகல் வகுப்புக்களுக்கு மட்டம் போட்டுவிட்டு வந்திருந்தார்கள். இலேசாகச் சீட்டியடித்து முன் வரிசையில் இருந்த மாணவிகளின் கவனத்தை ஈர்க்க முயன்றோம். பார்க்கப் போனால் எங்களைக் கவர்ந்த குற்றம் அம்மாணவிகளுடையது என்றே சொல்வேன்! அவர்கள் உடையணிந்திருந்த விதம்... ஸ்லீவ்லெஸ், ஸீ-த்ரூ, மினி ஸ்கர்ட் — இத்யாதி, எங்கள் இளமைத் துடிப்புக்குத் தூபம் போட்டன. படம் முடியும்வரை அவர்களைச் சீண்டிக் கொண்டே யிருந்தோம். படம் முடிந்து தியேட்டரை விட்டு வெளியே வந்த பிறகும்

பெண்மையைப் போற்றுதல் ஆண்மையின் பொறுப்பு!



அவர்களைப் பின்தொடர்ந்து சென்றோம். டாக்ஸி பிடித்து அவர்கள் ஏறிச் சென்ற பிறகு எனக்கு ஒரே ஏமாற்றம்! என்னைக் கவர்ந்த ஸ்லீவ்லெஸ் ஜானியை எப்படியாவது மீண்டும் கண்டுபிடித்து...''

''ஜானியா?''

''ஆமாம், சார்! அப்படித்தான் அவளை அவளது தோழிகள் தியேட்டரில் அழைத்தார்கள். அவள் பெயர் ஜான்ஸி என்று பின்னர் தெரிந்து கொண்டேன். பிறகு பல சந்தர்ப்பங்களில் கடைசி வகுப்புக்கு 'மட்டம்' போட்டுவிட்டு மகளிர் கல்லூரி அமைந்துள்ள சாலையில் போய் நிற்பேன்.''

''குறிப்பிட்ட அந்தப் பெண் ஜான்ஸியைப் பார்க்கத்தானே?''

''இல்லை. அழகான குமரிகள் யாராக இருந்தாலும் சரி; அவர்களிடம் சேட்டை புரிவது எனக்கு வாடிக்கையாகி விட்டது. ஒரு நாள் தற்செயலாக பஸ் ஸ்டாண்டில் ஜானியைக் காண நேர்ந்தது. ஸ்கூட்டரைக் கொண்டு போய் நிறுத்தி, 'லைக் டு ஹாவ் எ லிஃப்ட்?' என்றேன். அவள் முகத்தை மறுபுறமாகத் திருப்பிக் கொண்டாள்.

'' 'ஜானி! ஹனி! உன்னைத்தான் கேட்கிறேன்' என்றேன். நான் அவள் பெயரைச் சொல்லி அழைத்ததாலோ என்னவோ அதிர்ச்சியடைந்தாள் அவள். மறு கணம் அவள் மறுபுறம் தலையைத் திருப்பித் 'தூ'வென உமிழ்ந்தாள். இதைப் பலர் பார்த்துக் கொண்டிருந்ததால் எனக்கு அவமானமாகி விட்டது. அங்கிருந்து கோபத்துடன் கிளம்பி விட்டேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மெரினா கடற்கரை மணலில் நடந்து கொண்டிருந்த போது உருண்டு திரண்ட புஜம் ஒன்று என் தோளைப் பற்றியது. டெரிகாட் ஸ்லாக் சட்டையின் உட்புறம் 'மஸில்'கள் இரண்டு முறுக்கேறி நின்றதைக் கவனித்தேன். ஜானியின் அண்ணனாம் அவன்! வஜ்ரம் பாய்ந்த அவனது புஜம் ஒரு தடவை என் முகத்தில் விளையாடியிருந்தால் நான் நேரே பல் டாக்டரிடம் போயிருக்க வேண்டும்! 'இனிமேல் ஜானியின் நிழல்கூட உன்மீது விழாமல் பார்த்துக்கொள், தம்பி! இதையெல்லாம் விட்டுவிடு!' என்று கட்டளையிடுவது போல் கூறிவிட்டு அகன்றான் அவன். எனது தோள்பட்டையில் அவன் பற்றிய இடம் இன்னமும் வலித்தது. பஸ் ஸ்டாண்டிலேயே ஜானி என் ஸ்கூட்டரின் 'நம்பர் பிளேட்'டைக் கவனித்திருக்கிறாள். அதன் பிறகு என்னைத் தேடிக் கண்டுபிடிப்பது அவனுக்குச் சிரமமா என்ன?''

''அன்று முதல் நீங்கள் 'ஈவ்-டீஸிங்' நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டீர்களா?''

சந்திர மோகன் பெரிதாகச் சிரித்துவிட்டுக் கூறுகிறார்: ''அவ்வளவு சீக்கிரமாகவா? அதன் பிறகு இரண்டு வருடங்கள் நீடித்தது எனது திருவிளையாடல்கள்! பல பெண்களுடன் தியேட்டர், ரெஸ்டாரண்ட், காபரே, டிஸ்கொதே — இப்படிப் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஒரு தடவை காவல் நிலையத்தில் நான் மூன்று மணி நேரம் 'இண்டராகேஷ'னுக்காகத் தங்கியிருக்க நேர்ந்தது! அப்புறமும் என் போக்கு மாறவில்லை. பி. யு. ஸி. தேர்வில் மார்ச் மாதம் 'கோட்' அடித்தேன். ஓர் ஆண்டு வீணாயிற்று. பி. ஏ. வகுப்பில் எனக்கு இடம் வாங்கித் தர என் தகப்பனார் பட்ட சிரமத்தை எண்ணிப் பார்த்திருந்தால் உடனடியாகத் திருந்தியிருப்பேன்! பி.ஏ. இரண்டாம் ஆண்டுத் தேர்வில் ஆன்ஸிலரி பாடம், தமிழ் இரண்டிலும் தோல்வி! அப்புறமும் நான் திருந்தவில்லை!''

''பிறகு எப்போதுதான் திருந்தினீர்கள்?''

சந்திரமோகன் சொன்னார்: ''...மகளிர் கல்லூரியில் ஓர் எக்ஸிபிஷன் நிகழ்ந்ததே நினைவிருக்கிறதல்லவா? விளக்குகள் அணைந்து ஒரே குழப்பமும் கலாட்டாவாகவும் முடிந்ததே — அங்கு நானும் ஆஜராகியிருந்தேன்.! குறிப்பிட்ட ஒரு ஸ்டாலில் இருந்த பெண்ணொருத்தியின் அழகு என்னைக் கொள்ளை கொண்டது. சற்று நேரம் அவளைச் சீண்டி வம்புக்கு இழுத்தேன். அவளும் சிரித்துச் சிரித்துப் பேசினாள் — எட்ட நின்றபடியே! எத்தனை நேரம்தான் அங்கேயே நிற்பது? அருகிலுள்ள ஸ்டால்கள் பக்கம் சுற்றினேன். மனம் என்னவோ அந்த அழகியையே நாடியது. திடீரென்று அந்தப் பகுதியில் உள்ள விளக்குகள் எல்லாம் அணைந்தன. சுற்றிலும் ஒரே காரிருள். குமரிப் பெண்களின் கூக்குரலும் வீறிடும் அலறலும் பல திசைகளிலும் எழுந்தன. ஏதோ ஒரு வெறி — என்னுள்ளிருந்த சைத்தான் என்னை உந்தியது. அந்த அழகி நின்ற ஸ்டாலுக்கு விரைந்தேன். ஒரு பெண் மேஜைக்கு அடியில் ஒளிவதைக் கண்டு தாவிக் குதித்தேன். ஸ்டாலுக்குள் மேஜையின் கீழ் குனிந்து மண்டியிட்டு அந்தப் பெண்ணின் கையைப் பற்றி 'ஓ! ஹனி! யூ ஆர் ஹியர்! ஹௌ லவ்லி!' — இப்படி ஏதேதோ சொன்னேன். அவள் தன் கைகளை உதறிக் கொண்டு எழுந்து நிற்க முயன்றாள். ஸ்டாலின் பின்புறமாகச் சென்ற ஒரு முதியவர் 'டார்ச்' விளக்கைப் பொருத்தினார். அருகிலிருந்த பெண்ணின் முகத்தில் ஒளி வெள்ளம் பாய்ந்தோடியது. நான் சிலையாக நின்றேன்! உண்மை கற்பனையை விட ஆச்சரியமானது என்பார்களே எவ்வளவு அனுபவபூர்வமான வாக்கு அது! நான் அந்தப் பெண்ணின் பாதங்களைத் தொட்டுப் பிடிக்காத குறைதான்! ''மன்னித்துவிடு, ரேணு! இங்கு இதற்கு முன் நின்றவள் என்று நினைத்துக்கொண்டு விட்டேன். அவள் போய் நீ வந்தது தெரியாது'' என்று கூறிவிட்டுக் கைகூப்பினேன், நடுக்கத்துடன். என் நண்பன் — என்னோடு சேர்ந்து குமரிப் பெண்களைச் சீண்டி விளையாடிய வகுப்புத் தோழன் மாணிக்கவாசகத்தின் தங்கை ரேணுகாவே அந்தப் பெண்! டார்ச் விளக்கு அடித்த பெரியவர் ஏதோ முணு முணுத்துவிட்டு அப்பால் தம் உதவி தேவைப்படக் கூடிய வேறு ஸ்டால்களுக்குப் போய்விட்டார். மாணிக்கவாசகத்திடம் இதைப் பற்றிக் கூறுவதில்லை என்று ரேணுகா சத்தியம் செய்து தந்தாள். 'நடந்ததை நான் மறந்து விடுகிறேன். ஆனால் நீங்களும் மனம் மாறவேண்டும்' என்றாள். அன்றோடு என் திருவிளையாடல்களுக்கு முழுக்குப் போட்டேன். பி. ஏ. மூன்றும் வகுப்பில் தேர்வு பெற்று இப்போது வேலைக்கு முயன்று கொண்டிருக்கிறேன்.'' **பேட்டி: 'பாணன்'**

FOUR AND A HALF MILLION PEOPLE READ THE WEEKLY...

...NATURALLY!



It is Asia's finest illustrated magazine.

It gives you:

* Current Topics. The Weekly helps you to keep pace with tomorrow: lively comment on topical subjects — political, social, economic, cultural.

* Communities. The Weekly helps you know your neighbours — their origins, customs, rituals, their problems and their achievements.

* General Features. The latest in books, films, music, theatre, painting, short-stories, humour and satire, a fun-filled page for children; jokes — new and stale; your Fortune from the Stars, and loads of other interesting material.

All written by experts, yet lively and readable.

All illustrated by the finest photographers, artists and cartoonists of the country.

Make the Illustrated YOUR Weekly Habit



The Illustrated Weekly of India

மூன்று மாதங்களுக்கு மேலான குழந்தைகளுக்கு
அமுல் தரும் ஒரு புதிய முக்கிய உணவு

பாலஅமுல்

குழந்தையின் முதல் தானிய துணை உணவு
எளிதில் சீரணிக்கக் கூடிய புரதச் சத்து நிரம்பியது.



மூளையும் உடலும் முழுமையாக வளர

உங்கள் குழந்தை, பிறந்த மூன்றாவது மாதத்திலிருந்து, பால் குடிப்பதுடன், தானிய துணை உணவுகளையும் உட்கொள்ளுகிறது அல்லவா? சாதம், கூழ், வாழைப் பழம் போன்ற வழக்கமான உணவுகள் உங்கள் குழந்தைக்குப் போதுமான புரதச் சத்துக்கள் வழங்குவதில்லை; ஏனெனில் அவற்றில் மாவுப்பொருள் அதிகமாக உள்ளது. முதல் இரண்டு ஆண்டுகளில், போதிய புரதச்சத்து தந்தால்தான் உங்கள் குழந்தையின் மூளையும் உடலும் சீராக வளரும். பாலஅமுல் ஒரு சரிவிகித சத்துணவு. அதில் தரமுயர்ந்த பால் மற்றும் தாவர புரதச் சத்துக்கள் நிறைய உள்ளன. வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் மிகுந்துள்ளன. இவற்றால் உங்கள் குழந்தையின் மூளையும் உடலும் முழுமையாக வளர உறுதி கிடைக்கிறது.

வேலூரிலுள்ள கிறிஸ்டியன் மெடிகல் காலேஜ் அண்டு ஹாஸ்பிடலின் டாக்டர்கள் குழந்தைகளுக்குப் பாலஅமுல் புகட்டிப் பரிசோதனைகள் செய்து சிறந்த பலன் கண்டிருக்கிறார்கள்.

இலவசம்!
பாலஅமுல் பற்றிய விவரமான நூலை இலவசமாக பெற எழுதுக: தபால் பை 10124, பம்பாய் 400 001.



கைரா டிஸ்ட்ரிக்ட் கோ-ஆப்பரேடிவ்
மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன், ஆனந்த், குஜராத்.

BA-11


இன்ஸ்பெக்டர் விக்ரம்
கதை: அசித்மூர்த்தி
படம்: பிரதாப் முல்லிக்
11
இப்போது நீ போய் விக்ரமிடம் நான் சரணடையத் தயாராய் உள்ளதாகச் சொல்லலாம்.
அவன் பரவச மடைவான்; எனக்குத் தெரியும்.
அவள் ஆரோகணித்த குதிரை பறந்தது.
லால்சிங் !
என்ன ?
எத்தனேயோ வருஷங்களாக நாம் எல்லோரும் ஒன்ருக வாழ்ந்து வந்திருக்கிறேம்.
நீ இல்லாமல் நாங்கள் என்ன செய்வோம் ?
போலீஸ் பற்றி நினைத்துப் பார். உன்னிடம் அன்பாயிருப்பார்கள் என்று உண்மையாகவே நீ நம்புகிருயா ?
நீ ஒன்பது போலீஸ் அதிகாரிகளைக் கொன்றிருக்கிருய் என்பதை மறக்காதே !
உனக்கு இந்த வாழ்க்கை அலுத்துவிட்டது
முட்டாள்களே! எனது சாம்ராஜ்யத்தை விட்டு நான் நாசமாய்ப் போவேன் என்று நினைக்கிறீர்கள் ?
ஹோ ! ஹோ ! ஹோ ! ஹா ! ஹா ! ஹா !
(தொடரும்)



நாளையப் புத்துலகிலே நாகரீகத் திக்விஜயம்

வானை யளவும் வகை-வகையான
பிரிண்டெட் 'டெரீன்' சேலைகள்...
இன்றையப் பெண்மணிக் கேற்ற
தனிப் படைப்பு... நாளையக்
கற்பனைகளின் நவீன மலர்ச்சி!

கட்டாவ் டெரிகோஸா

'டெரீன்' சேலைகள்

CU-997

சில்லறை விற்பனை நிலையங்கள் : 216, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, சென்னை-600001
2/133, மவுண்ட் ரோடு, சென்னை - 600006



எங்கள் வீட்டுப் பிரசிடெண்ட்

உத்தியோக எண்ணமும் உள்ளத்தின் எழுத்தும்!

எங்கள் வீட்டுப் பிரசிடெண்ட் ஒரு கடிகாரப் பிரசிடெண்ட்! ஏதோ கடிகாரத் தயாரிப்பு நிறுவனத்தின் தலைவர் என்று அர்த்தம் செய்து கொள்ளாதீர்கள்! அந்தந்த மணி நேரத்தில் அவர் வேலைகள் முடிய வேண்டும். தேவைகள் பூர்த்தியாக வேண்டும்! ஒன்பது மணிக்குச் சாப்பாடு போட்டாக வேண்டும்; இரண்டு மணிக்கு டிபனுக்கு அவர் வந்துவிடுவார்! இதே மாதிரிதான் ஒவ்வொரு காரியத்திலும்!

பிறருடைய நேரத்துக்கும் கால அட்டவணைக்கும் இதே போல் மதிப்புக் கொடுக்கவும் இவர் பழகியிருக்கிறார்! விநாயக சதுர்த்தி பூஜைக்கு சாஸ்திரிகள் காலை ஏழரை மணிக்கு வருகிறேன் என்று சொல்லியிருந்தால் இவர் தம்மைக் காலை ஏழு இருபதுக்கே தயார் செய்து கொண்டு அவர் வருகைக்காகக் காத்திருப்பார். "சாஸ்திரிகளாவது சொன்ன நேரத்துக்கு வருவதாவது? அவர் எந்த வீட்டில் மாட்டிக் கொண்டிருக்கிறாரோ! நீங்கள் நிதானமாக ஸ்நானம் செய்யலாம்" என்று இவரிடம் சொன்னால், "என்றால் யாரும் காத்திருக்கக் கூடாது! அதைத் தவிர்க்க நான் காத்திருக்கத் தயார்" என்று சொல்லி விடுவார்!



ஏன், வாசலில் கறிகாய்க்காரர், கீரைக்காரி இவர்களைக்கூட அநாவசியமாக நிறுத்திப் பேரம் செய்யக் கூடாது என்ற கொள்கையுடையவர். "அவர்கள் இன்னும் எத்தனையோ இடங்களுக்குப் போய்த் தங்கள் சரக்குகளை விற்பனை செய்ய வேண்டாமா? இந்த வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தால் அவர்கள் பிழைப்பு என்ன ஆகும்?" என்று அடிக்கடி அவர்கள் சார்பில் என்னை எச்சரிப்பார்.

வீட்டிலே சாமான்கள் அதனதன் இடத்தில் துப்புரவாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவார். புத்தக ஷெல்ஃபிலிருந்து கண்டபடி உருவிப் போட்டு, மீண்டும் அந்த இடத்தில் வைக்காவிட்டால் இவருக்கு நிச்சயம் கோபம் வரும். வேறு எந்தச் சமயத்திலும் கோபம் வருவது வெகு அபூர்வம்.

பிள்ளை பெண்களை இவர் எதற்கும் கோபித்துக் கொள்ள மாட்டார்! தம்மையே ஒரு 'மாடலாக' அவர்கள் நிச்சயம் பின்பற்றுவார்கள் என்ற தன்னம்பிக்கை இவருக்கு நிறைய உண்டு.

ஆடிட்டர் படிப்பு படித்துச் சென்னையில் உத்தியோகம் பார்க்க வந்தபோது 'சாஸ்திரி அண்டு ஷா' நிறுவனத்தில் பணியாற்றினார். அங்கு இவருடன் சேர்ந்து பணியாற்றியவர் திரு பி. என். ரெட்டி. வாகினி ஸ்டுடியோ நாகி ரெட்டி அவர்களின் சகோதரர். பிற்பாடு வாகினி ஸ்டுடியோ உருவானபோது பி. என். ரெட்டி இவரையும் தம்முடன் அந்தத் திரைப்பட உலகுக்கு இழுத்துக் கொண்டார். இவருடைய இலக்கிய, சங்கீத ரசனைகளை ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தவராதலால் இவரைக் கொண்டு நல்ல திரைக் கதைகளை எழுதச் செய்யலாம் என்றுதான் பி. என். ரெட்டிக்கு ஆசை. ஆனால் இவர்



கடைசிவரை அங்கே நிர்வாகப் பொறுப்பை, செக்ரட்டரி என்ற ஹோதாவில்தான் வகித்து வந்தார். "எழுதுவது என் ஆத்மதிருப்திக்காக! நான் எழுதுவதை நிச்சயம் திரைப்படத்தில் பார்க்க முடியாது என்று எனக்குத் தெரியும்! அப்படித் தெரிந்திருந்தும் நான் எதற்காக இந்தக்



துறைக்கு எழுத வேண்டும்?'' என்று ஸ்டுடியோ நிர்வாகஸ்தர்களிடம் சொல்லி விட்டார்!

அப்படி ஆத்ம திருப்திக்கு ஒரு புத்தகம் எழுதி இவர் பட்ட அனுபவமும் சுவாரசியமானது. தெரிந்த பதிப்பாளர் ஒருவர், இவர் புத்தகம் ஒன்றைப் போடுவதாகச் சொல்லிக் கையெழுத்துப் பிரதியையும் வாங்கிக் கொண்டு போனார். ஆனால் கடைசியில் அச்சகத்திலிருந்து தயாரான புத்தகங்களைப் பணம் கொடுத்து எடுத்துவர அந்தப் பதிப்பாளருக்கு வசதி இல்லை. இவரிடமே வந்து முந்நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு போய்ப் புத்தகக் கட்டுக்களை மீட்டார்! ஆனால் அந்தப் புத்தகக் கட்டுக்களை இவரிடமே கொண்டு வந்து தள்ளி விட்டு அப்புறம் வருவதாகச் சொன்னார். பிறகு அவர் வரவேயில்லை!

இவர் அந்தப் புத்தகக் கட்டுக்களைத் தெரிந்த ஒரு விற்பனை நிலையத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார். வருஷங்கள் பல ஆகியும் அந்த நிறுவனம் இவர் புத்தகத்தில் ஒரு பிரதிகூட விற்றதாகத் தெரியவில்லை! ஒரு நாள் இவர் அங்கே போய்ப் பார்த்தபோது, அந்தப் புத்தகக் கட்டு ஒரு மூலையில் அனாதையாகக் கிடந்ததாம்!

நல்ல வேளையாக மறு நாளே பழைய பதிப்பாளருக்கு வேண்டியவர் ஒருவர் நூறு ரூபாய் நோட்டுடன் வந்தார். "இவ்வளவுதான் இருக்கு. புத்தகக் கட்டை எடுத்துக்கொள்ள அனுமதி கொடுங்கள்" என்றார். இவர் தயங்கவில்லை! 'முந்நூறு ரூபாய் நஷ்டம், இருநூறு ரூபாய் நஷ்டமாகக் குறைந்ததே' என்ற மகிழ்ச்சியில் சம்மதித்து விட்டார்! வேறு என்ன செய்வது?

அப்புறம் இவர் எழுதிய 'இதய நாதம்' என்னும் புத்தகம் தமிழில் மூன்று பதிப்புக்களும், ஹிந்தியில் இரண்டு பதிப்புக்களும் வந்துஇவருக்கு ஓரளவு ஆத்ம திருப்தியை அளித்தது!

சாதாரணமாக வெளியில் குளிர் காற்றோ, வாடைக் காற்றோ அடித்தால் இவருக்குத் தும்மல், ஜலதோஷம் எல்லாம் வந்துவிடும். அப்படி உடம்பு வாகு! ஆனால் ஒரு தடவை இவர் காசியில் போய் மாட்டிக்கொண்டார். காலையில் ஏழு மணிக்குக் கங்கைக் கரைக்குச் சில அனுஷ்டானங்களைச் செய்யச் சென்ற இவர் பிற்பகல் இரண்டு மணி வரை ஒதுங்க இடமின்றிக் கொட்டும் மழையில் மாட்டிக் கொண்டார். ஆனால் அதன் விளைவாக ஒரு தும்மல்கூட வரவில்லை! ஒரு நாள்கூட ஜலதோஷத்தால் அவஸ்தைப்படவில்லை! இதை அவர் வாழ்நாளிலேயே ஓர் ஆச்சரியமான விஷயமாகக் கருதுகிறார்.

ஒன்றரை வயதில் தந்தையை இழந்த இவருக்குத் தாய்தான் சகலமும். தெய்வமாகவே பேணுவார். என் பத்தி ஐந்தாவது வயதில் சமீபத்தில்தான் காலமான என் மாமியார் மனத்தில் ஒன்றும் நிற்காது! படபடவென்று பொரிந்து கொட்டி விடும் சுபாவம்! அந்தக் குணம் ஒன்றை மாத்திரம் இவர் தம்மிடம் வராமல் பார்த்துக் கொண்டிருக்கிறார். எதிராளிகளின் மனம் புண்படாமல் இங்கிதமாகப் பேசி அனுப்புவார்.

எதிர்பாராத பொருளாதாரச் சிக்கல்களில் மாட்டிக் கொண்டு லட்சக் கணக்கில் இழப்பு ஏற்பட்டபோது கூட 'ஹூம்! இதுவும் ஏதோ ஆண்டவன் கட்டளை!' என்று மனம் தளராமல் புன்முறுவலுடன் இருக்க இவரால்தான் முடிந்தது!

பிரசிடெண்ட்: **சிதம்பர சுப்பிரமணியம்**

பேட்டியளித்தவர்: மேற்படியாரின் மனைவி **திருமதி கமலா**

பேட்டி:

கோமதி சுவாமிநாதன்

ஒவ்வொருவரின் மேனிக்கும் பாதுகாப்பு தேவை



வியர்வை துர்நாற்றத்திலிருந்தும், அதனால் நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படும் சங்கடத்தி
லிருந்தும் பாதுகாப் பளிக்கிறது.
ஜி-11 கலந்து **சிந்தால் டாய்லெட் பவுடர்** இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...அன்றலர்ந்த மலரின் நறுமணத்தையும்
தருகிறது.

சிந்தால் துர்நாற்றத்தை அறவே போக்கிப் பாதுகாப்பளிக்கும் டாய்லெட் பவுடர்.

Interpub/GSP-6/72R Tam

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 மார்ச், 1உ

புதன்கிழமை. ஒத்துழையாமை இயக்கத்தின் தத்துவங்களையும் திட்டத்தையும் கைவிட்டுவிட வேண்டுமென்றும் காந்தியடிகளின் மீது கண்டனம் கூற வேண்டுமென்றும் கூறும் ஒரு தீர்மானத்தை எழுதித் தில்லியிலுள்ள டாக்டர் மூஞ்சே என்பவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சமர்ப்பித்தார். அது மிகப் பெரும்பாலான அங்கத்தினர்களால் நிராகரிக்கப்பட்டது. காந்தி தர்மத்துக்கு விரோதமான எண்ணம் உடையவர்கள் தங்கள் கருத்தைத் தீர்மான உருவத்தில் வெளியிடத் தைரியம் கொண்டது இதுதான் முதல் தடவை.

காரியக் கமிட்டியார் சமர்ப்பிக்கும் தீர்மானம் சாரமான மாறுதல்கள் ஏதுமின்றி நிறைவேறி விடும். அது கூறும் திட்டத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று காங்கிரஸ் சபையை நிர்மாண வேலை செய்வதன் மூலம் பலப்படுத்துதல். மற்றொன்று சிறை செல்லும் இயக்கம். தீர்மானம் நிறைவேறிவிடும். ஆனால் ஜனங்கள் அதை எவ்வளவுதூரம் அனுஷ்டிப்பார்கள் என்பதுதான் அடுத்த கேள்வி. இயக்கம் நிறுத்தப்பட்டதன் காரணமாக ஜனங்கள் சோர்வடையாமலும் தோற்றுப் போனதாக எண்ணாமலும் இருப்பார்களானால் இந்தத் தீர்மானத்தைச் சந்தோஷமாக வரவேற்பார்கள். பலம் பெறுதல் எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து கொண்டார்களானால் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட மாட்டார்கள். இதே சமயத்தில் அரசாங்கத்தார் அடக்குமுறையின் மூலமாகவும் அதிகமான பிரசாரத்தின் மூலமாகவும் தங்களுக்கு அதிகமான பலம் தேடிக் கொள்ள முயல்வார்கள்.


1922 மார்ச், 2உ

வியாழக்கிழமை. நான் தனியான அறைகளில் தங்கியிருந்த பொழுது என் தனிமையை ஒருவாறு நீக்கிக் கொண்டிருந்த சிப்பாய் - சளசளவென்று பேசிக் கொண்டிருப்பவர் - இன்று காலை தூக்கி விடப்பட்டார். இங்குள்ள சின்ன டாக்டர் விசுவநாதய்யர் இதற்கு முன் சுமுகமாகப் பேசாதவர். இப்பொழுது சிறிது காலமாகச் சுமுகமாகப் பேசுகிறார். அவர் என்னிடம் நடந்துகொள்ளும் விதம் முன்னால் அருவருப்பாயிருக்கும். இப்பொழுது அது கொஞ்சம்கூடக் காணப்படவில்லை.

சிறையில் இந்தப் பகுதிக்கு வந்த பிறகுதான் அரசியல் கைதிகளை நடத்தும் விதத்தை நன்கு அறிய முடிகிறது. இங்குள்ள சிறை அதிகாரிகள் முன்னிருந்த மாதிரியில்லை. நல்ல மாதிரியாக நடந்து கொள்கிறார்கள். அனேக விதங்களில் முன்னைவிட நல்ல மாதிரியாக நடத்துகிறார்கள். கடினமான வேலை கொடுப்பதும் கடுமையாக நடத்துவதும் அறவே நின்று விட்டன. கேவலமாகவும் அவமானமாகவும் நடத்துவதும் நின்றுவிட்டது. ஆயினும் நாங்கள் மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டு முடியும் வரை காத்திராமல் அதற்கு முன்னதாகவே பிரதம வார்டர் வந்து கடுங்காவல் கைதிகள் நாலு நாலு பேராக நின்று, வேலை ஸ்தலத்துக்குப் போகுமாறு கௌரவக் குறைவான முறையில் கட்டளை இடுவதைக் காணும் பொழுது என்னுடைய மனசில் கோபமானது பொங்கியெழவே செய்கின்றது. அதிலும் அவர் யாரிடம் கட்டளையிடுகிறோ, அவர்கள் எல்லோரும் குற்றம் செய்து சிறைக்கு வந்தவர்களில்லை. தாமாகவே கஷ்டங்களை ஏற்று அனுபவிக்கத் தயாராகச் சிறைக்கு வந்தவர்கள். அவர்களும் அவரைப் போலவே கௌரவமானவர்கள். அப்படியிருக்க அவர் அந்தமாதிரி மொழிகளை உபயோகிப்பானேன்?




ஒவ்வொரு
Complan
Glaxo
Complan
ECONOMY PACK
Complan



நாளும் உங்கள் உடலுக்குத் தேவை
23 அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள்.
இதர உணவுப் பானங்கள் இவற்றிலே எத்தனை தருகிறது என்று பாருங்கள்!
காம்ப்ளான்
23 ஊட்டச்
சத்துக்களையும் தருகிறது.
குறிப்பைப் படியுங்கள்.
புரதம்
திசுக்களையும் செல்களையும் உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும் சக்திக்கே.
கார்போஹைடிரேட்
சக்தி மிகுந்த உடல் வலிமைக்கே.
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள், எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள், பற்கள், எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் நன்முறையில் செயலாற்ற.
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு. பிடிப்புக்களைத் தவிர்க்கும்.
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி, தசை அயர்ச்சி எதிராகப் போராட.
இரும்புச் சத்து
ஆரோக்கியமான இரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி நன்றாக இயங்க.
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான கண்களுக்கு.
வைட்டமின் பி1
வளர்ச்சி, உறுதியான நரம்புகள்; 'பெரி-பெரி' நோய் பீடிக்காதிருக்க.
ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய், நாக்கு, உதடுகள், கண்களுக்கு.
நிக்கோடினமைடு
ஒளிவீசும் ஆரோக்கியமான சருமத்திற்கே.
கால்ஷியம் பென்டோதெனேட்
நரம்புகளையும் தசைகளையும் வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க.
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இயல்பாக்க
வைட்டமின் பி12
இரத்த சோகை பீடிக்காதிருக்க.
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை உருவாக்க உதவுதலே.
வைட்டமின் ஸி
நோயெதிர்ப்புச் சக்தியைப் பெருக்கி, ஸ்கர்வி நோய் வராதிருக்க.
வைட்டமின் டி
உறுதியான பற்கள், எலும்புகளுக்கு.
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு.
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான முறையில் உறைய உதவும்.
இதர சிறுசிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல் உறிஞ்சிக் கொள்ளவும் சுரப்பிகள் நன்கு இயங்கவும் உதவும்.
உலகெங்கும் காம்ப்ளான் பருகும் இலட்சக்கணக்கானோரில் வளரும் குழந்தைகள் உண்டு. சுறுசுறுப்பான இல்லத்தரசிகள், பரபரப்புடன் இயங்கும் அலுவலர்கள், கருத்தரித்த தாய்மார்கள், பாலூட்டும் அன்னையர், வயது முதிர்ந்தோர், விளையாட்டு வீரர்கள், பருமன் குறைப்போர் எனப் பலப்பல வகையினர் உண்டு. எளிதில் ஜீரணிக்கக் கூடிய காம்ப்ளான், டாக்டர்கள் சிபாரிசு செய்வது. வயிற்றுப்புண், வயிற்றுப் போக்கு, இரத்தபேதி, ஃப்ளு ஜுரம், பல்நோய் உள்ளவர்கள் கூட ஜீரணிக்கத் தக்கது. ஆரோக்கியமான சுவைமிகு பானம் தயாரிக்க, டப்பாவின் மீதுள்ள குறிப்பைப் பின்பற்றவும்.
பருகுவீர் காம்ப்ளான்®
பரிபூரண உணவு
போஷாக்குப் பற்றுக்குறையிலிருந்து
பாதுகாக்கவே.
உலகெங்கும் உபயோகிக்கப் படுவது—
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில் உருவானது.

“சொல்றதைக் கேளுங்கோ, நமக்கென்ன பணமில்லையா, காசில்லையா? எதுக்காக இப்படி அவர்கிட்டே போய்க் கேட்கணும்? மூணு பெண்களுக்கும் வரதட்சிணையே கொடுக்காமதான் கல்யாணம் செய்து கொடுப்பேன்னு சொல்லிண்டிருந்தேள். மூணுவது பெண் மஞ்சுவுக்கு இதனலே கல்யாணம் தடைப்பட்டுப் போன போது பேப்பரிலே......''

''மாட்ரிமோனியல்லே வரனுக்கு விளம்பரம் கொடுத்து வரதட்சிணை கிடையாதுன்னு குறிப்பும் தந்தேன். அதன்படியே வரன் கிடைச்சுதா இல்லையா? இந்த நரசிம்மன் கிட்டே வாலாட்ட முடியுமா? மஞ்சு இப்போ நன்னாத்தானே இருக்கா.'' நரசிம்மன் குதூகலத்துடன் கூறினர். மஞ்சு என்பது அவரது மூன்றாவது பெண் ஜலஜாவின் வீட்டுப் பெயர். அப்பா செல்லமாகக் கூப்பிடுவது மஞ்சு.

''பெண்களுக்குக் கடைப்பிடித்த அந்த லட்சியத்தை முக்கியமாகப் பிள்ளை விஷயத்தில் காட்ட வேண்டாமா?'' என்று அபிராமி தொடர்ந்தாள்.



“வரதட்சிணை வாங்குவேன்!”

— எஸ். ரங்கநாயகி —

''யார் இல்லேன்னு ?''

''பின்னே ஏன் கமலாவின் அப்பா நீலமேகத்திடம் ரொக்கமாக நாலாயிரம் ரூபாய் கொடுத்துடணும்னு கேக்கறேள்? வரதட்சிணை வாங்கறது தப்பில்லையா?''

''பைத்தியமே, வரதட்சணைன்னு சொன்ன வாயை முதல்லே அலம்பிண்டு வா.''

''அப்போ அதுக்கு என்ன பெயராம்?''

''இதோ பார், அபிராமி, நம்ப பெண்களுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தப்போ சீர் வரிசை, பாத்திரமும் நகையுமா நிறையக் கொடுத்தோம். நினைவிருக்கா?''

'' எல்லாம் நினைவிருக்கு.''

''இப்ப நம்ப பிள்ளை ரமேஷ் கல்யாணத்திலே பெண் வீட்டாரிடம் சீர் வகையே வேண்டாம்னு சொல்லிட்டேன்.....''

''அதுக்கெல்லாம் ஈடாகத்தான் வரதட்சிணையாக்கும் !''

''ஏ, அபிராமி அம்மாளே !'' நரசிம்மன் கர்ஜனையுடன் கூவினர். '' இந்த வரட்சிணைங்கிற சொல்லே நீ உபயோகித்தால் நான் ரொம்பப் பொல்லாதவனாகிவிடுவேன்.''

தம்பதிகள் இருவரும் பேசிக் கொண்டிருந்த போதே ரமேஷ் அந்தப் பக்கமாக வந்தான்.

'' என்னடா ரமேஷ், ஆபீசுலே எப்ப லீவு வேணும் ?'' நரசிம்மன் கேட்டார்.

''அவனை என்ன கேள்வி ? நீங்கதானே கம்பெனி முதலாளி? உங்க கிட்டேயே வெச்சண்டு உங்க கிட்டேயே அவனுக்கும் டிரெயினிங் கொடுக்கறேள். உங்க கம்பெனியிலே இருக்கிறவனுக்கு லீவு அனுமதி நீங்கதானே கொடுக்கணும்?'' அபிராமி கூறினள்.

நரசிம்மன் சிரித்துக் கொண்டார். ''என்னடா மகனே, கல்யாணத்துக்கு ஒரு வாரம் போதுமோல்லியோ? ஏற்கனவே பேசிப் பழகி விட்டீர்கள். அதனால் அதிகம் லீவு வேண்டியிருக்காது. பெயரளவுக்குப் பந்தல் போட்ட கல்யாணம்..... சரி, நாலாயிரத்துக்கு ஏதாவது வாங்கிக்கப் போறியா, என்ன பண்ணப் போறே ?''

''நல்ல கேள்வி கேட்டேள் ! கையிலே பணம் வாங்கிக்கறேன். அவன் டிரஸ்ஸுக்கு ஆயிரத்து ஐந்நூறுக்காவது செலவு செய்யுங்கோ !'' அபிராமியின் சிபாரிசு.

'' என்ன சொல்றே ? அந்தப் பணத்திலேயிருந்து ஒரு செல்லாக் காசுகூடக் கொடுக்க மாட்டேன்.''

''என்னப்பா பண்ணப் போறேள், அதை வெச்சண்டு ?'' மகனின் கேள்வி.

''அதைப் பத்தி உனக்கென்ன ? என்ன வேணும்னாலும் செய்வேன்.''

''சீர் வரிசைக்கு உபயோகப்படுத்தப் போறேளா ?''

''நான் அப்படிப் பேசலியே. பெண்ணின் அப்பா நீலமேகத்திடமிருந்து சீர் வரிசை கூடக் கேக்கலேன்னுதானே சொன்னேன்..... இந்தப் பணத்திலேயிருந்து சீர் செய்யப் போறேன்னு சொல்லலியே.''

'' உங்க பேச்சும் நீங்களும், எனக்கு ஒண்ணும் புரியலே. நல்ல நிலையிலே இருக்கிறவா நம்ப — இப்படி நாலாயிரம் கொண்



டான்னு கேட்டா நம்ப கௌரவம் போகத்தான் போறது.'' — இது அபிராமியின் கசப்பு.

''இந்த மாதிரி பணம் வாங்கறது எனக்குப் பிடிக்கலேப்பா.....''

''கையில் பணம் கொடுக்க மாட்டேன். உங்கள் பிள்ளையும் எனக்கு வேண்டாம்னு அவர் உங்க அப்பாகிட்டே சொல்லியிருக்கணும். அப்போ உங்க அப்பா வாய் திறக்க மாட்டார்.''

நரசிம்மன் கோபிக்கவில்லை. ஆனால் பதில் கூறினார். ''அந்த நீலமேகத்தினால், அப்படிச் சொல்லவே முடியாது. அப்படிச் சொன்னால் அவர் மானம் போய்விடும், புரியறதா?''

''எல்லாம் உங்கள் கற்பனை.... உங்கள் சம்பந்தம் போலவே வேறு சம்பந்தம் நிச்சயமா அவருக்குக் கிடைக்கும்.''

'' சம்பந்தம் வேறாகக் கிடைக்கலாம். ஆனால் அந்தப் பெண் அதற்கு ஒப்புக் கொள்ள மாட்டாள்.''

'' காதலுக்காக உயிரை விடுவான்னு சொல்றேளாக்கும். காதலனை மறந்துவிடச் சொல்லுவார் அவள் அப்பா.....''

''காதல் மட்டும் இருந்தால் உபதேசம் பலிக்கலாம். ஆனால் ரமேஷ் — கமலா விஷயத்திலே கல்யாணமே முடிஞ்சு போச்சு. உன் பிள்ளையையே கேட்டுக்கோ. நெருங்கிப் பழகின பெண் ஏமாந்துட்டாள். இவன் பெங்களூருக்குப் போனானே, நினைவிருக்கா? அப்போ.....''

அபிராமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''என்னடா ரமேஷ்? இதெல்லாம் உண்மையா? சொல்லுடா!'' பதறினாள்.

ரமேஷ் பதில் கூறவில்லை. தலையைக் குனிந்தபடி நகர்ந்து விட்டான். ''அவனைக் கேட்காதே. அந்தப் பெண்ணே என்னிடம் சொல்லி விட்டாள்! கைவிடக் கூடாதுன்னு யாசித்தாள். காதல் அவ்வளவு தூரம் கனிந்திருக்கிறது. அப்போ நான் முடிவாக ஒண்ணும் சொல்லலே. மறுநாள்தான் 'உன் அப்பாவிடம் பணம் கேட்கும்படி இருக்கும்' என்றேன். தானே வழி செய்வதாகச் சொல்லி விட்டாள். 'அப்பாகிட்டேயிருந்து இது போல யாராவது நிறையக் கறக்கணும்'னு அவனே சொன்னான். போதுமா? ஐந்து பெண்களில் இவன்தான் கடைசி. இவன் தகப்பனார் ஒருத்திக்கும் வரதட்சிணை தரலே. தம் கௌரவத்தை வெளிப்படுத்த மட்டும் ஆடம்பரமாக விவாகத்தை முடித்தவர். இப்போ நான் இந்த நாலாயிரத்தைக் கேக்கறது தப்பாகப் படுகிறதாக்கும். சும்மா சொல்லக் கூடாது. நமக்கு வரப் போறது தங்கமான பெண். நமக்கு ஓர் அயோக்கியப் பிள்ளை, ஓர் அயோக்கியச் சம்பந்தி.''

ரொம்ப நல்ல பிள்ளை எனத் தன் மகனைப் பற்றித் தனக்குத் தானே மெச்சிக் கொண்டிருந்தவள் இப்போது கணவர் சொன்ன செய்தியைக் கேட்டு மனம் இடிந்துபோய் விட்டாள்.

கமலாவும் ரமேஷும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். இருவரும் அடிக்கடி சந்திப்பது உண்டு என்பது தெரியும். ஆழமான பழக்கம் இல்லாவிடினும் நரசிம்மனும் நீலமேகமும் ஒருவரை யொருவர் அறிந்தவர்கள்.

ரமேஷ் — கமலாவின் நெருக்கம் காதலாக மலர்ந்து வருகிறது எனப் பெற்றோர்களின் செவியில் விழுந்தது. முதலில் சம்மதம் தர விரும்பாத நரசிம்மன் பிறகு அதற்குச் சம்மதம் தந்தார்.

வடபழனியிலிருக்கும் தம் நண்பர் பரகவின் வீட்டிலிருந்து அப்போதுதான் திரும்பி இருந்தார் நரசிம்மன். நீலமேகம் மகளின் கல்யாண விஷயமாகப் பேச வந்தார். நரசிம்மன் அவரிடம் முதலில் கேட்டது, ''இந்த விவாகத்தில் பெற்றோர்கள் விருப்பம் என்பதை மட்டும் எடுத்தால், என் பதில் உங்களுக்குச் சாதகமாக இருக்காது. ஆனால் நம் குழந்தைகளின் வாழ்நாளைப் பற்றின விஷயம் இது. வடபழநியிலிருந்து இப்போது தான் திரும்புகிறேன். கமலாவும் என்னைச் சந்தித்தாள். அவர்களுக்காக நான் சம்மதம் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் சீர் வரிசைகள் எதுவும் செய்ய வேண்டாம்.



பகல் தூக்கம் பறக்கும்!

பகல் கனவைக் கலைக்க ஒரு நுணுக்க இயந்திரம் உள்ளது. மனம் அநாவசியச் சிந்தனைகளில் ஈடுபட்டால் ஓர் ஒலி எழுந்து கனவுலகிலிருந்து அந்நபரைத் தட்டி எழுப்பிவிடும். ஊழியர்கள் பகல் கனவு கண்டு கொண்டிருந்தால் உடனே ஓர் அலாரம் ஒலி அதனை முதலாளிக்கு அறிவித்துவிடும்!

என் கையில் ரொக்கமாக நாலாயிரம் ரூபாய் தந்துவிட வேண்டும்.''

நீலமேகம் இதை எதிர்பார்க்கவில்லை. ''நீங்கள் இவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு இப்படி வரதட்சிணை என்று....''

''நிறுத்துங்கள். இது வரதட்சிணை இல்லை. வரனுக்காகத் தட்சிணை இல்லை. புரிகிறதா? சீர் என்பதெல்லாம் அன்பளிப்பு என்றுதானே சொல்கிறோம்!''

''அதே போல் இதுவும் அன்பளிப்பாகும். என் மற்றப் பெண்களுக்கு நான் கையில் பணம் கொடுக்கவில்லை. அதனால் இவளுக்கு மட்டும் எப்படிக் கொடுப்பது?''

''அந்தச் சம்பந்திகளுக்கு உங்களைத் தெரியாது. எனக்கு உங்களைத் தெரியுமே!''

''தெரிந்தவரிடம் இப்படிக் கேட்கலாமா? மேலும் நான் இன்றிலிருந்து ரிடையராகி விடுபவன்.''

''அதனால்தான் முக்கியமாகக் கேட்கிறேன்.''

''ரிடையராகிப் போனவனிடம் பிறகு பணம் எதிர்பார்க்க முடியாது என்ற எண்ணமாக்கும். கையில் பணம் கொடுக்கக் கூடாது என்பது என் லட்சியம்.''

''எனக்கும் லட்சியம் உண்டு. வரதட்சிணை வாங்கக் கூடாது. இது வரதட்சிணை இல்லை என்றுதான் சொன்னேனே....இந்தப் பணம் தர இஷ்டமில்லாவிடில், இந்தச் சம்பந்தத்துக்கு என் சம்மதம் கிடைக்காது..... காதல் என்பதற்காக என் விருப்பத்தை மீறி நடத்தினால் ரமேஷுக்கு இந்த வீட்டு உறவு மட்டுமல்ல, பொருளாதாரச் சேர்க்கையும் கிடைக்காது. அவனுக்கும் நீங்கள்தான் சாப்பாடு போடும்படி இருக்கும். உங்கள் வீட்டுக்கு வந்துவிடுவான்.''

நீலமேகம் பதில் கூறாமலே வீடு திரும்பினார். கையில் பணம் தருவதாக இரண்டு நாட்கள் கழித்துப் பதில் வந்தது.

அபிராமிக்கு இதெல்லாம் தெரியும்.

கையில் நாலாயிரம் ரொக்கமாக வாங்கிய பிறகுதான் நரசிம்மன் கல்யாணப் பத்திரிகை அச்சிடக் கொடுத்தார்.

வீடு நிறைந்துவிட்டது. மூன்று பெண்களும், பம்பாய், தில்லி, கல்கத்தா என்று தூர தேசங்களில் இருந்தவர்கள். சீக்கிரம் வந்துவிட்டனர்.

''என்னம்மா இது. அப்பாகூட வரதட்சிணை வாங்கிவிட்டாராமே....?'' மஞ்சு வந்ததுமே கேட்டுவிட்டாள்.

''வரதட்சிணை என்று சொல்லாதே. அப்பாவுக்குக் கோபம் வந்துவிடும்.''—இது ரமேஷின் பதில்.

அபிராமிக்கு வேதனை. ஒரு முறை மகனை நோக்கிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். மகன் செய்துள்ள தவற்றைவிடத் தந்தை செய்துள்ள தவறு பெரியதில்லை. மகன் செய்து விட்டதை அவளோ கணவரோ வெளியே கூறவில்லை. அப் பெரிய தவறு உள்ளடங்கி ஒருத்தர் கண்ணிலும் படாமல் இருந்தது. தந்தை செய்ததோ அனைவரையும் உறுத்தியது.

அன்று முகூர்த்த தினம். கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. நரசிம்மன் ஏழை எளியவர்களுக்கெனப் புத்தாடைகள் வழங்கினார். அன்னதானமும் செய்தார். நீலமேகம் உறுமிக் கொண்டிருந்தார். ''பிஸினஸ் வரை இதெல்லாம் ஒரு 'ஷோ'. பணத்தை என்னிடமிருந்து பறித்துக்கொண்டு தானமாம் தர்மமாம். எனக்கு ஒரு வேஷ்டி கூடக் கிடையாது.''

கமலாவோ தந்தையைவிட மாமனாரிடம் நெருங்கிப் பழகி அவர் சொன்னபடி கேட்டாள். அது வேறு நீலமேகத்தின் சினத்தை வளர்த்தது.

முகூர்த்தம் முடிந்த மறுநாள். நரசிம்மன் தம் குடும்பத்தாரிடமும் நீலமேகத்திடமும் கூறினார்: ''நாம் அனைவரும் வடபழநிக்குச் சென்று முருகனைத் தரிசிக்கப் போகிறோம்.''

கிளம்பும்போது நரசிம்மன் அபிராமியிடம் மட்டும் தனித்துக் கூறினார்: ''அங்கு கோயிலுக்கு அருகில் என் நண்பர் பரசு இருக்கிறாரே, அவர் வீட்டுக்கும் போகிறோம். அவர் பரம ஏழை என்பதற்காக நீ வராமல் இருந்துவிடக் கூடாது.''

''நன்றாய்ச் சொன்னேன். ஏழை என்றாலும் தங்கமானவர் ஆயிற்றே. ஏனோ நேற்று முகூர்த்தத்தில் அவர் ஐந்தே நிமிடம் இருந்து விட்டுப் போய்விட்டார்.''

இவர்கள் அனைவரையும் கண்டதும் பரசுவுக்குப் பெரும் வியப்பு ஏற்பட்டது. நீலமேகத்தைப் பார்த்தபோதே அவர் முகத்தில் ஒரு வெறுப்பு தோன்றி மறைந்ததை நரசிம்மன் கவனித்தார். நீலமேகத்துக்கோ அந்த வீட்டுக்கு வந்ததே பிடிக்கவில்லை.

''என்ன பரசு, உங்கள் மகன் பாங்க் வேலையில் சேர்ந்துவிட்டானா?'' என்று நரசிம்மன் கேட்டார்.

''சேர்ந்துவிட்டானே!''


''உங்கள் மகள் கற்பகத்தின் கல்யாணம் என்ன ஆயிற்று?''

பரசு நீலமேகத்தைப் பார்த்து விட்டுத் தலை குனிந்து கொண்டார். பிறகு மெள்ளக் கூறினார். ''நான்தான் சொன்னேனே. பணத் தட்டுப்பாட்டில் நின்றிருக்கிறது.



இந்நாட்டை வாழ்விக்க வந்த மகாத்மாவுக்குக் கிண்டியில் காந்தி மண்டபம் கட்டி அமரர் கல்கி அஞ்சலி செலுத்தினார். இந்தக் காந்தி மண்டபத்தில் அக்டோபர் 2-ந் தேதியிலிருந்து 7ந் தேதி வரை காந்தி ஜயந்தி விழா விமரிசையாக நடைபெற்றது. மத்திய சர்க்கார் நிதி மந்திரி திரு சவான் காந்தி ஜயந்தி விழாவைத் தொடங்கி வைத்தார். தமிழக முதன் மந்திரி திரு மு. கருணாநிதி காந்தி ஜயந்திக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இந்த விழாவினுக்குத் தலைமை தாங்கியதோடு, விழாவை வெற்றிகரமாக நடத்தத் தமிழக கவர்னர் திரு கே.கே. ஷா மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளார். ஆறு நாட்கள் விழாவிலும் பேரறிஞர்களும், கலைஞர்களும், அரசியல் தலைவர்களும், ஆட்சியாளரும், சங்கீதக் கலைஞர்களும் கலந்து கொண்டு அரிய உரைகளும் இன்னிசையும் ஆற்றி அண்ணலுக்கு மரியாதை செலுத்தினார்கள். ஜோதி ஊர்வலத்தை ஸ்ரீமதி மதுபென் ஷா தொடங்கி வைப்பதையும் காந்திக் கண்காட்சியை முதல்வர் ஆரம்பித்து வைப்பதையும் இங்குள்ள படங்களில் காணலாம்.





சென்னை இராமலிங்கர் பணிமன்றத்தின் ஆதரவில் அண்ணல் காந்திஜி பிறந்தநாள் விழா சென்னை சர்வகலாசாலை துணைவேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு தலைமை வகிக்க இராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் அதிசிறப்பாக நடைபெற்றது. அறிஞர்களும், சான்றோர்களும் ஏழு நாட்கள் விழாக் கொண்டாட்டத்தில் பங்கு பற்றினர்.

பிள்ளை வீட்டார் ஆறு மாதம் காத்திருப்பதாகச் சொல்கிறார்கள். வரதட்சிணைகூட இல்லை. செலவுக்குத்தான் பணம்.''

நரசிம்மன் தம் கைப் பையிலிருந்து நாலாயிரம் ரூபாய் நோட்டுக் கற்றைகளை எடுத்தார். ''பரசு! பெண் கல்யாணத்துக்காக நீர் நாலாயிரம் வைத்திருந்தீர். பிள்ளை வேலை தேடிக் கொண்டிருந்தான். பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமான போதே பையனுக்குப் பாங்க் வேலை வந்தது. பாங்க் பரீட்சை, இண்டர்வ்யூ நன்றாகச் செய்தான். ஆனால் அங்கு நீலமேகம் எனப்பட்டவர், இந்த வேலைக்கு ஆர்டர் அனுப்ப ரூபாய் நாலாயிரம் லஞ்சம் கேட்டார். குடும்பப் பொருளாதார நிலையை எண்ணி வேலை முக்கியமாகப் படவே, நீர் அந்த லஞ்சத்தை, பெண் கல்யாணத்துக்காக வைத்திருந்த பணத்திலிருந்து கொடுத்தீர். பிள்ளைக்கு வேலை ஆயிற்று. பெண் கல்யாணம் நின்றுவிட்டது. இதெல்லாம் நீங்கள் என்னிடம் நீலமேகம் என் சம்பந்தியாக வரப் போகிறார் என்பதை அறிவதற்கு முன்பே கூறிவிட்டீர். இல்லையா? இந்தாரும், நீங்கள் கொடுத்த லஞ்சப் பணத்தை அதே நீலமேகத்திடமிருந்து வாங்கி உங்களிடம் கொடுத்து விட்டேன். பெண் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். நீலமேகம் இப்போது வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அவரால் இனி வாலை ஆட்ட முடியாது. அதனால் பிள்ளையின் வேலையில் உங்களுக்குத் தொந்தரவும் இருக்காது.....''

நாலாயிரம் கை மாறியது. அனைவரும் மகிழ்ச்சித் துள்ளலில் நரசிம்மனைப் பார்த்த போது, நீலமேகம் மட்டும் தலை குனிந்தபடி வாசல் பக்கம் நகர்ந்தார்.

நரசிம்மன் அபிராமியையும் தம் குடும்பத்தாரையும் நோக்கினார். ''நான் வாங்கிய நாலாயிரத்தை வரதட்சிணை என்று இனிமேலாவது சொல்லமாட்டீர்களே! கமலா நம் வீட்டு மருமகளாக வந்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். மாட்டுப் பெண் மிகவும் நல்லவள்'' என்றார்.

''நான் பாக்கியசாலி'' என்று அபிராமி கூறிக் கொண்டாள்.

குழந்தை மனம்

'சியாமா'



நாடகத்தில் வருவோர்:

வக்கீல் அருணகிரி
ஓசியர்
அத்திம்பேர்
ராமு
உமா — ராமுவின் மனைவி

(1)

உமா: அத்திம்பேர்! கடிதாசைப் பார்த்தேளா?

ராமு (கடுமையாக): பார்த்தேன்.

உமா: பாவம், ''நீ மனசு வைச்சால் இதொரு பிரமாத விஷயமில்லே, வக்கீல் அருணகிரியிடமிருந்து இந்தப் பணம் வந்துதான் கிஸ்திலே கட்டியாகணும்''னு எழுதியிருக்கார்.

ராமு: ஏன் எழுத மாட்டார்? பணம் கொடுக்கறப்போ என்னைக் கேட்டுக்கிட்டா கொடுத்தார்?

உமா: அப்படியா... மனுஷான்னு சமயத்திலே ஏமாந்து போகறது சகஜந்தானே? அக்கா வேறே கடிதாசு கடைசியிலே ''ராமு ஆபீஸ் தொந்தரவிலே விஷயத்தை மறந்துடலாம், நீதான் அவனுக்கு ஞாபகப்படுத்தணும்னு'' எனக்கு எழுதியிருக்கார். அதைப் பார்த்ததும்தான் எனக்கு அழுகையா வந்துடுத்து. ஆமாம், அத்திம்பேர் எந்தச் சந்தர்ப்பத்திலே இவருக்குப் பணம் கொடுத்து மாட்டிண்டார்?

ராமு: அதொரு பெரிய கதை. முன்னொரு சமயம் அத்திம்பேருக்கு இங்கே சிவில் கோர்ட்டிலே ஏதோ வியவகாரம் இருந்தது. நான்தான் அருணகிரி அந்த நாள்ளே அப்பாவோட ஜூனியர்ங்கறதாலே அத்திம்பேரிடம் கேஸை அவருக்கே கொடுக்கும்படி சொன்னேன்.

உமா: அப்போ அத்திம்பேரோட இந்த அறிமுகத்துக்கு நீங்கதான் காரணமா?

ராமு: சொச்சத்தையும் கேளு. கேஸ் முடிஞ்சு அருணகிரிக்குக் கொடுக்க வேண்டிய பீஸ் எல்லாம் கொடுத்து முடிஞ்சும் போச்சு. அந்தச் சமயம் அருணகிரி தம் வீட்டை ஏதோ ரிப்பேர் பண்ணிண்டிருந்திருக்கிறார். அத்திம்பேரிடம் மொட்டை மாடியிலே கோடைப் பந்தல் போடக் கிராமத்திலேந்து நல்ல கீத்தா ஒரு நாலு வண்டி அனுப்பு, உடனே பணம் அனுப்பிடறேன்னு சொன்னாராம். அத்திம்பேரும் ஊருக்குப் போனதும் மொதல் காரியமா அதைச் செஞ்சிருக்கார். ஆனால் எங்கிட்டேதான் சொல்லலே.

உமா: அந்தக் கீத்தோட விலே, வண்டிச் சத்தம் எல்லாம் சேர்த்துத்தானா இந்தப் பணம்?

ராமு: ஆமாம்... சுலபமாச் சொல்லிட்டியே! இப்போ கீத்து யானை விலே, குதிரை விலேன்னு விக்கறது? வண்டி வேற வாடகை வண்டி. அறுபது மைல் நாலு வண்டி வந்து போயிருக்கு. இங்கே வந்ததும் அருணகிரி உடனடியாப் பணம் கொடுத்துடுவார்னு அத்திம்பேர் எல்லா ஏற்பாடும் பண்ணி அனுப்பியிருக்கார். ஆனால் அருணகிரியோ வந்தவர்களுக்கு வெற்றிலை பாக்குச் செலவுக்குக்கூட பணம் கொடுக்கல்லையாம். 'ஏற்கனவே பணம் கொடுத்தாச்சு, ஊர்லே போய் ஒங்க முதலாளி கிட்டே வாங்கிக்கோ'ன்னு திருப்பி அனுப்பிச்சுட்டாராம். கடைசியிலே அத்திம்பேர்தான் கையிலேந்து பணம் கொடுத்து அப்போ நிலைமையைச் சமாளிச்சிருக்கார்.

உமா: இதெல்லாம் எப்போ நடந்தது? எனக்கு ஒண்ணுமே தெரியாதே!

ராமு: எனக்கே பின்னாடி ஒரு சமயம் அத்திம்பேர் சொல்லித்தான் தெரியும். ஏன், இந்த வர்ற தைக்கு அஞ்சு வருஷம் முடியப் போறதே. போறப்போ, வர்றப்போ அத்திம்பேரும் பாவம் அலுக்காமல் சளைக்காமல்

கேட்டிண்டுதான் இருக்கார். ஆனால் மனு ஷன் அசைஞ்சு கொடுத்தால்தானே!


உமா: அப்போ நீங்க என்ன பண்றதா உத்தேசம்?

ராமு: அதான் எனக்கும் தெரியல்லே. என்னைவிட அவர் வயசிலே முப்பது, நாற்பது வருஷம் மூத்தவர். நான் சின்னக் கொழந் தையா இருக்கப்பவே அவர் அப்பாகிட்டே ஜூனியரா வந்துட்டாராம். அதனாலே என் னைக் கண்டாலே அவருக்கு ஒரு தனி அலட் சியம். ஏன் என் பேரைச் சொல்லி அவர் எங்கே என்னைக் கூப்பிடறார்? ஆயிரம் பேர் இருக்கட்டும், ''டே பிச்சை!''ன்னு தானே என்னைக் கூப்பிடறார்! சமயத்திலே எனக்கு அப்படியே குன்னிப் போயிடறது.

உமா: ஆமாம், ஒங்களை எதுக்காகப் பிச் சைன்னு கூப்பிடறார்?

ராமு: நாலு பெண்களுக்கப்புறம் நான் அப்பாவுக்கு மொதல் பிள்ளையாம். அதனாலே அந்தச் சமயம் பாட்டி — எங்கப்பாவோட அம்மா — என்னைப் பிச்சைன்னுதான் கூப்பிடு வாளாம். அதையெல்லாம் ஞாபகப்படுத்தி என்னை வாய்ச்சவடாலினால் மடக்கிடறார்!

உமா: ஆனாலும் நீங்களும் இத்தனை அப் பாவியா இருக்கக் கூடாது. ஒங்க வாய் வீச் செல்லாம் இங்கே வீட்டிலே எங்கிட்டேயும், கொழந்தைங்க கிட்டேயும்தான்... அவர்



அப்படிப் பேச ஆரம்பிச்சா உடனே வழி மறிச்சு அவரை விஷயத்துக்கு இழுத்திடணும்!

ராமு: அவரோட பழகியிருந்தால் நீ இப்படியெல்லாம் பேச மாட்டே. போன வாட்டி அவரை நான் சந்திச்சப்போ, அப்பா வோட கீர்த்தி, அம்மாவோட அகால மரணம் மத்தபடி என் சகோதர சகோதரிகளோட க்ஷேம லாபம் இதெல்லாம் பத்திக் கிட்டத் தட்ட ஒரு மணி நேரம் பார் ரூம்லே எல் லோருக்கும் கேட்கும்படி இரைஞ்சு பேச ஆரம்பிச்சுட்டார். நான் அப்போ குறுக்கே பேசினால் நன்னாவா இருக்கும்?

உமா: சரி, அதெல்லாம் பழைய விஷயம். தொலைஞ்சு போகட்டும். நாளைக்கு விடுமுறை நாள்தானே? அவரும் வீட்டிலேதான் இருப் பார். காலமே எட்டு மணிக்கே போய் அத்தனை பேர் கடிதாசியையும் காட்டி விஷயத்தையும் சொல்லுங்கோ! போகிறபோதே நீங்க இப் படி அழுதுண்டு போனால் அவர் ஏன் குதிரை ஏற மாட்டார்?

ராமு: நீ ஏன் சொல்ல மாட்டே? போகறது நான்னா... அவரோட வாக்குச் சாதுர்யம், அவர் கையாளக்கூடிய விதம் விதமான தந்

நிரங்கள் இதையெல்லாம் நினைக்கிறப்பவே என் உடம்பு நடுங்கறது. கடவுளே! நீதான் இந்தக் கண்டத்திலேந்து காப்பாத்தணும்....

(2)

[அடுத்த நாள் காலே. வக்கீல் அருணகிரி வீட்டில்]

ராமு: வக்கீல் சார் இருக்காரா?

ஓசியர்: ஒக்காருங்க, உள்ளேதான் இருக்காங்க. ஆச்சு வர்ற நேரந்தான். நானே அரை மணியாகக் காத்துக்கிட்டு இருக்கேன்.

ராமு (தயக்கத்துடன்): எனக்கு ஒங்களைத் தெரியல்லே.

ஓசியர்: அப்போ நீங்க வக்கீலுமில்லே. கச்சேரி அனுபவமும் உள்ளவர் இல்லே. ஏன்னு கோர்ட்டுக்குப் போறவங்க இந்த ஓசியனைத் தெரிஞ்சுக்காம இருக்க முடியாது. ஏன், எனக்குக் கிட்டத்தட்ட நாற்பது வருஷக் கச்சேரி அனுபவம் உண்டு.

ராமு (சிரித்து): இப்போ அதைத் தெரிஞ்சுக்கிட்டேன். நீங்க சாரோட குமாஸ்தாவா?

ஓசியர்: ஊஹூம். நான் யாரோட குமாஸ்தாவும் இல்லே. கட்சிக்காரன் எந்த வக்கீலே விரும்பறானோ, அவர்கிட்ட அவனே அழைச்சுக்கிட்டுப் போவேன். அதுதான் என் தொழில். அதிலேதான் என் வருமானமெல்லாம்.

வக்கீல் அருணகிரி (தொலைவிலிருந்து): யாரு ஓசியரா! நாளைக்கு ஒங்க ஆசாமியோட நம்பர் போட்டிருக்கு. ஆனால் பீஸ் இல்லாமல் என்னைப் பார்க்கிறதிலே பிரயோஜனமில்லே. நான் கட்டைத் தொட மாட்டேன்.

ஓசியர்: நீங்க பீஸைப் பத்தி ஏன் கவலைப் படறீங்க, அதுவும் நான் இருக்கறப்போ? நாளைக்குப் பத்தாவது மணிக்குப் பீஸோடே நான் ஒங்களைச் சந்திக்கலேன்னு நீங்க கட்டைத் தொட வேண்டாம். சம்மதந்தானே?

அருணகிரி: அடேடே, பிச்சையா? நீ எப்போ வந்தே? நேரே உள்ளே வர்றதுக்கு என்ன? இப்படி வாசல்லே காத்திருக்கலாமா?

ராமு: பாதகமில்லே. இப்போத்தான் நானே வந்தேன்.

அருணகிரி: பூஜை பண்ணிக்கிட்டிருந்தேன். ஏதோ கொஞ்சம் ஆஸ்திகம், இத்தனை நாஸ்திகத்துக்கும் மத்தியிலே.

ராமு: சார் சொன்னார், நீங்க வெளியிலே வர்ற சமயந்தான்னு.

அருணகிரி: சாராவது, கோராவது? என்ன பிச்சை, ஒனக்கு ஓசியாரைத் தெரியாது? அந்த நாளிலே ஒங்கப்பா ஒரு கேஸிலே ஆஜராணார்னு அந்தக் கோர்ட்டிலே ஓசியாரைப் பார்க்கலாம். ஒங்கப்பா பேச்சிலே ஓசியருக்கு அப்படி ஒரு மயக்கம்.

ஓசியர் (புரியாமல்): யாரு இவங்க?

அருணகிரி (சிரித்து): என்ன ஓசியரே, ஒங்களுக்குமா தெரியல்லே? அந்த நாளிலே இவா அப்பாவோட வாலைப் புடிச்சுக்கிட்டுத்தானே நீங்க கச்சேரியிலே அலைஞ்சீங்க... இப்போக் கூடவா தெரியல்லே?

ஓசியர்: யாரு, நம்ம பெரிய ஐயாங்களா?

அருணகிரி: பின்னே?

ஓசியர்: இவங்களே ரொம்பச் சின்னப் பிள்ளையா இருக்கறப்போ நான் பார்த்திருப்பேன். அதான் இப்போ தெரியல்லே. இனிமே நம்ம பெரிய ஐயா மாதிரி வக்கீலே எங்கங்க பார்க்கப் போறோம்?

அருணகிரி: நல்லாச் சொல்லுங்க. ஆனால் அவ்வளவு பெரிய புலிக்கு ஒரு வாரிசு இல்லாமப் போயிடுத்தே. அதை நினைக்கிறப்போ தான் என்னாலே தாங்கவே முடியல்லே.. மூன்று பிள்ளைகளில் ஒருத்தனாவது பெரியவரோட தொழிலுக்கு வரணுமே!

ஓசியர் (எழுந்து): அப்போ நான் வரேங்க, எனக்கு நேரமாகுது.

ராமு: அப்போ நானும் கிளம்பறேன்.

அருணகிரி: இரு பிச்சை, காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம். பிச்சை பிச்சைன்னு கூப்பிடப் போக ஒன் நெஜப் பேரே எனக்கு மறந்து போயிடுத்து. ஒன் பேரென்ன?

ராமு: ராமசாமி. ராமுன்னு கூப்பிடற பழக்கம்!

அருணகிரி: எனக்கென்னவோ ஒன்னைப் பார்த்தால் பிச்சைன்னுதான் நெனைப்புக்கு வர்றது. அந்த நாளிலே ஒன் பாட்டி உன்னைப் பிச்சைன்னு வாய் நிறையக் கூப்பிடற அழகு! ஆமாம், உனக்கு எவ்வளவு குழந்தைகள்?

ராமு: ரெண்டு — ஒரு பெண், ஒரு பையன்.

அருணகிரி: நாமிருவர், நமக்கிருவராக்கும்! போறது, அதிலேயாவது புத்திசாலிதான்... ஆமாம், எங்கே இப்படிக் காலங்கார்த்தாலே இப்படி...?

ராமு (தயங்கி): அத்திம்பேர் எழுதியிருக்கார்.

அருணகிரி: எந்த அத்திம்பேர்? ஒனக்கு அரை டஜன் அத்திம்பேர்கள்னு இருக்கா.

ராமு: முத்து அத்திம்பேர்.

அருணகிரி: ஓ! கொப்பணம்பட்டியானு? என்ன எழுதியிருக்கான்?

ராமு: ரொம்பப் பண முடையாம். கிஸ்தி வேறே கட்டியாகணுமாம். ஒங்க பணம் வந்துதான் ஆகணும்னு எழுதியிருக்கார்.

அருணகிரி: எம் பணமா! எந்தப் பணம்? ஓ, அதுவா?

ராமு: அத்திம்பேருக்கு என்ன எழுதறது?

அருணகிரி: முடியாதுன்னு எழுதிடு. அவனுக்கு என்னைக்குமே இங்கிதம் போறாது. ஒங்கப்பாவே அடிக்கடி சொல்லி வருத்தப்பட்டிருக்கார். கொழுந்தை நீ! போயும் போயும் இதைப்பத்தி ஒனக்கு எதுக்கு எழுதணும்!

ராமு: இதுக்குன்னு எழுதல்லே, வேற ஏதோ எழுதறத்தே. இதையும் பிரஸ்தாபிச்சிருந்தார். ரொம்பச் சிரமமாம், பாவம்.

அருணகிரி: நீ ஆயிரம் சொல்லு, முத்து அசடுதான்.

ராமு: அப்போ நான் வரேன்.


அருணகிரி: சரி. வந்திண்டு போயிண்டு இரு. நான் ஒங்கப்பாவோட ஆத்மார்த்தமான ஜூனியர்!

(3)

ராமு: ஆனாலும் இத்தனை சீக்கிரமா ஒருத்தராலே கிளம்பி வர முடியும்னு நான் நினைக்கல்லே.

அத்திம்பேர்: ஒன் கடுதாசைப் பார்த்தேன். எனக்கு இனிமேல் விஷயத்தைத் தள்ளிப் போட மனசில்லே. கொஞ்சம் அறுவடைகூடப் பாக்கியிருந்தது. பக்கத்து வீட்டுக் கணக்குப் பிள்ளையை வைச்சுண்டு

ஆயத்தமாக இருங்கள்!



ஃபாஷனுடன் கைகோத்து நிற்கிறது வலிமை!

இப்போது ஃபாஷனோடு கூடிய
மிதியடிகளில் வலிமை இணைந்துள்ளது.
உதாரணமாக ஸி.எஸ்.ஸி.யின் ரதன்.
இது பார்வைக்கு ஒயிலானது,
அணிவதற்கு மென்மையும்
இதமும் மிகுந்தது, எனினும் வலிமையும்
நீண்டகால உழைப்பாற்றலும் பெற்றது!

இன்றே அருகமைந்த ஸி.எஸ்.ஸி.
விற்பனையாளரிடம் ஸி.எஸ்.ஸி.யின்
புதிய தினுசுகளிலிருந்து உங்களுக்குப்
பிடித்தவற்றைத் தேர்ந்தெடுங்கள்!

மிகுந்த சிக்கனம், தகுந்த இதம்—
அதுவே ஃபாஷனோடு இணைந்த சுகம்!



CSC FOOTWEAR

தயாரிப்பாளர்கள்:
கரோனா ஸாஹூ கோ. லிட்.
பதிவு அலுவலகம்:
221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு,
பம்பாய்-1.

AIYARS-CSC. 305 TM

தான் பாத்துக்கறேன்னான் மைதிலி. கிளம்பி வந்துட்டேன்.

ராமு: நான் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தேன். கால்லே விழாததுதான் பாக்கி. ஒரு காலத்திலே அப்பாவோட ஜூனியர்ங்கிறதினாலே என்னை மடக்கிட்டார்.

அத்திம்பேர்: எங்கிட்டே அந்தப் பாச்சாவெல்லாம் பலிக்காது.

ராமு: மணி ஒன்றரையாகிறது. அநேகமா இப்போ பார் ரூம் காண்டீன்லேதான் இருப்பார். இல்லேன்னு வேறு வேறே இடங்களில் தேடிப் பார்க்கலாம். (சிறு தாமதம்)

ராமு (தொடர்ச்சி): அதோ டிபன் சாப்பிட்டுண்டு இருக்காரே! நல்ல வேளையா அவர் டேபிள்லே பாக்கி மூணு சீட்டுகளும் காலியாவே இருக்கு. வாங்கோ, அத்திம்பேர். (சிறு தாமதம்)

அருணகிரி: யாரு பிச்சையா? கூட வந்திருக்கிறது யாருன்னு தெரியல்லியே! இப்பல்லாம் கண் அவ்வளவு சரியாத் தெரியறதில்லே..... சாளேச்வரம்....

ராமு: அத்திம்பேர்.

அருணகிரி: யாரு முத்துவா? எங்கே முத்து. இவ்வளவு தூரம்? அடையாளமே தெரியாம இப்படிக் கறுத்து இளைச்சுப் போயிருக்கையே. அந்த நாளிலே எப்படித் தகதகன்னு பரங்கிப் பழம் மாதிரி இருப்பே!

அத்திம்பேர் (உறுமல்): ...ம்....

அருணகிரி: ஊரிலே விளைச்சல் எப்படி? அறுவடை முடிஞ்சு போயிடுத்தா?

அத்திம்பேர்: பாதி முடிஞ்சு. இன்னும் பாதி பாக்கி இருக்கு.

அருணகிரி: ஐயோ, பாவம்! என்னாலே இத்தனை சிரமம் ஒனக்கு.... போட்டதைப் போட்டபடி விட்டு வந்திருக்கே. மைதிலி ஒடம்பு ஒண்ணுமில்லாமல் இருக்காளா?

அத்திம்பேர்: ....ம்....

அருணகிரி: துணிஞ்சுண்டா பாவாடையும் சட்டையுமா மைதிலியைப் பார்த்தது....... கல்யாணத்துக்கு இன்னும் எத்தனை குட்டிகள் பாக்கி?

அத்திம்பேர்: ரெண்டு.

அருணகிரி: கோர்ட்டிலே ஒரே நம்பர்தான் போட்டிருந்தது. அதையும் ஜட்ஜ் ஒத்திப் போட்டுட்டார். அதான் டிபன் சாப்பிட்டுட்டு வீட்டுக்குக் கிளம்பலாம்னு இங்கே வந்தேன். நல்ல வேளை, நீயும் வந்துட்டே.... ஆமாம், பேசிண்டே இருக்கேனே, நீ என்ன முத்து சாப்பிடறே?....

அத்திம்பேர்: நான் வீட்டுக்கு வெளியே சாப்பிடற பழக்கமில்லே.

அருணகிரி: அது ரொம்ப ஒசந்த பழக்கம்தான். ஆனால் எங்க தொழில்லே அது சாத்தியமில்லே. அது மட்டுமா, அதுக்கு வேணுங்கற கட்டுப்பாடு, மனோதிடம் இதெல்லாம் எல்லாருக்குமே வந்துடறதா? பிச்சை! முத்து இருக்கான்னு நீ பட்டினி போட வேண்டாம்...முத்து! நேத்து போல இருக்கு, உன் கல்யாணம் நடந்தது. அதுக்குள்ளே நாற்பது வருஷங்கள் பறந்தோடிப் போச்சு.... பாவாடையும் தாவணியுமா மைதிலி மணையிலே இப்போ உட்கார்ந்திருக்காப்பிலே கண் முன்னே இருக்கு. ஏன் முத்து, உனக்கு அப்போ பதினேழு வயசுதானே!

அத்திம்பேர்: பதினெட்டு.

அருணகிரி: என்னிக்குமே முத்து சூரர் பேர்வழி. நான் பதினேழுன்னதைப் பதினெட்டுன்னு கரெக்ட் பண்ற அழகைப் பாரு. ஏண்டா, பிச்சை! கோமளிக்கும் மைதிலிக்கும் ஒரே பந்தல்லேதான் கல்யாணம்! ஏண்டா விழிக்கறே.... (சிரித்து) அடேடே! உன்னைப் போய்க் கேக்கறேனே. நீ அப்போ பொறக்கவே இல்லையே.....

அத்திம்பேர்: உண்மை.

அருணகிரி: அப்போதெல்லாம் நான்தான் ஒங்க மாமாவுக்கு ரைட் ஹாண்ட். எதையும் என்னைக் கலந்துக்காம அவர் செய்யமாட்டார். கோமளியின் புக்ககத்துப் பேர் கோயமுத்தூர்க்காரர்கள் கொஞ்சம் தடபுடல் பேர்வழிகள். அவாளைத் திருப்தி பண்ண ஒன் மாமா கோமளிக்குக் கொஞ்சம் அதிகமாகவே நகைநட்டுகள் போட்டிருந்தார். கோமளியைப் போலத் தனக்கும் நகை போட்டாத்தான் மணையிலே ஒக்காருவேன்னு மைதிலி பிடிவாதம் பண்ணி அழ ஆரம்பிச்சுட்டா. அப்போ வீட்டிலே இருந்த நகைகளைப் போட்டு அவளைச் சமாதானம் பண்ணப்பட்ட பாடு... அப்பப்பா!

அத்திம்பேர்: (மௌனம்)

அருணகிரி: என்னவோ போ. ஒரு தரம் உன் கிராமத்துக்கு வந்து மைதிலியையும் கொழந்தைகளையும் பார்க்கணும்னு ஆசை.

அத்திம்பேர்: நீங்க ஒரு கார்டு போடுங்கோ. நானே ஸ்டேஷனுக்கு வண்டியோட வரேன்.

அருணகிரி: எதுக்கு முத்து! நீ இப்போ சொன்னியே, அதுவே எனக்குப் போதும். ஒன் கொழந்தை மனசு எனக்குத் தெரியாதா? (சிறிது நேரம் கழித்து) அடேடே! முத்து! எதுக்கு நீ பில்லை எடுக்கறே!

அத்திம்பேர்: நான்தான் கொடுப்பேன். எனக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் பிறகு எப்போ கிடைக்கும்?

அருணகிரி (முணுமுணுத்து): முத்து என்னிக்குமே பத்தரைமாத்துத் தங்கம். அப்போ பிச்சை! முத்துவை நீ இந்த வெயில்லே அலைக்கழிக்காதே. வண்டி வச்சு வீட்டுக்கு அழைச்சுண்டு போ. நான் கிளம்ப இன்னும் கொஞ்சம் நேரமாகும்..... (சிறு தாமதம்) முத்து! ஒரு நிமிஷம் நீ மாத்திரம் இப்படிப் பக்கத்திலே வா. (காதில் கிசுகிசுக்கிறார்)

அருணகிரி: அப்போ பத்திரமா போய்வா. ஊருக்குப் போனதும் கடிதாசு போடு. மைதிலி கொழந்தைகள் எல்லாரையும் கேட்டேன்னு சொல்லு.

அத்திம்பேர்: கட்டாயம்.

ராமு: தனியாக் கூப்பிட்டு என்ன சொன்னார்?

அத்திம்பேர்: ஓ, அதுவா? அவர் கொழந்தை மனசைப் பாரு. 'உனக்கு மொடை அவ்வளவு கடுமையாக இருந்தால் பிச்சைகிட்டே வாங்கிக்கோ. அவன் உன்னூரிலே இருக்கிறதினாலே எனக்கும் திருப்பிக் கொடுக்க வசதியாக இருக்கும்'னார். நான்தான் ரொம்பக் கட்டாயப்படுத்தி ஒங்க சௌகரியப்படி பணத்தைத் திருப்பிக் கொடுத்தால் போறும்னு சொல்லிட்டேன். ஆயிரம் சொல்லு ராமு, பழங்காலத்து மனுஷா பழங்காலத்து மனுஷாதான்....!



ஆடவர் நாகரீகத்திலே
அலைஅலையாகப் புதுமைகள்!
மோதி
சூட்டிங்குகள் மற்றும்
ஷர்ட்டிங்குகள்,
TERENE 'டெரீன்' இழை கலந்தவை
ஏறுபோன்ற மிடுக்கு—அதை எடுத்தியம்பும்
தீரம். துணிகரமான பாணிகள்,
கிளர்ச்சியூட்டும் வகைவகையான
TWILL ட்வில் சூட்டிங்குகள். எண்ணத்தைக்
கிளர்ந்திடும் எண்ணிலா புதுப்புது
ரகங்களிலே ஷர்ட்டிங்குகள்.
மோதி ரேயான் அண்ட் சில்க் மில்ஸ்
CHAITRA-CAFI-168 Tam

ஞானக்குயில்

ஜெகசிற்பியன்

27. கண்ணீரில் ஓர் அலை

ஆடம்பரமான பெரிய ஹோட்டல் அது. புதிதாகத் திறக்கப்பட்டது. அதன் சில பகுதிகள் பூர்த்தியடையாமல் இன்னமும் நிர்மாண வேலைகள் நடந்து கொண்டிருந்தன. காசு பறிப்பதற்கான எல்லாவிதமான 'கலாதந்திர'களும் கொண்டு விளங்கியது அந்த ஹோட்டல்.


சிற்றுண்டிக்கெனத் தனியாக ஒரு பகுதி இருந்தது. அதன் ஒரு பாதி உள்ளேயும், மறு பாதி திறந்தவெளித் தோட்டத்திலும் அமைந்திருந்தன. தங்கள் கால் பட்டால் பூமாதேவி அசுத்தமாகி விடுவாள் என்னும் நல்லெண்ணம் கொண்ட 'புனிதாத்துமாக்கள்' காரிலேயே உட்கார்ந்து கொண்டு காப்பிப் பலகாரங்களை 'மொக்கி' விட்டுப் போவதற்குத் தோதாகவும் அமைந்த பகுதி அது.

திறந்தவெளிப் பகுதியில் அமர்ந்து வெறும் காப்பியை மட்டும் பருகிவிட்டு அங்கிருந்து எழுந்து போக மனமில்லாமல் சுற்றிலுமிருந்த மனோரம்யமான காட்சிகளைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான் நரசு. காப்பி ரொம்பவும் உயர் தரமாக இருந்தது; அதேபோல் 'பில்'லும் உயர்வாகவே வந்து சேர்ந்தது. தான் அணிந்திருந்த ஆடையை விட அதிக விலை மதிப்புவாய்ந்த ஆடைகளுடன் விளங்கிய அந்த ஹோட்டல் 'வெய்ட்டரை'க் காப்பி கொண்டு வரச் சொல்லி வேலை வாங்கிய குற்றத்துக்கு அபராதத் தொகையாக நாலணாவும் சேர்த்துப் பில் பணத்தைச் சாஸரில் வைத்துவிட்டு எழுந்தான்.

'' டைம் ப்ளீஸ் !''

அப்போதுதான் அவன் அருகில் வந்து நின்ற காரிலிருந்து புன்முறுவல் பூத்தாள் ஓர் அழகிய பெண். கடலூர்த் தியேட்டர் முதலாளியின் மகள்தான் அவள் !

மாயூரத்திலிருந்து ரயிலில் வரும்போது ஓடாத கடிகாரம் கட்டிக்கொண்டிருந்த அவளிடம் மணி கேட்டு மானத்தை வாங்கியதற்குத் தன்னை முதலிலேயே ஒருமுறை கடலூர் பஸ் நிலையத்தில் பழி வாங்கியும் திருப்தியுறாமல் இப்போது இங்கே இரண்டாம் தடவையாகப் 'பழி வாங்க'வே இப்படிக்





கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட நரசுவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. கூச்சத்துடன், மெல்லச் சிரித்துக்கொண்டே, ''ஆறரை!'' என்றான் அவன்.

''தாங்ஸ்'' என்று சொல்லி அவனை விஷமப் புன்னகையுடன் நோக்கிய அவள் சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவள் போல் காரை விட்டுக் கீழே இறங்கி நின்று கொண்டாள். ''உங்க சித்திரக்காரர் நண்பர் இங்கே இருக்கிறாரே, தெரியுமா?'' என்றுகேட்டாள்.

''யார்? விஜயரங்கனா ?''

''ஆமாம்.''

''எங்கே ?''

''இந்த ஹோட்டலில்தான்.''

''அப்படியா?'' என்று வியப்பும் மகிழ்ச்சியுமாகத் திணறிய நரசு, ''எதற்கு இங்கே வந்தான்?'' என்று தன்னையே கேட்டுக் கொள்வதுபோல் மெல்ல இழுத்தான்.

''இந்த ஹோட்டலில் ஆடிட்டோரியம் ஒண்ணு புதுசாக் கட்டிக்கிட்டு இருக்கிறாங்க. அதன் உள் சுவர்களிலே சித்திரங்கள் தீட்டறதுக்காக அவர் வந்திருக்கிறார். இந்தக் காண்ட்ராக்டை என் அப்பாதான் அவருக்குப் பிடிச்சுக் கொடுத்தார். ஹோட்டலிலேயே தங்கிக்கொள்ள அறை கொடுத்திருக்கிறாங்க. இரண்டாவது மாடி, இருபத்தேழாம் நம்பர் அறை.''

இவ்வளவையும் அவள் வார்த்தைகளால் சொல்லியிருக்கவே வேண்டியதில்லை என்று எண்ணினான் நரசு. ஏனென்றால் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு முத்திரை பதித்து முக பாவங்களைச் சேர்த்து அத்தனை அற்புதமான அபிநயங்களுடன் முடித்தாள் அவள்.

ஒரு விநோதமான பொம்மையை வேடிக்கை பார்க்கும் சிறுவன்போல் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான் நரசு. ''நீ....ங்க எதுக்கு இங்கே இந்த மெட்ராசுக்கு...?'' என்று தயக்கத்துடன் இழுத்தான்.

''நான் என் அப்பாவோடு வந்திருக்கிறேன். எங்க சொந்தக்காரர் வீட்டில் தங்கியிருக்கிறோம்.''

''இங்கே... இந்த ஹோட்டலுக்கு?''

''காப்பி சாப்பிட.''

''வீட்டுக் காப்பி பிடிக்காதாக்கும்!''

அவனுடைய கேள்வியில் தொக்கிய கேலியைப் புரிந்து கொண்ட அவள் வெடுக்கென்று முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள்.

''இப்போ என் நண்பனைப் பார்க்க முடியுமா?'' என்று ஆவலுடன் கேட்டான் நரசு.

அவளுடைய புருவங்கள் ஒன்றையொன்று உரசின. ''நான் என்ன, அவருடைய பி.ஏ.யா?'' என்று உள்ளார்ந்த சீற்றத்துடன் முகத்தைச் சுளித்தாள் அவள். சரேலெனக் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். கார் கிளம்பிச் சென்றது.


'சரிதான்; பயல் ரொம்பச் சீக்கிரம் தூண்டில் போட்டு ரொம்பப் பெரிய மீனாகவே இழுத்துவிட்டான்! ஆமையை நம்பினாலும் ஊமையை நம்பக்கூடாதுங்கிறது சரியாய்ப் போச்சு!' என்று தனக்குள் குதூகலத்துடன் முணுமுணுத்துச் சிரித்துக் கொண்ட நரசு, அப்போதே போய் ரங்கனைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் அந்த ஹோட்டலின் லாட்ஜிங் பகுதியை நோக்கி நடந்தான்.

அவள் சொன்னபடி இரண்டாவது மாடி, இருபத்தேழாம் நம்பர் அறையைத் தேடிச் சென்ற அவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

அந்த அறை சாத்திக் கிடந்தது. ஆனால் விஜயரங்கன் அதிலேதான் தங்கியிருக்கிறான் என்பதைப் பக்கத்து அறைக்காரரிடம் விசாரித்து ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட பிறகு ஓரளவு ஆறுதல் அடைந்தான் அவன். 'எங்கேயாவது வெளியே போயிருப்பான்; சரி, நாளைக் காலையில் வந்து சந்திக்கலாம்' என்ற தீர்மானத்துடன் திரும்பி வீடு வந்து சேர்ந்தான்.

மறுநாள்.

நரசு ஊரிலிருந்தபோது கடந்த ஓராண்டாகக் காலை நேரத்தில் செய்து வந்த ஒரு காரியத்தை இங்கேயும் இன்று செய்யத் தொடங்கினான். அதாவது, அன்றைய தினப் பத்திரிகையில் — 'தேவை' பத்தியில் — வெளியாகும் விளம்பரங்களை ஒன்றுவிடாமல் படித்து அவற்றில் தன் தகுதிக்கும் விருப்பத்துக்கும் நம்பிக்கைக்கும் உரியனவாகப்படும் இரண்டு மூன்றைத் தேர்ந்தெடுத்து



அவற்றுக்குத் தனது திறமை முழுவதையும் பிரயோகித்து விண்ணப்ப மனுக்கள் எழுதுவது என்னும் காரியம் தான் அது. அவ்வாறே இன்றும் சென்னையிலுள்ள இரண்டு கம்பெனிகளின் 'தேவை' விளம்பரங்களைப் பத்திரிகையில் தேடிப் பிடித்து அவற்றுக்கு வேலை கோரும் விண்ணப்ப மனுக்கள் எழுதித் தபாலில் அனுப்பத் தயார் செய்து கொண்டு திருமலையைப் பார்த்து வரக் கிளம்பினன்.

வழக்கம்போல் கதவு ஒருக்களித்துச் சாத்தப்பட்டிருந்தது. மெல்லக் கதவைத் தட்டியிருக்கலாம்; ஏதோ ஞாபகத்தில் அவன் அதைத் தள்ளித் திறந்துவிட்டான்.

உள்ளே, முதல் அறையின் ஒரு மூலையில், முட்டிக் கால்களைக் குத்திட்டு வைத்துக் கட்டிப் பிடித்தபடி தலை குனிந்து உட்கார்ந்திருந்த கண்ணம்மா தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். நரசு வந்து கதவைத் திறந்ததைக்கூட அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

'இந்தப் பெண் தன் வீட்டில் இப்போது மகிழ்ச்சிக் குதூகலத்துடன் வளைய வந்து கொண்டிருப்பாள் என்றல்லவா எண்ணினேன்? அவ்வாறே எதிர்பார்த்துக் கொண்டும் வந்தேன்? ஆனல் இவளோ!....'

''திருமலை இருக்கிருனு ?''

இவ்வளவு நேரம் முழங்கால் முட்டியின் மீது மோவாயைப் பதித்தவண்ணம், கண்களிலிருந்து தரையில் சொட்டிய நீர்த் துளிகளைத் தன் வலக் கைச் சுட்டுவிரலால் ஒன்றேடொன்று இணைத்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்த கண்ணம்மா இந்தக் குரல் கேட்டுத் திடுக்குற்றவளாய் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்ருள். நரசுவைத் திடுமென்று பார்த்த அதிர்ச்சியால் அவளுக்குப் பொறி கலங்கியிருக்க வேண்டும் — பரபரப்புடன் எதையோ தேடுவது போல் அங்குமிங்குமாக நடந்துவிட்டுச் சட்டென்று நின்று, ''வாங்க...! அம்மா இருக்கிருங்க!'' என்று குழறினள்.

நரசு அவளின் அச்சக் குறுகுறுப்பைப் போக்குவதற்காக மென்முறுவல் பூத்தவாறு ரொம்பவும் சகஜமாக உள்ளே வந்து அங்கிருந்த அந்த ஒரே பழைய பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தான்.

கண்ணம்மாவுக்கு ஏற்பட்ட பயமும் படபடப்பும் இன்னும் அவனைவிட்டு நீங்கவில்லை. அதனல் அவனை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் பின்னல் சுவரோரம் நகர்ந்து ஒடுங்குவதும், பிறகு முன்னல் வருவதுமாகத் தவிப்படைந்தாள் அவள். ''இருங்க, இதோ அம்மாவைக் கூப்பிடறேன்'' என்று கூறியவாறு சரேலெனத் திரும்பி உள்ளறைக்குப் போய் மறைந்தாள்.

இப்படி அவள் நடந்து கொண்டது அவனுக்கு அவ்வளவாக வியப்புத் தரவில்லை. ஏற்கனவே அவளுடைய சுபாவத்தை அவன் ஓரளவு புரிந்துகொண்டிருந்ததால், தன்னைப் பார்த்ததும் இவ்வாறு மிரட்சியடைவாள் என்பதை எதிர்பார்த்தே வந்தான். ஆனல் அவள் இங்கேயும் அழுது கொண்டிருப்பாள் என்று மட்டும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. மாயூரத்துக் காவிரிக் கரையிலும், பிறகு ஓடும் ரயிலிலும் பார்த்த அதே அழகு முகம், கண்ணீர் சிந்தும் கண்கள், துயரத்தால் துடிக்கும் இதழ்கள்!.....

''வாங்க, தம்பி! சௌக்கியமா?'' என்று இளநகையுடன் கேட்டுக்கொண்டே வந்து கதவோரம் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள் திருமலையின் தாயார். ஆனல் அவளுடைய உடம்பு இன்னமும் சௌக்கியப்படவில்லை என்பது அவள் இருந்த தோற்றத்திலேயே தெரிந்தது. இந்நேரம் படுத்திருந்து எழுந்து வந்தவள் போலவும் காணப்பட்டாள்.

''இருக்கிறேன், அம்மா!... சும்மா பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்ருன் நரசு சிரித்துக்கொண்டே.

'' நீங்க நேத்திக்குச் சொன்ன மாதிரியே என் மகள் நல்லபடியா வீடு வந்து சேர்ந்துவிட்டாள் தம்பி! உங்க வாயிலே சர்க்கரை கொட்டணும்!'' என்று உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் சொன்னுள் அவள்.

''திருமலை இருக்கிருனும்மா?''

''இருக்கிருனே ? நீங்க இன்னும் அவனைப் பார்க்கவில்லையா?'' என்றவாறு உள்ளே திரும்பிப் பார்த்த அவள், ''மேலே இருக்கிருன் தம்பி!'' என்ருள். அவளது குரலில் ஒருவிதக் கரைசலும் புகைச்சலும் இழைந்தன.

'' நான் மாடிக்குப் போகலாமாம்மா?''

''அதனுலென்ன? போங்க தம்பி!'' என்று சொல்லிக் கொண்டே தரையில் கைகளை ஊன்றி எழுந்த அந்த அம்மாள் நரசுவின் அருகில் வந்தாள். '' ஒரு விஷயம் தம்பி! நீங்க இங்கே வருகிறது பற்றி எனக்குச் சந்தோஷம்; ஆனல் அடிக்கடி வராதீங்க!'' என்ருள் தணிந்த குரலில்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்துவிட்டான் நரசு. அவமானத்தால் முகம்

இந்த தீபாவளிக்கு சாரதாஸின்
பெருமை மிக்க படைப்புகள்...

அழகு சாம்ராஜ்யத்தின் இளவரசிகளுக்கு

"அனுராக்"

மயிலைப் பழிக்கும்
மங்கையருக்கு

"டிம்பிள் குவீன்"





செல்லும் இடமெல்லாம்
பிரகாசத்தை அளிக்க

சூரிய வல்லி

சாரதாஸ்


32, N.S.B. ரோடு,
திருச்சி-2
போன்: 7077

பட்டுப்புடவைகளுக்கு நம்பிக்கையான பெயர்

தன் பில்டிங் 175 1, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 87177

தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு


பண்டைய
நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
அன்றைய குஜராத்தி மரபினைப் பின்பற்றி சேலை அணியும் பாணி இன்று மீண்டும் மங்கையரிடையே உலவத் தொடங்கி உள்ளது. அதுவும் அணிந்திடும் சேலை மபத்லாலின் 'மொ:ப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலையாக இருக்குமே எனில், அழகு முழுமை பெற்று முறுவலிக்கிறது!
'மொ:ப்ரின்' பாலியெஸ்டர் சேலைகள் பண்டைய கற்பனைகளுக்கு, நவீன ஒயிலோடு கூடிய வண்ணம், வடிவம் மற்றும் நெசவின் நேர்த்தியை கலந்திழைத்து, கிளர்ச்சியூட்டும் மறுமலர்ச்சியை அளிக்கின்றன!
மபத்லால் க்ரூப் அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்
மொஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்



வெளிறி, உடல் குன்றி, குப்பென்று வியர்த்தும் கொட்டிவிட்டது. தன்னை மீறிய ஒரு துடிப்புடன் எழுந்து நின்று கொண்ட அவன், ''சரியம்மா! தெரியாமல் வந்துவிட்டேன், மன்னிச்சுடுங்க!'' என்று கரகரத்தான்.

''நான் எதுக்கு இப்படிச் சொல்றேன்னு நீங்க புரிஞ்சுக்கலே போல் தோணுதே!'' என்று அவன் முகத்தைக் கனிவுடன் ஏறிட்டு நோக்கினாள் அவள். ''அதாவது..... சரி; அதை விளக்கிச் சொல்ல விருப்பமில்லே! நீங்க என்ன வேணுமானாலும் நினைச்சுக்குங்க!'' என்றாள் துயரம் செறிந்த குரலில். ''ஆனால் ஒண்ணை மட்டும் கேட்டுக்குங்க தம்பி!.... நீங்க எங்களைப் பார்க்க வருகிறதுபற்றி நான் எதுவும் சொல்லலே; இந்த வீட்டுக்கு வரவேணும்னுதான் சொல்றேன்.''

ஒரேயடியாகக் குழம்பிப் போன நரசு அவளைத் திருதிருவென்று பார்த்துக் கொண்டே பின்னால் நகர்ந்தான்.

''திருமலையைப் போய்ப் பாருங்க! ஆனால் நான் இப்படிச் சொன்னதை அவன்கிட்டச் சொல்லிவிடாதீங்க!''

தலை குனிந்தபடியே வெளியே வந்த நரசு, தயங்கித் தயங்கி மாடிப் படிகளில் ஏறிச் சென்றான்.

''அடடே, நரசுவா?..வா, நரசு!''

அறையின் சன்னலோரம் நாற்காலியில் அமர்ந்து கால்களைக் கட்டைச் சுவர் மேல் நீட்டிப் போட்டுச் சாய்ந்தவாறு ஏதோ புத்தகம் படிப்பதில் ஆழ்ந்து போயிருந்த திருமலை துள்ளியெழுந்து ஓடி வந்து நரசுவின் கையைப் பிடித்துக் குலுக்கியபடி உள்ளே அழைத்துச் சென்றான். ''இப்போ நீ வருவேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லே, நரசு, வா, வா, இப்படி உட்.... ஓ, நாற்காலி இல்லையா?.... இதோ, ஒரு நிமிஷம்; கொண்டு வந்துடறேன்.'' — அவன் ஒரே பாய்ச்சலாக வெளியே பாய்ந்து குறுகிய படிகளில் கிடுகிடுவென்று இறங்கி ஓடினான்.

நரசுவின் மனம் ஏனோ திக்திக்கென்று அடித்துக் கொண்டது. இனம் புரியாததோர் அச்ச உணர்ச்சியும் அவனுள் கிளர்ந்தது. பார்வை நிலைகொள்ளாமல் அங்குமிங்கும் சுழன்றது.

இரண்டு அறைகள் மட்டுமே கொண்டு அமைந்திருந்தது, அந்த மாடிப் போர்ஷன். முன் அறை கொஞ்சம் பெரிசு. அதற்கு அடுத்த அறை அதில் பாதிதான் இருக்கும். ஆனால் அவ்விரு அறைகளுமே வெறிச்சோடிக் கிடந்தன. திருமலை உட்கார்ந்து கொண்டிருந்த நாற்காலியைத் தவிர வேறு ஒரு பொருளும் அவற்றில் காணப் படவில்லை. தரையில் ஒரு குப்பைகூளம்; எரிந்த சிகரெட் துண்டுகள். சுவர்களிலும் உத்தரங்களிலும் ஒட்டடைச் சரங்கள்; நூலாம்படைகள்.

அந்த வங்காளிப் பேர்வழி எங்கே? அடுத்த அறையில் இருப்பாரோ?—

தன் வீட்டில் கிடந்த பிரம்பு நாற்காலியை மேலே தூக்கிக் கொண்டு வந்தான் திருமலை. ''உட்கார் நரசு!'' என்றவாறு சன்னல் அருகில் போட்டு விட்டு இரைப்பு வாங்க இன்னொரு நாற்காலியில் அமர்ந்து தன் இரு பாதங்களையும் தூக்கி இடக் கையால் மெல்லத் தடவி விட்டுக் கொண்டான். பாதரட்சை அணியாமல் படிகளில் இறங்கி ஏறி ஓடி வந்ததால் அவை நோவெடுத்துவிட்டன போலும்!

தனக்கு ஏற்பட்ட திகைப்பையும் வியப்பையும் ஒருவாறு அடக்கிக் கொண்டு அவன் எதிரே புன்முறுவலுடன் உட்கார்ந்தான் நரசு. ''நீ இந்த நேரத்தில் வீட்டிலே இருப்பாயோ, மாட்டாயோன்னு நினைச்சுக்கிட்டு வந்தேன்; ஊம்பின வேளை நல்ல வேளையாய் இருந்துவிட்டது'' என்றான், உயிரற்ற குரலில்.

''வாஸ்தவம். இந்தப் புத்தகத்தாலேதான் நான் இன்னிக்கு எங்கும் வெளியில் போகலே. இதைச் சாயந்திரத்துக்குள்ளே படிச்சுடணும்னு நிர்ப்பந்தம்'' என்று சொல்லிக்கொண்டே

தான் இதுகாறும் படித்துக் கீழே போட்டிருந்த ஒரு புத்தகத்தைச் சுட்டிக் காட்டிவிட்டு நரசுவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான் திருமலை. "அது சரி; நீ ஏன் ஒரு மாதிரி இருக்கிறே? முகம் மூணும் பேஸ்து அடிச்சுட்டிருக்குதே !" என்று சிரித்தவாறு கேட்டான். அந்தப் புத்தகத்துக்கு ஒரு பழைய செய்தித் தாளைக் கொண்டு அட்டை போட்டிருந்ததால் அது என்ன தலைப்புள்ள புத்தகம் என்பது தெரியவில்லை.

" அதெல்லாம் ஒண்ணுமில்லே, திருமலை! காலை வெயிலில் நடந்து வந்த களைப்பு" என்று சொல்லிக் கைத் துண்டால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு சிரித்தான் நரசு. " அது இருக்கட்டும். அவ்வளவு நிர்ப்பந்தத்தோடு படிச்சு முடிக்க வேண்டிய அத்தனை முக்கியமான புத்தகமா அது ? என்னப்பா, அப்படிப்பட்ட அரிய புத்தகம் ?"

"எல்லாம் நீயும் படிச்சுக் கிழிச்சது தான் ! ரூரல் எகனாமிக்ஸ்....."

"அட, பாவி ! இதைத்தான் கல்லூரியிலே வருஷக் கணக்கில் கட்டிக்கிட்டு மாரடிச்சோமே ? மறுபடியும் எதுக்கு ?"

" சும்மா, பொழுது போக்குக்குத் தான்."

" என்னமோ நிர்ப்பந்தம்னு சொன்னியே ?"

"ஓ....அதுவா? இன்னையப் பொழுது கைச் செலவுக்கு இதை மூர்மார்க்கெட்டிலே விற்கணும் ; விற்கிறதுக்கு முன்னாடி ஒரு பார்வை பார்த்துவிடலாமென்னு படிச்சேன் ; படிச்சுக்கிட்டே இருந்துவிட்டேன். நேத்திக்கும் இதே போல் 'பிசினஸ் ஆர்கனிசேஷன்' என்கிற புத்தகத்தை விற்றுவிட்டேன்."

நரசுவுக்கு இப்போது ஏன்தான் இவ்விஷயத்தை இவ்வளவு தூரம் துருவிக் கேட்டோமோ என்றாகிவிட்டது. அவன் மெல்லத் தலையாட்டியபடியே பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான்.

ஏதோ ஒன்றில் வெற்றிபெற்றுவிட்டாற்போல் விஷமச் சிரிப்பு சிரித்துக் கொண்ட திருமலை, "ஆமாம்; நீ இங்கே வருகிறதுக்கு முன்னாடி கீழே என் அம்மாவைப் பார்த்தாயா ?" என்று கேட்டான்.

"பார்த்துவிட்டுத்தான் வந்தேன்."

"எதனாச்சும் சொன்னாங்களா?"

"உன்னைப் பற்றியா ?"

"பொதுவாக எதனாச்சும்?"

"இல்லை."

"இல்லையா?" என்று அவன் சொல்வதை நம்பாதவன் போல் உதட்டை மடித்துக் கூப்பினான் திருமலை.

"ஆனாலும் ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டது" என்று கூறி மெல்லச் சிரித்தான் நரசு.

" என்னப்பா அது சந்தேகம் ?"

" உன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லேங்கிறது எனக்குத் தெரியும்.... அதோடுகூட யார் மேலேயோ, எதற்காகவோ கோபமாயிருக்கிறாங்கன்னும் தெரிஞ்சது. என் ஊகம் சரிதானா?"

"சரிதான்."

"உன் தங்கைகூட அழுதுக்கிட்டிருந்தாள்......"

"அதையும் பார்த்துவிட்டாயா?"

"என்ன, ஏதாவது சண்டையா ?"

"ஆமாம், முதலில் என் மேல் பாய்ச்சல். அப்புறம் என் தங்கை பக்கம் அது திருப்பிவிட்டது......" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டான் திருமலை.

"என்ன விஷயமாய் என்பதை உன் நண்பன் அறியலாமல்லவா ?" என்று மென்னகையுடன் நாசுக்காக வினவினான் நரசு.

"என் போன்றவர்களின் வீட்டில் சண்டை சச்சரவு ஏற்படுதுன்னா, அது எதற்காக இருக்குமிங்கிறதை நான் சொல்லித்தான் நீ தெரிஞ்சுக்கணுமா நரசு? இல்லாத குறையால் உண்டாகிற புகைச்சல்தான்! கடந்த ஒரு வருஷமா, வருமானமே இல்லாமல் இந்த மெட்ராஸிலே ரெண்டு பேர் ஜீவிக்கிறது இலேசா என்ன? கொஞ்ச நாட்களாகத் தான் சைனாபஜார் பெட்டிக் கடைகளில் கணக்கு எழுதித் தினமும் ரெண்டோ மூணோ கொண்டு வந்து கொடுக்கிறேன். அதிலேதான் காலம் ஓடிக்கிட்டு இருக்குது. இந்த லட்சணத்தில் என் தங்கை வேறே வந்து சேர்ந்துவிட்டாள். அதனால் இப்போ ரெண்டோடு இன்னொரு வயித்துக்கும் சேர்த்துப் பதில் சொல்லியாகணுமே! விடிஞ்சதிலிருந்து இதைப் பற்றித்தான் பேச்சு, ஏச்சு, வெறுப்பு, சலிப்பு, கோபம், குமுறல் எல்லாம் நடந்துக்கிட்டு இருக்குது."

கண்ணம்மாவின் அழுகைக்குக் காரணம் புரிந்துவிட்டது நரசுவுக்கு. இங்கே இருக்கும் நிலைமையை யோசித்துப் பார்க்காமல் அவசரப்பட்டுத் தன் மாமா வீட்டிலிருந்து ஓடிவந்து விட்டது பற்றித் தாயார்க்காரி அவளைத் திட்டித் தீர்த்தாள் போலும் ! (தொடரும்)

இந்த ஆண்டின்

குமரன்

புதிய டிசைன்கள்

முக்கனி • மனோரஞ்சிதம்

நீலவானம் • சுமங்கலி

புதிய கலர்கள்

பசுங்கிளி • ஸ்ரீ தேவி

நவ நாகரீக நங்கைகள் தேர்ந்தெடுப்பது

குமரன்

பட்டுப் புடவைகளே!


குமரன் சில்க்ஸ்

(பனகல் பார்க் எதிரில்)
தி. நகர், சென்னை-600017
போன்: 443544

தயாரிப்பு நிலையங்கள்:
காஞ்சீபுரம் & ஆரணி



Sarath


பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புதம்
மோஸ்தர்கள்
நாகரீகமான பிரிண்டுகள் ... மதிமயக்கும் நெசவுநயம்...
விரும்பித் தேர்ந்தெடுக்க விதவிதம்.
இயற்கைச் சிறப்பிலே இணையற்றது பருத்தி.
ஸெண்சுரி - 100% பருத்தித் துணிகள்
தி சென்சுரி ஸ்பின். அண்டு. மான்யு. கம். லிமிடெட், பம்பாய்-400 025
ADROIT/CM/534 P/TAM

தரமுயர்ந்த கவர்ச்சிகரமான சேலைகளைத் தேர்ந்தெடுக்க - ஒளி மின்னும் வண்ணங்களிலும் - வரிகளிலும் - கட்டங்களிலும் - சூட்டிங் — ஷர்ட்டிங்குகள் வாங்க, அலங்கார துணி வகைகள் - படுக்கை விரிப்புகள் தேர்ந்தெடுக்க கீழ்க்கண்ட எங்கள் கடைகளுக்கு வருகை தாரீர்.

ராமு & கோ

உயர்ந்த ரக ஜவுளிகளுக்கு மூன்று கடைகள்

① ஆர். எஸ். புரம்
போன்: 24397

② கிராஸ்கட் ரோடு
போன்: 25889

③ அவனாசி ரோடு
போன்: 25124

பாம்பே டையிங் ஜவுளி ஷோரும்

போயிங்

ஆர். எஸ். புரம்
போன்: 35441

ஹரே ராமா

நாகரீக ஜவுளி ஷோரும்
சாயிபாபா காலனி முன்புறம்
போன்: 35205
கோயமுத்தூர்

எங்களிடம் ஜவுளி வாங்கும்போது விலைவாசி ஏற்றம் கண்டிப்பாக உங்களைப் பாதிக்காது

OSR



அமிர்தாஞ்சனம்

AM/7573


தலைவலி, ஜலதோஷம் மற்றும் வலிகளுக்கு நம்பகமான நிவாரணி

அமிர்தாஞ்சனம் சுளுக்கு, தசைவலி, உடல்வலி, தலைவலி, ஜலதோஷம் இவற்றிலிருந்து உடனடியாக குணமளிக்கிறது. அமிர்தாஞ்சனம் தடவியதும் வலி மறைகிறது. பாட்டில்கள், சிக்கனமான ஜாடிகள், மற்றும் மலிவு விலை டப்பாக்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் — பத்து மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்தது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்

உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்



உங்கள் மகன் பெரியவனானதும் எந்தத் தொழில் செய்யப்போகிறான்? என்ஜினியரா? கட்டடக்கலைஞரா? டாக்டரா? வக்கீலா? எதுவானாலும் சரி அதற்கு ஏராளமாகப் பணம் தேவை. அவனது எதிர்காலத்திற்கென்று பணம் சேமித்து வருகிறீர்களா? யூகோ பாங்கில் சேமித்து வாருங்கள்; உங்கள் பணம் பெருகிக் கொண்டே போகும்.


**யூகோ பாங்க்
வளம் பெற வழி
வகுத்தளிக்கின்றது**


யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம் : கல்கத்தா


UCO-7/71


இந்தியாவின் மிகப் பெரிய கனரக மின்சாதனத் தொழில் உலகிலேயே உன்னதமான முன்னேற்றம் அடைந்தவற்றுள் ஒன்றாக விளங்குகிறது











அத்தாட்சி வேண்டுமா? இந்திய நாட்டின் தொழில் முன்னேற்றத்தை விரைவுபடுத்திவரும் எங்கள் டர்பைன்களும் ஜெனரேட்டர்களும் சான்று கூறும். எங்களால் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வரும் மின் பணி ஒப்பந்தங்கள் சாட்சி சொல்லும். உலகெங்கும் தொழிற்சாலைகளுக்கு ஊக்கசக்தியூட்டி வரும் எங்கள் மோட்டார்கள் சான்று கூறும். நானிலமெங்கும் நாட்டுப்புற, நகர்ப்புறமெல்லாம் உருமாறச் செய்து வரும் எங்கள் டிரான்ஸ்பார்மர்களும் ஸ்விட்சு கியர்களும் சாட்சி சொல்லும். பார்க்கப்போனால், உலகிலே ஒப்பற்ற முன்னேற்றம் கண்ட கனரக மின் சாதனத் தொழில்களிலே ஒன்றாக HE (போபால்) விளங்குகிறது என்பதற்கு உயிருள்ள சான்றாக திகழ்பவை அதிலுள்ள எங்கள் எந்திர சாதனங்களும், ஊழியர்களும் ஆகும். எங்கள் கருவிகளும் சாதனங்களாவன:


- 200 MV வரை உள்ள வாட்டர் டர்பைன்கள், அவற்றிற்குப் பொருந்திய ஜெனரேட்டர்கள்.
- 236 MV வரை உள்ள ஸ்டீம் டர்பைன்கள், டர்போஜெனரேட்டர்கள், ஃபீடு ஹீட்டர்கள், கண்டென்ஸர்கள்.
- 400 KV வரை போகும் வோல்டேஜுக்கென, 400 MVA வரை யூனிட் ரேட்டிங்கள் உடைய டிரான்ஸ்பார்மர்கள்.
- 220 KV வரை உள்ள உயர் வோல்டேஜ் ஸ்விட்ச்கியர்.
- திட்டமிட்ட மிகப் பெரிய அளவுகள் வரையிலுள்ள AC மற்றும் DC மோட்டார்கள்.
- கண்ட்ரோல் கியர் மற்றும் கண்ட்ரோல் பேனல்கள்.
- மின்னியக்க, மற்றும் டீசல் மின்னியக்க டிராக்ஷன் சாதனங்கள்.
- வோல்டேஜ் டிரான்ஸ்பார்மர்கள் (மின் காந்த, மற்றும் கெபாஸிட்டர் ரகங்கள்), மற்றும் கரெண்ட் டிரான்ஸ்பார்மர்கள்—400 KV வோல்டேஜ்கள் வரைக்கும்.
- ஷண்ட் மற்றும் சேர வோல்டேஜுகளுக்கான கபாஸிட்டர்கள்.
- எலக்ட்ரோ-கெமிக்கல், மெட்டலர்ஜிகல், ட்ராக்ஷன் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு உபயோகமான பவர் ரெக்டிஃபையர்களும் தயாரிக்கப்படும்.

ஹெவி எலக்ட்ரிகல்ஸ் (இந்தியா) லிட்.,
(இந்திய அரசாங்கத்தின் நிறுவனம்)
போபால்

மக்களுக்காக சக்தி

JAISONS-2238-TAM


NEW! SUPER Surf
FOR SUPER WHITENESS
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப், வேறெந்த
சலவைப் பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும்
அகற்றிவிடும். காண்போர் பொறுமைப்படும்
கற்பனைகடந்த வெண்மை. கேட்பானேன்,
இந்தியாவின் தலைசிறந்த ரகம்:
ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்,
(வெண்மையூட்டும் சாதனம் எதுவும் சேர்க்கத் தேவையில்லை)
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லிண்டாஸ்-SU. 117-149 TM



புதுமையிலும் புதுமை!
காஞ்சீபுரம், தர்மாவரம், பனாரஸ்,
பட்டுச்சேலை & பாவாடைகளில்
எமது புதிய தயாரிப்புகள்!
நெஞ்சை அள்ளும் நேர்த்தியான புதிய நிறுவுகள்!!
• சந்தோஷ்
• பூர்ணிமா
• கோல்டன் சன்
• பெமினா
மற்றும் கட்டங்கள் கவர்ச்சிமிக்க வண்ணங்களில்
ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்
121, ராஜ வீதி கோயமுத்தூர்-1
தயாரிப்பு நிலையம்: ஸ்ரீ ராஜேஸ்வரி சில்க்ஸ் காஞ்சீபுரம்-1
சார்பு நிறுவனங்கள்:
○ கடை வீதி,
சேலம்-1
○ காந்தி ரோடு,
காஞ்சீபுரம்-1



தலைவலியா?
உடல்வலியா?
ஃப்ளுவா?
ஸலோஃபென்
வலி நிவாரண மாத்திரை
அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு
தலைவலி, ஃப்ளு, பல்வலி, உடல்வலி ஆகியவற்றிலிருந்து ஸலோஃபென் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. அது நம்பகமானது. டாக்டர்கள் கையாளும் மருத்துவ முறைப்படி ஸலோஃபென் தயாரிக்கப்படுகிறது.
SALOFEN

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam


அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!
PEARS
TRANSPARENT
SOAP
பியர்ஸ் — அசல் கிளிசரின் சோப்
பியர்ஸ் சருமக் களை ... கன்னிப் பருவக் களை
இப்போது அழகுநவீன அட்டைப் பெட்டியிலே கிடைக்கிறது
சென்னை நகரிலும், திருவனந்தபுரத்திலும், கோழிக்கோட்டிலும் மட்டுமே.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்- PS. 31 CP-140 TM.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

உலகின் மிகச்சிறந்த மணங்கவர் மலர்கள் பூத்துக்குலுங்கும் ஹாலந்திலிருந்து



ஸிக்மா பெயின்ட்ஸ்
"டச்" சிறப்புடன்
எண்ணற்ற வண்ணங்களில் வருகின்றன.

தரணியில் புகழ் வாய்ந்த தரமுள்ள பெயின்ட்களைத் தயாரிப்பதில் 250 ஆண்டு "டச்" அநுபவத்தைக் கொண்ட ஸிக்மா பெயின்ட்ஸ் அற்புத வண்ணங்களில் கிடைக்கின்றன.

ஸிக்மா வீடுகளின் தேவைகளுக்கு ஈடு இணையற்ற பெயின்டுகளை வழங்குகிறது. அவை சிக்கனமானவை. நீடித்துழைப்பவை. நீண்ட கால சிறப்பிடிமானம் கொண்டவை. அதிக பரப்பளவைப் பூசக் கூடியவை. எப்பருவத்திலும் உறுதியோடு விளங்க உத்தரவாதம் பெற்றவை.

தேவைக்கேற்ற பெயின்டை அளிக்கிறது ஸிக்மா.

ஸிக்மா பெயின்ட்ஸ் லிமிடெட்
221, டி. என். ரோட், பம்பாய் 400,001

ஸிக்மா கோட்டிங்ஸ் பிவி
(ஹாலந்து)

CHAITRA-SP-44-TAM

விநியோகஸ்தர்கள் : இண்டோகெம் பிரைவேட் லிமிடெட், 52/54, ரட்டன் பஜார், சென்னை